DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

For Your Rental Needs
iHOME Rentals
416-703-7300 | info@ihomerentals.ca

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan Sales Representative
kailain.thillai@gmail.com | homesbyraghu@gmail.com
Ragu Thillainathan Sales Representative

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
416-948-0693

CAMSONICS SECURITY SYSTEMS INC.
Rajeev Sebarasha:- 647.302. 5748
FULL HD www.camsonics.com
உங்கள் வீட்டினையும், வேலைத் தளங்களையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள உடனே அழையுங்கள்

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
Raj Perampalam
Broker
Direct: 416-897-9155
Office: 905-201-9977
என்னை அழையுங்கள்

PYRAMID GROUP
UTHAYAN 416.301.5555
RAJ 416.843.3333
KUMAR 416.453.7777

List Your Property Free
PROPERTYMAX.LK
+94772332300

27ம் ஆண்டில்...
27 years of publishing
www.uthayannews.ca
Member of National Ethnic Press and Media Council of Canada
Canada's Other Voices
UTHAYAN
உதயன்
தித்திக்கும் தமிழ் உலகில் எத்திக்கும் கதிர் வீசும் வாராந்த செய்தி இதழ்
$1.00
416-752-1524 www.uthayannews.ca
Canadian Media Circulation Audit

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Family sponsorship;
Super visa for parents and grandparents including health insurance;
Citizenship;
Permanent resident card renewal;
Kokulan Baskaran
Tax Consultant
403-2855 Markham Road Scarborough ON M1X 0C3
Tel: 647-344-6600
info@allinoneserves.ca
www.allinoneservices.ca

Residential & Commercial Real Estate Services
Bala Logendralingam
Realtor
Cell: 647-447-1562
RE/MAX COMMUNITY

உதயம் 1487 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday October 4, 2024

# தமிழ் தேசிய அரசியல் பண முதலைகளிடம் விலைபோய்விட்டதா?

## லைக்காவின் பணத்தின் மூலம் ஒரு தமிழ் தேசிய கட்சி உருவாக்கம் பெற ஆரம்பித்திருப்பதாக தகவல்



இந்த நாசகார அரசியல் சதியினால் பயன்படப் போகின்றவர்கள் மகிந்தாவும் கோட்டாபாயவும் தான் என்பதும் சில அரசியல் அவதானிகளால் உணரப்பட்டுள்ளதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. காரணம். மகிந்தா மற்றும் கோட்டாபாய ரணில் ஆகியோரின் நெருங்கிய நண்பரான லைகா அதிபர் சுபாஸ்கரன், அவர்களின் வீழ்ச்சியை தாங்கிக் கொள்ளவில்லை என்பதும் கொழும்பில் பேசப்படும் ஒன்றாக உள்ளது என அறியப்படுகிறது.

தொடர்ச்சி 22ம் பக்கம்

# இளைஞர்களை அரசியலுக்குள் உள்வாங்க வேண்டும் என்ற நோக்கில் யாழ்ப்பாணத்தில் கலந்துரையாடல்!

வடக்கிலங்கையின் பாராளுமன்ற பிரதிநிதித்துவத்திலும் ஏனைய அரசியல் செயற்பாடுகளிலும் தமிழ்த்தேசிய செயலாற்றுகையை முன்னிறுத்தி, மக்கள் பிரதிநிதிகளாக தெரியப்படுபவர்களிடத்தில் "மாற்றம்" வேண்டும் எனும் நோக்கில் கலந்துரையாடல் ஒன்று 2ம் திகதி புதன்கிழமையன்று மாலை யாழ்ப்பாணத்தில் உள்ள . தந்தை செல்வா அரங்கில் நடைபெற்றது. தமிழ்த்தேசியத்தின் மீது ஆர்வமுடைய, நேரடி அரசியலில் ஈடுபடாத மற்றும் வருகின்ற தேர்தலில் ஒரு மாற்றத்தை விரும்புகின்ற பல்வேறு தரப்பிலும் உள்ள ஆர்வலர்களால் இந்த கலந்துரையாடல் ஏற்பாடு செய்யப்பட்டது.

தொடர்ச்சி 12ம் பக்கம்

# யாழ்ப்பாணம் வைத்தியசாலைக்கு நிதி உதவிகளை வழங்கி நோயாளர்களின் இடர் தீர்க்கும் கனடா வர்த்தகர் கணேசன் சுகுமார்



தினமும் ஆயிரக்கணக்கான நோயாளர்கள் சிகிச்சைக்காகச் செல்லும் இலங்கையின் முக்கிய வைத்தியசாலையாகத் திகழும், யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு தொடர்ச்சியாக நிதி உதவிகளை வழங்கி நோயாளர்களின் தேவைகளுக்கு தீர்வு காண வழி சமைக்கும் கனடா வர்த்தகர் கணேசன் சுகுமார் அவர்களுக்கு உலகெங்குமிருந்து பாராட்டுக்களும் வாழ்த்துக்களும் குவிந்த வண்ணம் உள்ளன.

தொடர்ச்சி 11ம் பக்கம்

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
107 Dundas St. East, Mississauga, ON, L5A 1W7
905-272-1222
23 -8907 The Gore Rd. Brampton, ON L6P 2L1
905-794-4404
online service: www.remitbee.com

CAR RECONDITIONING GARAGE IN WHITEHORSE, YUKON FOR SALE OR LEASE.
Owner has it for 35 years but as he is too old (83 years) he wants to retire.
Need minimum 300,000- to run it.
For details contact
Rajah: (647) 923-8750.

கனடாவிலிருந்து கியூபா சுற்றுலா!
இலங்கையை ஒத்த கால நிலையுள்ள கியுபா தேசத்திற்கு சென்று எமது தாயகச் சூழலை அனுபவியுங்கள். டிசம்பர் மாதம் முதல்வாரத்தில் இங்கிருந்து பயணம். ஒரு வாரம் அல்லது இரண்டு வாரங்கள் தங்கலாம்.
எம்மால் வழங்கப்படும் உணவோடு உடன் ஊராடு மற்றும் உடன் மீன் மற்றும் மரக்கறி வகைகள் பழங்கள் என அனைத்தையும் சுவையாகவும் சுத்தமாகவும் உண்டு மகிழலாம்.
தொடர்புகளுக்கு:- 647 459 9839
என்னும் இலக்கத்தை அழைக்கவும்


Ontario - வில் அரசு அங்கீகாரம் பெற்ற
KANAGAAMBIKAI
Pawn Brokers
30
வருட சேவைகள்
வாடிக்கையாளர்களின் வேண்டுகோளுக்கு
இணங்க புதிய கிளை உதயம்!
கனகாம்பிகை
உங்கள் பணத்தேவைகளுக்கு குறைந்த
வட்டி வீதத்தில் தங்க நகை அடவு
நம்பிக்கை, நாணயம், உத்தரவாதம், திறமையுடன் கூடிய
ஒரே கூரையின் கீழ்
உங்கள் தங்கத்திற்கு பணம் வாங்க கனகம்பிகைக்கு வாங்க...
Pawn Bank Inc.™
Your Satisfaction is Our Success
(Brimley & Eglinton)
2613, Eglinton Ave East,
Scarborough, ON M1K 2S2
416 269 7198
(Finch & MCCowan)
1571 Sandhurst Circle
Woodside Square Mall #159D,
Scarborough - M1V1V2
416 754 7198

Canada
We acknowledge the financial support of the Government of Canada

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் — உதயன் — Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign)
JOURNALISTS: Arjune
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah,

Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON MIC 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

உதயன் கதிரோட்டம்

# கடந்த காலங்களில் ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றும் தென்னிலங்கை ஆட்சியாளரகள் மட்டுமல்ல தமிழ் அரசியல்வாதிகளும் சலுகைகளை அனுபவித்துள்ளார்கள்

இலங்கையில் கடந்த பல சகாப்தங்களை ஆட்சி பீடங்களிதன் அதிகாரக் கதிரைகளை அலங்கரித்தவர்கள் அந்த அதிகார பலத்தை மாத்திரம் காட்டவில்லை. மாறாக, முறையற்ற விதத்தில் அதிகார பலம். பண பலம் ஆகியவற்றைப் பயன்படுத்தி தம்மை தேர்ந்தெடுத்த மக்களின் கோரிக்கைகளுக்கு செவி சாய்க்காமல் அனைத்தையும் துஸ்பிரயோகம் செய்தார்கள்.

ஒரு முதலாளித்து ஆட்சி முறையில், ஆட்சியாளர்களின் பலமானது வெறுமனே அதிகாரங்கள் மாத்திரமல்ல. அவர்கள் பண பலத்தை அனுபவிக்கின்றார்கள். அதிகார பலத்தை நுகர்ந்து கொள்கின்றார். அரச வளங்களை தங்களுக்கும் தங்கள் குடும்பத்தினரும் அதற்கும் அப்பால் தங்கள் உறவினர் நண்பர்கள் என அனைத்த தரப்பினருக்கும் பங்கு போட்டுக் கொண்டுள்ளார்கள்.

இந்த விடயத்தை நாம் எமது கதிரோட்டப் பக்கத்தில் கடந்த காலங்களில் தொடச்சியாக எழுதி அழுத்தமாக எழுதி வந்துள்ளோம். தங்கள் அதிகாரங்களுக்கு ஏற்ப சலுகைகளை அதிகளவு அபகரித்து வைத்துக்கொண்டார்கள். அவற்றை விட மக்களைக் காப்பாற்றுவதற்காகவும் அவர்களுக்கு துணையாக இருப்பதற்காகவும் நாட்டைக் காப்பாற்றுவதற்காகவும் ஏற்படுததப்பட்ட படைத்தரப்பு பிரிவுகளை தங்கள் பாதுகாப்பிற்காக அதிகளவு பயன்படுத்தி வந்துள்ளார்கள் இலங்கை அரசியல்வாதிகள். முன்னாள் பிரதமர்கள். முன்னாள் -ஜனாதிபதிகள் அதற்கு முன்பிருந்த தலைவர்கள் உட்பட அனைவரினதும் மாளிகைகளில் ஏழைக்குடும்பங்களைச் சேர்ந்த சிங்களச் சிப்பாய்கள் 'காவல் நாய்களாக' அடைப்பட்டுக் கொண்டு அவர்களுக்கு பாதுகாப்பை வழங்குகின்றார்கள். யாரிடமிருந்து அவர்களைக் காப்பாற்ற இந்த படைத்தரப்பினர் அமர்த்தப்படுகின்றார்கள் என்பதைக் கூட தங்கள் கேள்விகளாக எழுப்ப மக்களோ அன்றி எதிர்க்கட்சிகளோ முன்வந்ததில்லை. ஏனென்றால் அவர்கள் ஆட்சிக்காலத்தில் கூட அதே சுகபோகங்களை அந்த அரசியல்வாதிகள் அனுபவித்து மகிழ்ந்தவர்களாக இருந்திருப்பார்கள்.

உதாரணமாக இலங்கைப் பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவராக விளங்கிய எமது தமிழ் அரசியல்வாதியான சம்பந்தன் அவர்கள் எதிர்க்கட்சித் தலைவர் பதவியை இழந்த பின்னரும் கூட முன்னர் அனுபவித்த சலுகைகள் அனைத்தையும் உயிர் துறக்கும் வரை அனுபவித்தே வந்துள்ளார். அவ்வாறான சலுகைகளை அவருக்கு வழங்கிய மகிந்தாவும் பின்னர் வந்த கோட்டாபாவும் தொடர்ந்து மக்கள் ஆதரவு இல்லாமலேயே ஜனாதிபதியான ரணில் என்பவர் கூட அனைத்து சலுகை ளையும் சம்பந்தர் அவர்களுக்கு வழங்கி வைத்தார். ஆனால் அந்த தமிழ்த் தலைவரின் பதவியினால் தமிழ் மக்கள் எந்த சுகத்தையும் அனுபவிக்கவில்லை.

அப்படியானால் நாம் சிந்தித்துப் பார்க்கவேண்டும். பெரும்பான்மை இனத்தைச் சார்ந்த முதலாளித்துவப் போக்கு கொண்டு சிங்களத் தலைவர்கள் எந்தெந்த சுக போகங்களை அனுபவித்திருப்பார்கள் என்று அறிந்து கொள்ள முயன்றிருக்க வேண்டும்.

இந்த விடயங்களையும் அதன் உள்விவகாரங்களையும் நாம் இவ்வாரத்தின் கதிரோட்டம் பகுதியில் எடுத்துக்கொண்டதற்கு காரணம். தற்போது ஆட்சியில் அமர்ந்திருக்கும் அநுர குமாரவின் அரசின் ஊடாக பல மாற்றங்கள் நிலவும் என்றும் இலங்கையிலும் புலம் பெயர்ந்த நாடுகளிலும் உள்ள எமது மக்கள் எதிர்பார்த்துக் காத்திருக்கின்றார்கள். அதை விட ஆச்சரியம் எதுவென்றால் அநுர குமாரவிற்கு வாக்களிக்காமல் ரணிலுக்கும் சஜித்திற்கும் வாக்களித்த மக்களில் பெரும்பாலானோர் மனங்களிலும் 'மாற்றங்கள்' ஏற்பட்டு வருவதாகவும் செய்திகள் வெளியாகிய வண்ணம் உள்ளன என்பதே உண்மை.!

DZ Driver Wanted
GTA and surrounding area
Call Nathan: 416-520-1324
or Email
Sentax72@gmail.com

Kitchen Jobs in Markham
Looking for part-time kitchen helper, Dishwasher and delivery.
Also needed, South Indian cook and continental breakfast
Line Cook Part Time.
2800/14th avenue and woodbine
Markham
Call AMAR: (416) 988-9518

வீடு விற்பனைக்கு
சுண்டிக்குளி மகளிர் கல்லூரிக்கு அருகர்மையில் கொழும்புத்துறை வீதி-பாண்டியன்தாழ்வில். 2 பரப்புக் காணயில் கடையுடன் சேர்த்து கட்டப்பெற்ற 3 அறைகள் கொண்ட அழகிய வீடு உடனடியாக விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு: 437 441 5699
அல்லது மின்னஞ்சல் saitheva09@gmail.com



இலங்கை செய்திகள்
Sri Lanka News

# யா/தேவரையாளி இந்து கல்லூரியின் பரிசளிப்பு விழா!



பு. கஜிந்தன்

யாழ்ப்பாணம், தேவரையாளி இந்து கல்லூரியின் பரிசளிப்பு விழா பாடசாலை அதிபர் சதானந்தன் செல்வானந்தன் தலைமையில் 27-09-2024 பி.ப 01.00 மணியளவில் பாடசாலையின் க.மு.சின்னத்தம்பி திறந்தவெளி அரங்கில் இடம் பெற்றது.

முதல் நிகழ்வாக விருந்தினர்கள் வீதியிலிருந்து மலர்மாலை அணிவிக்கப்பட்டு விழ மண்டபம் வரை அழைத்துவரப்பட்டு மங்கள சுடர்கள் பிரதம, சிறப்பு விருந்தினர்களால் ஏற்றிவைக்ப்பட்டு நிகழ்வுகள் ஆரம்பமாகின.

இதில் தெரிவு செய்யப்பட்ட சாதனையாளர்களுக்கான பரிசில்கள், மற்றும் சான்றிதழ்களை நிகழ்வின் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட பாடசாலையின் பழைய மாணவியான திருகோணமலை மாவட்ட பொது வைத்தியசாலை வைத்திய அதிகாரி சௌமியா செந்தூரன், அவரது துணைவரும், திருகோணமலை மாவட்ட பொது வைத்தியசாலையின் வைத்தியருமான இளங்கோவன் செந்தூரன் உட்பட பலரும் வழங்கிவைத்தனர்.

இதில் பிரதேச மக்கள், பழைய மாணவர்கள், பெற்றோர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், நலன்விரும்பிகள் என பலரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.







# மு.க.ஸ்டாலின் முதலில் சட்டத்தை படித்துப் பார்த்துவிட்டு பேச வேண்டும்

## என்.வி.சுப்பிரமணியம் சீற்றம்!



தொடர்ச்சியாக எமது நாட்டு கடற்படையையும் அரசாங்கத்தையும் குற்றச்சாட்டுவதை விட்டுவிட்டு, 2016 ஆம் ஆண்டு டெல்லியில் நடைபெற்ற கூட்டத்தில் எட்டப்பட்ட உடன்படிக்கையையும், சட்டத்தையும் தமிழக முதலமைச்சர் படித்துப் பார்த்துவிட்டு பேச வேண்டும் என அகில இலங்கை தொழிலாளர் சமூகங்களின் கூட்டமைப்பின் தேசிய அமைப்பாளர் என்.வி.சுப்பிரமணியம் தெரிவித்துள்ளார்.

28-09-2024 அன்றைய தினம் யாழ்ப்பாணத்தில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

சமீபத்தில் இந்திய பிரதமர் மோடி அவர்களை சந்தித்த தமிழ்நாட்டு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஒரு வேண்டுகோளை விடுத்துள்ளார். அங்கே மூன்று கோரிக்கைகளை அவர் முன் வைத்துள்ளார். தொடர்ச்சியாக இந்திய மீனவர்கள் இலங்கை கடற்படையினால் கைது செய்யப்படுகின்றார்கள், சிறைபிடிக்கப்படுகிறார்கள். அது சம்பந்தமாக கலந்துரையாடி நல்ல முடிவை எடுக்க வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

வருகின்ற மாதம் இலங்கையிலே கூட்டப்பட இருக்கின்ற இலங்கை இந்திய கூட்டுக் குழுவின் கூட்டத்தில் இதற்கான தீர்மானத்தை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார். அத்தோடு ஏழு வருடங்களுக்குள் 191 படங்கள் பிடிபட்டதாகவும் அதிகமான மீனவர்கள் சிறையில் இருப்பதாகவும் வருத்தம் தெரிவித்திருக்கின்றார்.

2016ஆம் ஆண்டு ஒப்பந்தம் வந்த பிறகு இவர்கள் அது குறித்து சரியான முறையில் நடவடிக்கை எடுக்காத காரணத்தினால், 2017 ஆம் ஆண்டு இலங்கையில் உள்ள வெளிநாட்டு மீனவர் ஒழுங்குப் பிரமாணம் என்ற சட்டத்தை நடைமுறைப்படுத்தும்படி அரசாங்கத்தை வற்புறுத்தி நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்த போது அந்த சட்டம் 2018 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் நடைமுறைக்கு வந்தது. அதிலிருந்து படக்குகள் பிடித்து பறிமுதல் செய்வது அல்லது நீதிமன்றத்திற்கு கொண்டு செல்வது என்பது தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. ஆனால் படகுகளை பிடிப்பது என்பது மந்த கதியில் இருக்கின்றது.

அப்படி ஒரு சட்டத்தை இங்கு அமலுக்கு கொண்டுவந்து, 2016 உடன்படிக்கையையும் வைத்துக்கொண்டு மீண்டும் மீண்டும் தமிழக முதலமைச்சர் இப்படியான கோரிக்கைகளை முன்வைப்பது எமக்கு மிகவும் மன வருத்தத்தையும் ஏமாற்றத்தையும் தருகின்றது.

தமிழக முதலமைச்சருக்கு நான் ஒரு கோரிக்கையை முன்வைக்கின்றேன், 2016 ஆம் ஆண்டு டெல்லியில் நடைபெற்ற பேச்சு வார்த்தையில் எடுக்கப்பட்ட உடன்படிக்கையை படித்துப் பாருங்கள். அதன் பின்னர் நீங்கள் இழுவை மடி தொழிலை செய்வதாக நிறுத்துவதா என்ற நிலைக்கு வர முடியும்.

எமது நாட்டிலே உள்ள கடற்படையையும், அரசாங்கத்தையும் குறை சொல்வதை விட்டுவிட்டு வெளிநாட்டு அமைச்சு இணையதளத்தில் இருக்கின்ற அந்த சட்டத்தை படித்துவிட்டு அதற்கு தகுந்தாற் போல் செயல்பட வேண்டுமே தவிர, தமிழ்நாட்டு மீனவர்களை காலத்திற்கு காலம் ஏமாற்றுவதை போன்ற நடவடிக்கைகளை முன்னெடுப்பது மிகவும் ஒரு கவலைக்குரிய விடயம். இதனை அறியாத தமிழ்நாட்டின் மீனவர்களும் உங்களை நம்பி ஏமாந்து கொண்டிருக்கின்றார்கள் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

SV.Varman's
MIDI MELODIES
music studio
Professional Musicians With Digital Technology

விஜயதசமி விழா

புதிய இசை வகுப்புக்கள்
எதிர்வரும் விஜயதசமி தினத்தை முன்னிட்டு
12-Oct-2024 Saturday அன்று (6 to 11) pm
புதிய இசை வகுப்புக்கள் ஆரம்பம்.

- Keyboard
- Drums
- Guitar
- Vocal (Carnatic music)



Place:
605-Middlefield,Unit-14
M1V 5B9
(Finch / Middlefield)
கனடா ஸ்ரீ ஐயப்பன் ஆலயத்திற்கு அருகில்

For further information
SV.Varman
(Music Director & Sound Engineer)
Cell- 416-579-6059

# வடமாகாண புதிய ஆளுநராக லிங்கன் வேதநாயகன் அவர்கள் உத்தியோகபூர்வமாக தமது கடமைகளை பொறுப்பேற்றார்

இலங்கை செய்திகள்
Sri Lanka News

புு. கஜிந்தன்



வடமாகாண புதிய ஆளுநராக லிங்கன் வேதநாயகன் அவர்கள் தமது உத்தியோகபூர்வமாக தமது கடமைகளை பொறுப்பேற்றார்.

குறித்த நிகழ்வு 27-09-2024 அன்று யாழ் மாவட்ட வடமாகாண அலுவலகத்தில் காலை 09.00 மணியளவில் இடம்பெற்றது.

இதனை தொடர்ந்து சமய வழிபாட்டினை பின் உத்தியோகபூர்வ கடமைகளை பொறுப்பேற்றார். இதில் சர்வமத வழிபாட்டிலும் கலந்துகொண்டார்.

இவ் நிகழ்வில் தேசிய மக்கள் சக்தியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் இராமலிங்கம் சந்திரசேகரம், வடமாகாண பிரதம செயலாளர் எல். இளங்கோவன், வடமாகாண ஆளுநரின் செயலாளர் நந்தகோபாலன், வடமாகாண மாவட்ட அரசாங்க அதிபர்கள், பிரதேச செயலாளர்கள், மாகாண அமைச்சு க்களின் செயலாளர்கள், திணைக்கள பணிப்பாளர்கள், ஆளுநர்செயலக உத்தியோகத்தர்கள் பலரும் கலந்துகொண்டனர்.







# வலி வடக்கு உயர்பாதுகாப்பு வலய வீதிகளையும் மக்கள் பாவனைக்காக திறப்பது நல்லிணக்கத்தை வலுப்படுத்தும்

## ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவுக்கு அங்கஜன் இராமநாதன் வேண்டுகோள்

வலி வடக்கு உயர்பாதுகாப்பு வலய வீதிகளையும் மக்கள் பாவனைக்காக திறப்பது நல்லிணக்கத்தை வலுப்படுத்தும் - ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவுக்கு அங்கஜன் இராமநாதன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கொழும்பில் ஜனாதிபதி மாளிகைக்கு அருகில் மூடப்பட்டிருந்த இரண்டு வீதிகளை மீண்டும் மக்கள் பாவனைக்காக திறக்கப்படுவதற்கு ஜனாதிபதி உத்தரவிட்ட நிலையில், யாழ்ப்பாணம் வலிகாமம் வடக்குப் பகுதியில் பாதுகாப்பு வலயத்தில் உள்ள 4 வீதிகளையும் திறப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவுக்கு யாழ்ப்பாண தேர்தல் மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் கடிதமூலம் கோரிக்கை விடுத்துள்ளார்.

யுத்தம் முடிவடைந்து 15 வருடங்கள் கடந்துள்ள போதிலும், பொதுமக்களின் வாழ்க்கைக்கு முக்கியமான பல வீதிகள் யாழ்ப்பாணத்தில் மூடப்பட்டுள்ளதால், இந்தப் பகுதிகளில் உள்ள மக்களின் அன்றாட நடவடிக்கைகள் மற்றும் போக்குவரத்து செயற்பாடுகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

குறிப்பாக,

1. யாழ்ப்பாணம் - பலாலி வீதி (கிழக்கு பக்கம்): வயாவிளான் மத்திய கல்லூரிக்கு அடுத்துள்ள உயர் பாதுகாப்பு வலயத்தில் எஞ்சியுள்ள வீதி இராணுவ கட்டுப்பாடுகளில் இருந்து விடுவிக்கப்பட வேண்டும். இந்த வீதி பருத்தித்துறை பொன்னாலை வீதியுடன் இணைவதுடன் உள்ளூர் போக்குவரத்திற்கு இன்றியமையாததாகும்.

2. அச்சுவேலி வயாவிளான் - தோளக்கட்டி வீதி: இந்த முக்கிய வீதி மூடப்பட்டுள்ளதால், அப்பகுதியிலுள்ள முக்கியமான அரச மற்றும் தனியார் நிறுவனங்களுக்கு செல்வதற்கு இடையூறாக உள்ளது.

3. வயாவிளான் யாழ் விமான நிலைய ஓடுபாதை பக்க வீதி: கட்டுவன் சந்தி ஊடாக இந்த வீதியை திறப்பதன் மூலம் யாழ் சர்வதேச விமான நிலையம் மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளுக்கான தொடர்பை கணிசமாக மேம்படுத்த முடியும்.

4. காங்கேசன்துறை - கீரிமலை வீதி (ஜனாதிபதி அரண்மனை வீதி): வரலாற்று மற்றும் கலாசார தளத்திற்கு இட்டுச் செல்லும் இந்த வீதி மீண்டும் திறக்கப்படுவதால், உள்ளூர் சமூகங்கள் பயனடைவதுடன், இப்பகுதியில் சுற்றுலாவை மேம்படுத்தும்.

ஆகவே யாழ்ப்பாண மக்கள் அமைதி மற்றும் இயல்பு நிலைக்கான உறுதியையும் நம்பிக்கையையும் வெளிப்படுத்தியுள்ள சூழலில், இந்த வீதிகளை மீண்டும் திறக்க அனுமதிப்பதால் நல்லிணக்கம் மற்றும் பிரதேச வளர்ச்சி ஆகியன வலுவடைவதுடன், எமது மக்களின் நீண்டகால கவலையை நிவர்த்தி செய்து, அனைத்துப் பகுதிகளிலும் சமமான வளர்ச்சிக்கான உங்கள் நிர்வாகத்தின் அர்ப்பணிப்பையும் நிரூபிக்கும்.



ஆகவே இவ்வீதிகள் மீளத் திறப்பதால் யாழ்ப்பாண மக்களுக்குப் பெரிதும் பயனளிக்கும் என்பதோடு எமது தேசத்தின் அமைதியான வளமான எதிர்காலத்துக்கும் உறுதுணையாக அமையும் என்பதால், இந்த வேண்டுகோளுக்கு உங்களது கவனம் செலுத்தப்படும் என நான் நம்புகிறேன். என்று அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.





# அநுரவிற்கு டக்ளஸ் நன்றியும் வாழ்த்துக்களும் தெரிவிப்பு

இலங்கை செய்திகள் Sri Lanka News

கடற்றொழில் அமைச்சராக செயற்பட்டபோது தன்னால் முன்மொழியப்பட்டு அமைச்சரவையில் அனுமதிக்கப்பட்ட திட்டத்தினை தொடர்ந்தும் நடைமுறைப்படுத்துவதற்கு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க அனுமதி அளித்துள்ளமைக்கு நன்றி தெரிவித்துள்ள முன்னாள் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, ஜனாதிபதிக்கு தன்னுடைய நன்றியையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துள்ளார்.

கடற்றொழிலாளர்களினால் பயன்படுத்தப்படுகின்ற எரிபொருளுக்கு, லீற்றர் ஒன்றிற்கு தலா 25 ரூபாய் மானியம் வழங்குவதற்கான டக்ளஸ் தேவானந்தாவின் யோசனைக்கு கடந்த அமைச்சரவை அனுமதி வழங்கியிருந்த போதும் தேர்தல் சட்ட ஏற்பாடுகளுக்கு அமைய குறித்த தீர்மானம் இடைநிறுத்தப்பட்டிருந்த நிலையில், அதனை தொடர்ந்தும் நடைமுறைப்படுத்த ஜனாதிபதி அநுர குமார தீர்மானித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# யாழ்ப்பாண இளம் காதலிக்கு ஏற்பட்ட வெளிநாட்டு மோகம்

## காதலித்த இளைஞன் தவறான முடிவெடுத்து உயிர்மாய்ப்பு!

யாழ்ப்பாணத்தில் காதலித்த பெண் விட்டுச் சென்றதால் இளைஞன் ஒருவர் தவறான முடிவெடுத்து உயிர்மாய்த்துள்ளார். இச்சம்பவத்தில் யாழ்ப்பாணம் கச்சேரி, நல்லூர் வீதியை சேர்ந்த திருநாவுக்கரசு வெலிற்றன் (வயது 24) என்ற இளைஞனே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில், குறித்த இளைஞனும் யுவதியும் கடந்த 4 ஆண்டுகளாக காதலித்து வந்துள்ளனர். இந்நிலையில் குறித்த பெண் வெளிநாடு செல்வதற்காக இளைஞனுடனான தொடர்பை துண்டித்துள்ளார். இதனால் மன விரக்தியடைந்த இளைஞன் 27-09-2024 அன்று காலை தவறான முடிவெடுத்து உயிர் மாய்த்துள்ளார்.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். உடற்கூற்று பரிசோதனைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

# இலங்கை தமிழரசுக் கட்சியின் மத்திய குழுவின் செயற்பாட்டுக்கு கட்சியின் பிரித்தானிய கிளை அதிருப்தி!



நடைபெற்று முடிந்த ஜனாதிபதி தேர்தலில் அரியனேந்திரன் அவர்களுக்கு ஆதரவாக செயல்பட்ட இலங்கை தமிழரசுக் கட்சியின் உறுப்பினர்கள் பலருக்கு எதிராக, இலங்கை தமிழரசு கட்சியின் மத்திய குழுவானது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க உள்ளதாக தகவல்கள் வெளியாகிய நிலையில் அதற்கு இலங்கை தமிழரசு கட்சியின் பிரித்தானிய கிளையின் தலைவர் சொ. கேதீஸ்வரன் அவர்கள் தமது அதிருப்தியை வெளியிட்டுள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், ஜனாதிபதி வேட்பாளராக களமிறங்கிய இலங்கை தமிழரசுக் கட்சியின் உறுப்பினர் பா. அரியநேந்திரன், அத்துடன் அவருக்கு ஆதரவு வழங்கிய இலங்கை தமிழரசுக் கட்சியின் ஏனைய உறுப்பினர்களான சி. சிறிதரன், திரு. சிறிநேசன், ஈ. சரவணபவன், திரு. ஜீவன் மற்றும் திரு. வேழமாலிகிதன் ஆகியோருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்கான கூட்டமானது நாளையதினம் வவுனியாவில் நடைபெற உள்ளதாக அறிய முடிகிறது.

இவ்வாறான செயற்பாடு என்பது உண்மையில் ஒரு வேதனையுடன் வேடிக்கை அளிக்கின்ற விடயமாகும். ஏனெனில் இலங்கை தமிழரசு கட்சியின் மத்திய குழு ஆதரவு வழங்கிய ஐக்கிய மக்கள் சக்தியின் வடக்கு மாகாண அமைப்பாளரான திருமதி. உமாச்சந்திரா பிரகாஷ் அவர்கள் தனது முதன்மை வாக்கினை தமிழ் பொது வேட்பாளருக்கு அளித்துவிட்டு அடுத்த விருப்பு வாக்கினை தமது கட்சித் தலைவரான சஜித் பிரேமதாச அவர்களுக்கு அழிப்பதாகவும், அதுபோல தமிழ் பேசும் மக்களை வாக்களிக்குமாறும் தெரிவித்திருந்தார்.

இது இவ்வாறு இருக்கையில் இலங்கை தமிழரசு கட்சியானது நேரடியாக முதன்மை வாக்கினை சஜித் பிரேமதாச அவர்களுக்கு வழங்குமாறு கூறியமை ஏற்றுக்கொள்ள முடியாத விடயம் ஆகும்.

இலங்கை தமிழரசு கட்சியானது எந்த ஒரு ஜனாதிபதி வேட்பாளரையும் ஆதரிக்கப் போவதில்லை என அறிவித்திருக்கலாம். அல்லது குறைந்த பட்சம், உமாசந்திரா பிரகாஷ் அவர்கள் தெரிவித்ததை போல முதல் வாக்கினை தமிழ் பொது வேட்பாளருக்கு அளித்துவிட்டு அடுத்த விருப்பு வாக்கினை சஜித் பிரேமதாசா அவர்களுக்கு அளிக்குமாறு என்றாலும் கூறியிருக்கலாம்.

இது இரண்டும் இல்லாமல் தமிழரசு கட்சியின் மத்திய குழுவில் இருக்கும் சிலரின் விருப்புகளுக்காகவும், சுயநலங்களுக்காகவும் சஜித் பிரேமதாசாவிற்கு ஆதரவாளித்தமை மிகவும் மன வருத்தத்தை தருகின்ற ஒரு விடயமாகும். தமிழ் தேசியம் சார்ந்த கட்சிகள் மற்றும் சமூக மட்ட சிவில் அமைப்புகள் ஆகியன இணைந்து தமிழ் பொது வேட்பாளர் ஒருவரை களமிறக்கியவேளை, இலங்கை தமிழரசுக் கட்சியின் மத்திய குழு எடுத்த இந்த தீர்மானமானது ஒட்டுமொத்த தமிழ் இனத்துக்கும் செய்கின்ற ஒரு வரலாற்று துரோகமாகவும். அத்துடன் குறித்த தீர்மானம் எடுக்கப்பட்ட கூட்டத்திற்கு மத்திய குழு உறுப்பினர்கள் பலருக்கு அழைப்பு கூட விடுக்கவில்லை என அறியமுடிகிறது.

மக்களுக்காகவே கட்சியே தவிர கட்சிக்காக மக்கள் இல்லை. அந்தவகையில் இலங்கை தமிழரசு கட்சியின் கிளிநொச்சி மாவட்ட கிளையானது மக்களுடன் ஒரு சந்திப்பை நடாத்தி இருந்தது. அந்த சந்திப்பில் தமிழ் பொது வேட்பாளருக்கே ஆதரவளிக்க வேண்டுமென தீர்மானிக்கப்பட்டது. இதுபோலவே திருகோணமலை மாவட்ட கிளையும், அங்குள்ள மக்களுடன் இணைந்து தமிழ் பொது வேட்பாளர் அரியனேந்திரன் அவர்களுக்கு ஆதரவை வழங்க வேண்டும் என தீர்மானித்தது. யாழ்ப்பாணம் மாவட்ட கிளையில் உள்ள பெரும்பாலானவர்களின் முடிவும், மக்களது முடிவும் அரியநேந்திரன் அவர்களுக்கு ஆதரவு அளிக்க வேண்டும் என்பதாகவே காணப்படுகின்றது.

இது இவ்வாறு இருக்கையில் மத்திய குழுவானது யாரை திருப்திப்படுத்துவதற்காக சஜித் பிரேமதாஸ அவர்களுக்கு ஆதரவு வழங்க வேண்டும் என தீர்மானம் எடுத்தது? அப்படியாயின் கட்சி மக்களுக்காக இல்லையா? கட்சியில் இருக்கும் சில உறுப்பினர்களின் தனிப்பட்ட சுயலாபங்களுக்காக கட்சி காணப்படுகின்றதா? என்ற கேள்விகள் எழுகின்றது.

இலங்கை தமிழரசு கட்சியின் மத்திய குழுவில் இருக்கும் சிலரது இவ்வாறான எதேச்சதிகாரம் மிக்க செயற்பாடுகள் கட்சிக்கு பின்னடைவை ஏற்படுத்தும் என்பதுடன் மக்கள் மத்தியில் கட்சிக்கு நல்ல அபிப்பிராயமும் காணப்படாது என்பதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை.

எனவே இலங்கை தமிழரசு கட்சியின் மத்திய கிளையில் இருக்கும் சிலர் இவ்வாறான தமது சிறுபிள்ளைத்தனமான செயற்பாடுகளை கைவிட்டு விட்டு எதிர்வரும் தேர்தலிலும், கட்சியின் ஏனைய செயற்பாடுகளிலும் அனைவருடனும் இணைந்து பணியாற்றுவதற்கு முன் வர வேண்டும் என்பதனை வலியுறுத்த விரும்புகின்றேன்.

அவ்வாறு இல்லாமல் மக்களது விருப்பத்துக்கு எதிராக செயற்படுபவர்களை மக்கள் வீட்டுக்கு அனுப்புவதற்கும் தயங்க மாட்டார்கள் என்பதனை உறுதிப்படக் கூறிக்கொள்ள விரும்புகின்றேன் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# யாழ்ப்பாண கல்லூரிக்கு பெருமை சேர்த்த மாணவர்கள்!

வெளியாகிய க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் யாழ்ப்பாண கல்லூரியின் 8 மாணவர்கள் 9ஏ சித்திகளை பெற்று சாதனை படைத்துள்ளனர். அத்துடன் இரண்டு மாணவர்கள் 7ஏ 2பி சித்திகளையும் பெற்றுள்ளனர்.

| | | |
|---|---|---|
| சு.பிரவீன் 9ஏ | ஜெ.நேருசன் 9ஏ | கு.சுவேத்தா 9ஏ |
| கை.பிரியசகி 9ஏ | றொ.தர்சினி 9ஏ | சே.யதுர்சனா 9ஏ |
| வி.துஷ்யந்தி 9ஏ | ஜெ.ஜென்ஷா 9ஏ | க.தேவியனா 7ஏ 2பி |
| பி.அபிஷாலினி 7ஏ 2பி | | |

# 2023ஆம் ஆண்டுக்கான மானிப்பாய் மகளிர் கல்லூரியின் சிறந்த பெறுபேறுகள்

| | | |
|---|---|---|
| ஆர்.நிவேதிகா 9ஏ | பி.இலக்கியா 9ஏ | எஸ்.தனுசியா 9ஏ |
| ரி.தன்ஷியா 9ஏ | ஈ.லக்சிகா 8ஏ பி | ரி.நேசரம்யா 8ஏ பி |
| ரி.தாட்சாயினி 8ஏ சி | யு.சௌமியா 8ஏ சி | என்.லவனிதா 8ஏ சி |
| பி.ஜஸ்மி 8ஏ பி | டி.தருண்ஜா 8ஏ பி | எஸ்.துர்க்கா 8ஏ பி |
| எஸ்.கஜனிகா 8ஏ பி | பி.சஹானா 8ஏ பி | எஸ்.பவதாரணி 8ஏ பி |
| எஸ்.சுவிந்தா 8ஏ சி | பி.ஆத்மிகா 7ஏ 2பி | எஸ்.சாதனா 7ஏ பி சி |
| பி.தமரா 7ஏ 2பி | கே.கஜேந்தினி 7ஏ பி சி | சி.அக்சிகா 7ஏ 2பி |
| ஆர்.சைந்தவி 7ஏ 2பி | பி.சகானா 7ஏ சி | ரி.சாதனா 7ஏ 2பி |
| ஆர்.சபிதா 7ஏ பி சி | எஸ்.ஸ்ரீஜனனி 6ஏ 2பி சி | பி.அபிராமி 6ஏ 2பி எஸ் |
| ஐ.லதுஷியா 6ஏ 2பி சி | ஆர்.கிஷானா 5ஏ 1பி 3சி | ஆர்.ஜஷலி 5ஏ 3பி 1சி |
| ஆர்.கிஷானி 5ஏ 2பி 2சி | ஆர்.பவித்திரா 5ஏ 1பி 3சி | எஸ்.சுலக்சனா 5ஏ 3பி சி |

# யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிக்கு பெருமை சேர்த்த மாணவர்கள்!

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் மாணவர்கள் இருவர் 9ஏ சித்திகளை பெற்று பாடசாலைக்கும், பெற்றோருக்கும் பெருமை சேர்த்துள்ளனர்.

அந்தவகையில் கோபிநாத் ஆகாஷ், சுஸைஸ் மொகமட் சி.்.பான் என்ற இரண்டு மாணவர்களுமே 9ஏ சித்திகளை பெற்று சாதனை படைத்துள்ளனர்.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் ஏனைய மாணவர்கள் பெற்ற சிறந்த பெறுபேறுகள் வருமாறு.

பிரான்ஸிஸ் சேவியர் - 8A B
மகேஷ்வரன் கஜப்பிரியன் - 8A B
ஜீவானந்தன் ஜதுமிதன்- 8A C
முகுந்தன் கஜரதன் - 7A B C
ஜெயசீலன் ரிதிக்ரோஷன் - 7A B C
சிவமூர்த்தி ஆகாஷ் - 7A B C
கிறிஸ்டி ஜான்சன் வசந்தன் - 7A B C
பிளட்டன் ஜூட் ஜெனிஸ்ரன் - 7A B C
ஹரீஸ்வரன் நிலக்சன் - 6A 2B C
மௌலேஸ்வரன் விதுர்ஜியன் - 6A 2B C
சுரேஷ் விபுசன் 6A B 2C
ரஜீதன் டஜுசன் - 5A 2C 25
குமாரவடிவேலு துஷான் - 5A 3B C

# சந்நிதியான் ஆச்சிரமத்தின் ஞானச்சுடர் 321 ஆவது மலர் வெளியீடும், 865,000 ரூபா பெறுமதியான உதவி வழங்கலும்!

இலங்கை செய்திகள் Sri Lanka News

பு. கஜிந்தன்



சந்நிதியான் ஆச்சிரமத்தின் மாதாந்த ஆன்மீக வெளியீடான ஞானச்சுடர் 321 ஆவது மலர் வெளியீடும், 865,000 ரூபா பெறுமதியான உதவி வழங்கல் நிகழ்வும் சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் கலாநிதி மோகன் சுவாமிகள் முன்னிலையில் சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண் பாட்டுப் பேரவையின் தலைவரும், ஓய்வு நிலை அதிபருமான ஆ.சிவநாதன் தலைமையில், கடந்த 27-09-2024 காலை 10.30 தொடக்கம் 11.45 மணி வரை இடம் பெற்றது.

இந் நிகழ்வில், வெளியீட்டுரை, மதிப்பீட்டுரையினை ஆசிரியர் துரை கனேசமூர்த்தி நிகழ்த்தினார். அதனைத் தொடர்ந்து சிறப்பு பிரதிகளும் வழங்கிவைக்கப்பட்டன.

அத்துடன் யா/ பொற்பதி றோமன் கத்தோலிக்க தமிழ்கலவன் பாடசாலையின் கோரிக்கைக்கு அமைவாக, 230,000 ரூபா பெறுமதியான நிழற்பிரதி இயந்திரமும், புலோலி தென்மேற்கு மூத்தோர் சங்கத்தின் கோரிக்கைக்கு அமைவாக, மூத்தோர் தினத்தை முன்னிட்டு 60,000 ரூபா பெறுமதியான 300 கிலோகிராம் அரிசியும், ரூபா 25,000. நிதியும் வழங்கப்பட்டதுடன் வடக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தின் யாழ் மாவட்ட அலுவலகத்தின் கோரிக்கைக்கு அமைவாக, மூத்தோர் தினத்தை முன்னிட்டு ரூபா 50,000 பெறுமதியான 25 சாரம், 25 சேலைகளும் வழங்கப்பட்டன.

முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் நிர்மாணிக்கப்பட்டு வரும் விநாயகர் ஆலய கட்டிட பணிக்காக ரூபா 500,000 நிதியும் ஆலய நிர்வாகத்தினரிடம் வழங்கப்பட்டது.

இதேவேளை திருகோணமலை பெரியகடை ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயத்தின் கட்டிட கட்டுமானப் பணிக்கான நிதியாக ரூபா 100,000 நிதி கடந்த 25-09-2024 அன்று ஆலய பரிபாலன சபையிடம் கையளிக்கப்பட்டது.

25-09-2024 அன்று புதன்கிழமை நண்பகல் 12.15 மணியளவில் ஆலயத்தில் வைத்து வழங்கப்பட்டது.

இந் நிகழ்வில் சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள், சந்நிதியான் ஆசிரம சைவ கலை பண்பாட்டு பேரவையின் நிர்வாகிகள், உறுப்பினர், சந்நிதியான் ஆச்சிரம தொண்டர்கள் அடியவர்கள் என பலரும் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.





# கோப்பாயில் சிறப்புற இடம்பெற்ற கலாசாலை நிறுவிய நாள் விழா நிகழ்வுகள்



கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் 101 ஆவது ஆண்டு நிறைவைக் குறிக்கும் கலாசாலை தின விழா 01.10.2024 செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணிக்கு கலாசாலை ரதிலக்ஷ்மி மண்டபத்தில் இடம்பெற்றது.

கலாசாலை அதிபர் சந்திரமௌலீசன் லலீசன் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் கலாசாலையின் பழைய மாணவரும் யாழ்ப்பாண வலயக்கல்விப் பணிப்பாளருமாகிய ஜமுனா ராஜசீலன் பிரதம விருந்தினராக கலந்து கொண்டார்.

கலாசாலை நிறுவுவதற்கு நிலத்தை வழங்கிய சேர் பொன் இராமநாதனை கௌரவப்படுத்தும் வகையில் இராமநாதன் நினைவுப் பேருரை இடம்பெற்ற்து.

“ஆசிரிய கல்வியியலாளர்களின் தத்துவ ஆராய்ச்சிப் பட்டங்கள் தொடர்பில் மேற்கிளம்பும் சவால்களும் அவற்றை தாண்டிப் பயணித்தலும்” என்ற பொருளில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கல்வியியல்துறை விரிவுரையாளர் இ.சர்வேஸ்வரா நினைவுப் பேருரை ஆற்றினார். கலாசாலையில் உள்ள சிவன் ஆலயப் பிரதம குரு சிவசிறீ பா. செல்வசேனக் குருக்கள் ஆசியுரை வழங்கினார்.



நிகழ்வில் கலாசாலையின் பழைய மாணவர்கள் மற்றும் முன்னாள் அதிபர், விரிவுரையாளர்களும் கலந்து சிறப்பித்தனர்.

YOU MAY BE
SURPRISED
TO KNOW

THERE ARE JUST A FEW CONDITIONS THAT ARE COVERED UNDER
CANCER
HEART DISEASE
DIABETES

THANA INSURANCE

ONLINE 24/7

100% TAX FREE MONEY

COVERAGE WILL START WITHIN 48 HOURS
PREMIUM NEVER INCREASE
COVERAGE UNTIL LIFE
NON MEDICAL LIFE INSURANCE


| AGE | 25000 | | 50000 | |
| --- | --- | --- | --- | --- |
| | M | F | M | F |
| 60 | $79 | $69 | $154 | $132 |
| 65 | $103 | $89 | $202 | $173 |
| 70 | $141 | $116 | $276 | $227 |



Thana Manickavasagar
Insurance Broker

ASK THANA Cell : 416. 728. 5722 | Office: 416.519.3896

Address : 80 Nashdene Road, unit D218, Scarborough, ON, M1V 5E4



# வடக்கு, கிழக்கில் பறிபோகப் போகும் "தமிழ் தேசிய" பாராளுமன்ற ஆசனங்கள்

**"வடக்கு, கிழக்கில் 28 பாராளுமன்ற ஆசனங்கள் உள்ள நிலையில் 2004 ஆம் ஆண்டு 22 ஆசனங்கள், 2010 ஆம் ஆண்டு 14 ஆசனங்கள், 2015 ஆம் ஆண்டு 16 ஆசனங்கள் எனக் கைப்பற்றிய தமிழ் தேசியக் கட்சிகளின் அணியான தமிழ் தேசியக்கூட்டமைப்பு 2020 ஆம் ஆண்டு 10 ஆசனங்களை மட்டும் கைப்பற்றி பெரு வீழ்ச்சியை சந்தித்தது. இவ்வாறான நிலையில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு பிளவடைந்து தனித்தனியாக களமிறங்கவுள்ள நிலையிலும் யாழ் மாவட்டத்திற்கான ஒரு பாராளுமன்ற ஆசனம் குறைக்கப்பட்டுள்ள நிலையிலும் எதிர்வரும் நவம்பர் 14 ஆம் திகதி நடக்கவுள்ள பாராளுமன்றத்தேர்தலில் தமிழ் தேசியக் கட்சிகள் இன்னும் குறைவான ஆசனங்களைப் பெற்று தமிழ் தேசிய அரசியலை மேலும் பலவீனப்படுத்தும் அரசியல் கள சூழலே உள்ளது"**

**- கே. பாலா**

இலங்கையில் ஜனாதிபதித் தேர்தல் நடைபெற்று ஜனாதிபதியாக ஜே.வி.பி. மற்றும் தேசிய மக்கள் சக்தித் தலைவர் அநுரகுமார திசாநாயக்க "மக்கள் புரட்சி" மூலம் தெரிவு செய்யப்பட்ட நிலையில் நாட்டின் 9 ஆவது பாராளுமன்றம் கடந்த 24 ஆம் திகதி நள்ளிரவு கலைக்கப்பட்டதுடன் 10 ஆவது பாராளுமன்றத்திற்கான தேர்தல் எதிர்வரும் நவம்பர் 14 ஆம் திகதி நடத்தப்படுமென புதிய ஜனாதிபதியினால் அறிவிக்கப்பட்டுள்ளதால் இந்த பாராளுமன்றத் தேர்தலை எதிர்கொள்ள 9 ஆவது பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்திய எம்.பி.க்கள், முன்னாள் எம்.பி.க்கள், மற்றும் தாமும் ஒரு எம்.பி.யாகி விட வேண்டுமென விரும்புவோரும் தேர்தல் களத்தில் இறங்கத் தயாராகி வருகின்றனர்.

இந்த தேர்தலை எதிர்கொள்ள சிங்கள, முஸ்லிம், மலையகக் கட்சிகள் தம்மைத் தயார்படுத்தி வருவதுடன் தமது வெற்றி வாய்ப்புக்களை அதிகரிப்பதற்கான, அதிக ஆசனங்களை பெறுவதற்கான வியூகங்களையும் வகுத்து, பரந்துபட்ட கூட்டணிகளையும் அமைத்து வருகின்றன. பாராளுமன்றத்தேர்தலில் தமது மக்களின் பிரதிநிதித்துவங்களை அதிகரித்துக்கொள்ள, மாவட்ட ஆசனங்களை கைப்பற்ற வேண்டுமென்பதில் ஒவ்வொரு கட்சியும் "தீயாய்" வேலை செய்து கொண்டிருக்கையில் தமிழ் தேசியக்கட்சிகள் வழக்கம் போலவே பிளவுபட்டுப்போய் "நீயா நானா" போட்டியிலுள்ள நிலையில் நிலைமையை இன்னும் மோசமாக்கும் வகையில் இம்முறை பாராளுமன்றத் தேர்தலில் யாழ். மாவட்டம் ஒரு ஆசனத்தை இழப்பதாக தேர்தல் ஆணைக்குழுவும் அறிவித்துள்ளது.

இலங்கையில் பாராளுமன்றத்தில் தமிழர் பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்த தமிழர்கள் தேசிய இனமாக கிழக்கு மாகாணத்தில் அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டங்களிலும் வடக்கு மாகாணத்தில் முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், கிளிநொச்சி, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களிலும் வாழ்கின்றனர். இதில் அம்பாறை மாவட்டத்தில் 7 பாராளுமன்ற பிரதிநிதித்துவங்களும் மட்டக்களப்பு மாவட்டத்தில் 5 பாராளுமன்ற பிரதிநிதித்துவங்களும் திருகோணமலை மாவட்டத்தில் 4 பாராளுமன்ற பிரதிநிதித்துவங்களும் என 16 பாராளுமன்ற பிரதிநிதித்துவங்கள் உள்ளன.

வடக்கு மாகாணத்தில் முல்லைத்தீவு வவுனியா மற்றும் மன்னார் அடங்கிய வன்னி தேர்தல் மாவட்டத்தில் 6 பாராளுமன்ற பிரதிநிதித்துவங்களும் கிளிநொச்சி, யாழ்ப்பாணம் அடங்கிய யாழ்ப்பாண தேர்தல் மாவட்டத்தில் 6 பாராளுமன்ற பிரதிநிதித்துவங்களுமாக 12 பாராளுமன்ற பிரதிநிதித்துவங்கள் உள்ளன. ஒட்டு மொத்தமாக வடக்கு,கிழக்கு மாகாணத்தில் 28 பாராளுமன்ற பிரதிநிதித்துவங்கள் உள்ளன.

இலங்கை பாராளுமன்ற தேர்தல்களில் தமிழ் தேசிய கட்சிகள் ஓரணியாக "தமிழ் தேசியக்கூட்டமைப்பு" என்ற பெயரில் களமிறங்கிய முதல் தேர்தலான 2004 ஆம் ஆண்டுக்கான பாராளுமன்றத்தேர்தலில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் 633,654 வாக்குகளைப் பெற்று நேரடி பாராளுமன்ற ஆசனங்களாக 20 ஆசனங்களையும் தேசியப்பட்டியல் ஆசனங்களாக 2 ஆசனங்களையும் பெற்று 22 ஆசனங்களுடன் பலமான அணியாக "தமிழ் தேசியக்கூட்டமைப்பு" என்ற ஒற்றுமையுடன் தமிழ் தேசிய கட்சிகள் பாராளுமன்றம் சென்றன.

இதில் வடக்கில் யாழ் மாவட்டத்தில் இருந்த 9 ஆசனங்களில் தமிழ் தேசியக்கூட்டமைப்பு 8 ஆசனங்களையும் ஈ.பி.டி.பி ஒரு ஆசனத்தையும் கைப்பற்றியிருந்தன, வன்னி மாவட்டத்தில் இருந்த 6 ஆசனங்களில் தமிழ் தேசியக்கூட்டமைப்பு 5 ஆசனங்களையும் ஐ.தே.க. ஒரு ஆசனத்தையும் கைப்பற்றியது. இதன்மூலம் வடக்கு மாகாணத்தில் இருந்த 15 ஆசனங்களில் 13 ஆசனங்களை தமிழ் தேசியக்கூட்டமைப்பு கைப்பற்றியிருந்தது.

கிழக்கில் மட்டக்களப்பு மாவட்டத்தில் இருந்த 5 ஆசனங்களில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு 4 ஆசனங்களையும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் 1 ஆசனத்தையும் திகாமடுல்ல அதாவது அம்பாறை மாவட்டத்தில் இருந்த 7 ஆசனங்களில் தமிழ் தேசியக்கூட்டமைப்பு 1 ஆசனத்தையும் கைப்பற்றியது. திருகோணமலை மாவட்டத்தில் இருந்த 4 ஆசனங்களில் தமிழ் தேசியக்கூட்டமைப்பு 2 ஆசனங்களை கைப்பற்றியது. இதன்மூலம் கிழக்கு மாகாணத்தில் இருந்த 16 ஆசனங்களில் 7 ஆசனங்களை தமிழ் தேசியக்கூட்டமைப்பு கைப்பற்றியிருந்தது. இவ்விரு மாகாணங்களிலும் பெற்ற வாக்குகளின் அடிப்படையில் இரு தேசியப்பட்டியல் ஆசனங்களும் கிடைத்ததால் மொத்தமாக 22 பாராளுமன்ற ஆசனகளை தமிழ் தேசிய கூட்டமைப்பு கைப்பற்றியது.

இதற்கு பின்னர் நடந்த 2010 ஆம் ஆண்டு பாராளுமன்றத்தேர்தலில் தமிழ்தேசியக்கூட்டமைப்பு 13 நேரடி ஆசனங்களும் ஒரு தேசியப்பட்டியல் ஆசனமுமாக 14 ஆசனங்களைப் பெற்று வீழ்ச்சியை சந்தித்தது. இதில் யாழ்மாவட்டத்தில் இருந்த 9 ஆசனங்களில் 5 ஆசனங்களையும் வன்னிமாவட்டத்தில் இருந்த 6 ஆசனங்களில் 3 ஆசனங்களையும் மட்டக்களப்பு மாவட்டத்தில் இருந்த 5 ஆசனங்களில் 3 ஆசனங்களையும் அம்பாறை மாவட்டத்தில் இருந்த 7 ஆசனங்களில் 1ஆசனத்தையும் திருகோணமலை மாவட்டத்தில் இருந்த 4 ஆசனங்களில் 1 ஆசனத்தையும் கைப்பற்றியது.

இதற்கு பின்னர் நடந்த 2015 ஆம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தலில் தமிழ்தேசியக்கூட்டமைப்பு 14 நேரடி ஆசனங்களும் 2 தேசியப்பட்டியல் ஆசனங்களுமாக 16 ஆசனங்களைப் பெற்றது. இதில் யாழ்மாவட்டத்தில் இருந்த 7 ஆசனங்களில் 5 ஆசனங்களையும் வன்னிமாவட்டத்தில் இருந்த 6 ஆசனங்களில் 4 ஆசனங்களையும் மட்டக்களப்பு மாவட்டத்தில் இருந்த 5 ஆசனங்களில் 3 ஆசனங்களையும் அம்பாறை மாவட்டத்தில் இருந்த 7 ஆசனங்களில் 1 ஆசனத்தையும் திருகோணமலை மாவட்டத்தில் இருந்த 4 ஆசனங்களில் 1 ஆசனத்தையும் கைப்பற்றியது.

இதற்கு பின்னர் நடந்த 2020 ஆம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தலில் தமிழ்தேசியக்கூட்டமைப்பு 9 நேரடி ஆசனங்களும் 1 தேசியப்பட்டியல் ஆசனமுமாக 10 ஆசனங்களைப் பெற்று பெரு வீழ்ச்சியை சந்தித்தது. இதில் யாழ்மாவட்டத்தில் இருந்த 7 ஆசனங்களில் 3 ஆசனங்களை தமிழ் தேசியக்கூட்டமைப்பும் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் 1 ஆசனத்தையும் ஈ.பி.டி.பி. ஒரு ஆசனத்தையும் தமிழ் மக்கள் தேசிய கூட்டணி ஒரு ஆசனத்தையும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி ஒரு ஆசனத்தையும் பெற்றன. வன்னிமாவட்டத்தில் இருந்த 6 ஆசனங்களில் 3 ஆசனங்களையும் மட்டக்களப்பு மாவட்டத்தில் இருந்த 5 ஆசனங்களில் 2 ஆசனங்களையும் அம்பாறை மாவட்டத்தில் இருந்த 7 ஆசனங்களில் எந்தவொரு ஆசனத்தையும் பெறவில்லை திருகோணமலை மாவட்டத்தில் இருந்த 4 ஆசனங்களில் 1 ஆசனத்தையும் கைப்பற்றியது.

யாழ் மாவட்டம் முன்னர் 11 பாராளுமன்ற ஆசனங்களை கொண்டிருந்தது. ஆனால் வாக்காளர்களின் எண்ணிக்கை குறைவடைந்ததால் அது பின்னர் 9 ஆனது. அதன் பின்னர் 7 ஆனது. தற்போது பாராளுமன்ற தேர்தல் நடைபெறவுள்ள நிலையில் அந்த ஆசனங்களின் எண்ணிக்கை 6 ஆக குறைந்துள்ளமை தமிழ் கட்சிகளையும் வேட்பாளர்களையும் பாரிய நெருக்கடிக்குள் தள்ளியுள்ளதுடன் ஒரு வேட்பாளர் வெற்றிபெற பெற்றுக்கொள்ள வேண்டிய வாக்குகளின் எண்ணிக்கையையும் கணிசமாக அதிகரித்து விட்டுள்ளது. இதனால் தமிழ் கட்சிகளும் அதன் வேட்பாளர்களும் தமது வெற்றியை உறுதிப்படுத்திக்கொள்ள மிகப்பெரும் பிரசாரங்களையும் பிரயத்தனங்களையும் செய்ய வேண்டியுள்ளதுடன் தமிழ் கட்சிகளுக்கிடையிலும் கடும் போட்டிகளும் ஏற்பட்டுள்ளன.

வாக்காளர் எண்ணிக்கை குறைவடைந்ததால் வடக்கில் யாழ் தேர்தல் மாவட்டம் ஒரு பாராளுமன்ற ஆசனத்தை இழந்துள்ள நிலையில் கிழக்கில் அம்பாறை மற்றும் திருகோணமலை மாவட்டங்களிலும் தமிழர் பிரதிநிதித்துவம் குதிரைக் கொம்பாகவேயுள்ளது. அம்பாறை மாவட்டத்தில் கடந்த முறை தமிழர் பிரதிநிதித்துவ ஆசனம் கிடைக்கவில்லை. திருகோணமலையில் இரா. சம்பந்தன் ஒரு பாராளுமன்ற ஆசனத்தை தக்கவைத்து வந்த நிலையில் அவரின் மரணத்தினால் அந்த ஆசனமும் கேள்விக்குறியாகியுள்ளது.

இவ்வாறு வடக்கு, கிழக்கில் தமிழ் பிரதிநிதித்துவ ஆசனங்கள் குறைவடையும் ஆபத்து ஏற்பட்டுள்ள நிலையில் அதனைப்பற்றி கொஞ்சம் கூட அக்கறையோ கவலையோ, அதன் விளைவாக ஏற்படப்போகும் ஆபத்துக்களை அறிந்து கொள்ளும் அறிவோ இன்றி வழக்கம் போலவே ஒற்றுமை விடயத்தில் "சபிக்கப்பட்ட", கழுத்தறுப்பு அரசியல், குழிபறிப்பு அரசியலில் யாருமே நிகராக நிற்க முடியாத "தமிழ் தேசியக் கட்சிகள்" நீயா, நானா" தலைக்கனப் போட்டியிலும், வீடா, குத்துவிளக்கா, சங்கா என்ற தேர்தல் சின்ன கயிறுமுடிப்புக்களிலும் ஈடுபட்டு தமக்குள் முட்டி மோதி தமிழர் அரசியலை பலவீனப்படுத்தி வருகின்றன.

அது மட்டுமன்றி தமிழ் தேசியக்கட்சிகளின் தாய்க்கட்சி எனதம்மைத்தாமே அழைத்துக்கொள்ளும் இலங்கை தமிழரசுக்கட்சிக்குள் "தாழம்பூ நாகம்" போன்று இருக்கும் ஒரு சில படித்த மேதாவிகள் அந்தக்கட்சியை அழித்தே தீருவோம் எனக் கங்கணம் கட்டி தமது அல்லக்கைகளையும் செம்புதூக்கிகளையும் வேட்பாளர்களாக நிறுத்துவதற்காக கட்சிக்குள் தமிழ் தேசிய உணர்வுடன் செயற்படுவோரை, தமது தலைவர் பதவிக் கனவுக்கு தடையாக இருப்போரை கட்சியை விட்டு வெளியேற்றும் "உள்வீட்டு" சதியை தீவிரமாக முன்னெடுத்து வருகின்றனர்.

மறுபுறமாக இலங்கை தமிழரசுக்கட்சியின் பேச்சாளரான எம்.ஏ.சுமந்திரன், தமிழ்த்தேசிய கூட்டமைப்பில் அங்கம் வகித்து வெவ்வேறு காலகட்டங்களில் விலகிச்சென்ற கட்சிகளை மீண்டும் தங்களுடன் இணைந்து தேர்தலுக்கு முகம்கொடுக்கவேண்டும் என்று அழைப்பு விடுத்துள்ளார். தமிழரசுக்கட்சியின் பெயரிலும் அதன் சின்னமான வீட்டிலும் தான் நாங்கள் கடந்தகாலங்களில் தேர்தலில் போட்டியிட்டிருந்தோம். அவ்வாறே இந்த தேர்தலிலும் போட்டியிடுவதற்கு தீர்மானித்திருக்கின்றோம். அந்த அழைப்பை ஏற்று வந்தால் மிகவிரைவாக நாங்கள் பேச்சுவார்த்தை மூலம் வேட்பாளர்களை நிறுத்தும் விடயங்களை இணைந்து ஆராய்ந்து நடவடிக்கை எடுப்போம்.

(தொடர்ச்சி 9 பக்கம்)

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# தமிழரசுக் கட்சி கொழும்பில் போட்டியிடுவது தொடர்பில் பரிசீலிப்பு

## மத்தியகுழு உறுப்பினர் சட்டத்தரணி கே.வி.தவராசா தெரிவிப்பு!

தமிழ் தேசியத்தின்பால் பயணிக்கின்ற கட்சிகள் ஒன்றிணைந்து மீண்டும் தமிழ் தேசியக் கூட்டமைப்பாக பாராளுமன்றத் தேர்தலை எதிர்கொள்ள வேண்டும் என்ற கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ள நிலையில் தமிழரசு கட்சியை கொழும்பில் போட்டியிடுவது தொடர்பிலும் பரிசீலனையில் உள்ளதாக தமிழரசு கட்சியின் மத்திய குழு உறுப்பினரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான கே.வி.தவராசா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், கடந்த சனிக்கிழமை 28ம் திகதி வவுனியாவில் தமிழரசு கட்சியின் மத்திய குழு கூட்டம் இடம்பெற்றது.

குறித்த கூட்டத்தில் நடைபெற உளள பாராளுமன்றத் தேர்தலில் எவ்வாறு போட்டியிடுவது வேட்பாளர்களை தயார் படுத்துவது தொடர்பான கலந்துரையாடல் இடம்பெற்றது.

சென்ற பாராளுமன்றத்தில் தமிழ் தேசியக் கூட்டமைப்பாக பயணித்ததைப் போன்று இம்முறையும் தமிழ் தேசியக் கூட்டமைப்பாக இணைந்து தேர்தலில் போட்டியிடும் கோரிக்கையை சக தமிழ் கட்சிகளிடம் முன்வைக்கப்பட்டது.



தமிழ் தேசியக் கூட்டமைப்பாக போட்டியிடுவதற்கு சக தமிழ் கட்சிகள் இணங்காவிட்டால் வேறு வழியில்லை தமிழரசு கட்சி தனித்துப் போட்டியிட வேண்டிய நிலைக்கு தள்ளப்படும்.

அவ்வாறான ஒரு நிலை ஏற்பட்டால் கொழும்பிலும் தமிழரசு கட்சியை போட்டியிட வேண்டும் என்ற கோரிக்கையை நான் முன் வைத்தேன்.

சக தமிழ் கட்சிகளிடம் இருந்து கிடைக்கப்பெறும் பதில்கள் அடிப்படையில் எதிர்வரும் மூன்றாம் திகதி இடம் பெறவுள்ள தமிழரசுக் கூட்டத்தில் இறுதி முடிவு எடுக்கப்படலாம் என அவர் மேலும் தெரிவித்தார்.

# யாழ்ப்பாண மாவட்ட அஹதிய்யா பாடசாலை மாணவர்களுக்கான வழிகாட்டல் கருத்தரங்கு

யாழ்ப்பாண மாவட்ட அஹதிய்யா பாடசாலை மாணவர்களுக்கான வழிகாட்டல் கருத்தரங்கு நிகழ்வானது யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் அவர்களின் தலைமையில் 01-10-2024 அன்றைய தினம் காலை 8.30 மணிக்கு மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.



இவ் பயிற்சிக் கருத்தரங்கில் கருத்து தெரிவித்த அரசாங்க அதிபர் எங்களுடைய மாவட்டத்தினை பொறுத்தவரை பல மதங்களைச் சேர்ந்த பல்லினமக்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்ற மாவட்டமாக காணப்படுகின்றது.

இஸ்லாமியர்கள் அஹதிய்யா பாடசாலைகள் மூலமாகவும் இந்துக்கள் அறநெறி பாடசாலைகள் ஊடாகவும் அதேபோன்று பௌத்தர்களும் கிறிஸ்தவவர்களும் தங்களுடைய மார்க்க நெறிமுறைகளுக்கூடாக மாணவர்களை ஆற்றுப்படுத்துகின்ற அல்லது நல்வழிப்படுத்துகின்ற இத்தகைய செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றனர் எனவும் இத்தகைய அஹதிய்யா பாடசாலைகள் யாழ்ப்பாண மாவட்டத்தில் இயங்கி வருவது மகிழ்ச்சியளிக்கின்றது என தெரிவித்தார்.

மேலும் இன்றைய சூழலில் பல்வேறு பிரச்சினைகளுக்கு மத்தியில் இளையோர் சமுதாயமும் இளைஞர்களும் முன்னேறவேண்டிய தேவைப்பாடுகள் உள்ளதெனவும் அச்சுறுத்துகின்ற பல விடயங்கள் உங்கள் பிள்ளைகளை சூழ்ந்திருக்கின்ற போதிலும் பிள்ளைகளை நல்லொழுக்கம் சார்ந்து வளர்த்தெடுப்பதற்கும் ஆரோக்கியமான சமுதாயத்தினை உருவாக்கிக் கொள்வதற்கும் இத்தகைய அஹதிய்யா போன்ற செயற்பாடுகள் உறுதுணையாக இருப்பதாகவும் இத்தகைய செயற்பாடுகளினை மேற்கொள்பவர்களுக்கு தனது நன்றியினையும் வாழ்த்துக்களையும் தெரிவித்திருந்தார்.

அதனைத் தொடர்ந்து அஹதிய்யா பாடசாலையின் முக்கியத்துவங்கள், போதைப்பொருள் பாவனையினால் ஏற்படும் விளைவுகள் பற்றிய தெளிவூட்டல்களும் மாணவர்களுக்கு வழங்கப்பட்டிருந்தன.

இக் கருத்தமர்வில் முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பிரிவு பொறுப்பாளர் திரு. A.S.M.ஜாவித், இக்ர.:. அஹதிய்யா பாடசாலையின் தலைவர். B.A.S.சுப்யான் மௌலவி, சமுதாய சீர்திருத்த அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி. V.தர்மினி (நீதவான் நீதிமன்ற வளாகம் - யாழ்ப்பாணம்), முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு. S.M.நிஸ்தாக், முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு. M.இல்ஹாம், முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு. M.ஹபீல், இக்ர.:. அஹதிய்யா பாடசாலையில் கல்வி கற்கும் கதீஜா மகா வித்யாலயம் மற்றும் ஒஸ்மானிய்யா கல்லூரியை சேர்ந்த 50 மாணவர்கள், ஆசிரியர்கள், பள்ளிவாசல் நிர்வாக சபை உறுப்பினர்கள் மற்றும் பெற்றோர்கள் பலர் கலந்துகொண்டார்கள்.




*(8 பக்கம் தொடர்ச்சி)*

---

# *வடக்கு, கிழக்கில் பறிபோகப் போகும் "தமிழ் தேசிய" பாராளுமன்ற ஆசனங்கள்*

--------------------- கே. பாலா ---------------------

அடுத்துவரும் ஒருசில நாட்களில் அவர்களின் பதிலை நாங்கள் எதிர்பார்க்கின்றோம். அவ்வாறு இணங்கி வராவிட்டால் தமிழரசுக்கட்சி தனித்து போட்டியிடும் என்று அறிவித்துள்ளார்.

ஆனால் இந்த அழைப்பை உடனடியாகவே ரெலோ தலைவரான செல்வம் அடைக்கலநாதன், புளொட் தலைவரான சித்தார்த்ததன். ஈ.பி.ஆர்.எல்.எப். தலைவரான சுரேஷ் பிரேமச்சந்திரன் ஆகியோர் நிராகரித்துள்ளனர், அத்துடன் தமிழ் தேசியக்கூட்டமைப்பிலிருந்து வெளியேறி ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி என்ற பெயரில் இயங்கும் இவர்களின் சின்னமாக "குத்து விளக்கு" இருந்தாலும் அண்மையில் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பொது வேட்பாளராக களமிறங்கிய அரியநேத்திரனின் தேர்தல் சின்னமான "சங்கு" தமிழ் மக்கள் மத்தியில் வரவேற்பு பெற்றுள்ளதால் அந்த சின்னத்தில் பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிட முயற்சிகளை மேற்கொண்டுள்ளனர்.

இதனால் நடைபெறவுள்ள பாராளுமன்றத் தேர்தலில் இலங்கைத் தமிழரசுக்கட்சியும் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியும் தனித்தனியே களமிறங்கவுள்ளதாலும் அதேபோன்று கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் தமிழ் தேசிய மக்கள் முன்னணி, விக்னேஸ்வரன் தலைமையிலான தமிழ் மக்கள் கூட்டணி, டக்ளஸ் தேவனாநந்தா தலைமையிலான ஈ.பி.டி.பி, விஜயகலா மகேஸ்வரனை பிரதம வேட்பாளராக கொண்டு ஐ.தே.க.வும் களமிறங்கவுள்ள நிலையில் அங்கஜன் இராமநாதன் ஐக்கிய மக்கள் சக்தியில் களமிறங்க பேச்சுக்கள் இடம் பெற்றுவருகின்றன. அதேவேளை இம்முறை வடக்கில் அநுரகுமார தலைமையிலான தேசிய மக்கள் சக்தியும் ஒரு ஆசனத்தை கைப்பற்றும் என எதிர்வு கூறப்படுகின்றது.

எனவே நடைபெறவுள்ள பாராளுமன்றத் தேர்தலில் தமிழ் தேசியக் கட்சிகளுக்கிடையிலான பிளவுகள், யாழ் மாவட்டத்திற்கான ஒரு பாராளுமன்ற ஆசனம் குறைக்கப்பட்டமை, அதனால் ஒரு வேட்பாளர் வெற்றி பெற பெற்றுக்கொள்ள வேண்டிய வாக்குகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளமை, தமிழ் மக்களிடையில் தேசிய மக்கள் சக்தியின் எழுச்சி, பிரபலமானவர்கள் தேர்தலில் போட்டியிடாமல் ஒதுங்கியமை, வெற்றிபெறக்கூடியவர்களை வெளியேற்றி அல்லக்கைகளை வேட்பாளர்களாக நியமிக்க எடுக்கப்படும் முயற்சிகள். இரா.சம்பந்தனின் மறைவு போன்ற அரசியல் கள சூழலினால் வடக்கு, கிழக்கில் தமிழ்ப் பாராளுமன்ற ஆசனங்கள் பறிபோய் தமிழ் தேசிய இனம் பலவீனப்பட்டுப் போவதற்கான வாய்ப்புக்களே அதிகம் உள்ளன.

# தற்போதைய ஜனாதிபதியின் ஊழலை அகற்றும் நடவடிக்கைகள் போல் வடக்கு கிழக்கில் ஊழல் அற்ற அரசியலை முன்னெடுக்க நாங்கள் போராடுவோம்

இலங்கை செய்திகள்
Sri Lanka News
மன்னார் நிருபர்

## புனர்வாழ்வளிக்கப்பட்ட தமிழ் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவர் கே.இன்பராசா




- எஸ்.ஆர்.லெம்பேட் (28-09-2024)

எதிர் வரும் பாராளுமன்ற பொதுத் தேர்தலில் வடக்குகிழக்கில் உள்ள முன்னால் போராளிகள் இசிவில் அமைப்புக்கள், ஆதரவாளர்கள் மற்றும் புலம்த் பெயர் மக்களின் அனுசரணையுடன், புனர்வாழ்வளிக்கப்பட்ட தமிழ் விடுதலைப்புளிகள் கட்சி சுயேட்சையாக வடக்கு கிழக்கில் போட்டியிட உள்ளதாக அக்கட்சியின் தலைவர் கே.இன்பராசா தெரிவித்தார்.

மன்னாரில் 28-09-2024 அன்றைய தினம் சனிக்கிழமை மதியம் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இடம்பெற்ற ஜனாதிபதி தேர்தலின் போது அதிகூடிய சிங்கள மக்களின் வாக்குகளால் வெற்றி பெற்று ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டுள்ள அநுரகுமார திஸாநாயக்க அவர்களுக்கு புனர்வாழ்வளிக்கப்பட்ட தமிழ் விடுதலைப் புலிகள் கட்சியின் சார்பாக வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறோம்.

இந்த நிலையில் எதிர்வரும் பாராளுமன்ற தேர்தலில் வடக்கு கிழக்கில் உள்ள 8 மாவட்டங்களில் புனர்வாழ்வளிக்கப்பட்ட தமிழ் விடுதலைப் புலிகள் கட்சியினர் சுயேட்சையாக போட்டியிட உள்ளோம்.

தமிழ் மக்கள் தமது பூரண ஒத்துழைப்பை வழங்க வேண்டும். குறித்த தேர்தல் குறித்து நாங்கள் உங்களை தேடி வருவோம். எங்களுக்கு பூரண ஆதரவை வழங்க வேண்டும். வடக்கு கிழக்கு மக்களுக்காக நாங்கள் எங்கள் உயிரையே அர்ப்பணித்தோம்.

அங்கவீனமாக்கப்பட்டுள்ளோம். அனாதரவாக்கப்பட்டுள்ளோம். எனவே முன்னாள் விடுதலைப் புலிகள் ஆகிய நாங்கள் இத்தேர்தலில் களமிறங்க உள்ளோம்.

தற்போதைய ஜனாதிபதியின் ஊழல் அற்ற நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை போல் வடக்கு கிழக்கில் ஊழல் அற்ற அரசியலை முன்னெடுக்க நாங்கள் போராடுவோம்.

மன்னார் மாவட்ட முன்னாள் விடுதலைப் புலிகளும் எங்களுடன் இணைந்து உள்ளனர். எனவே தமிழ் மக்களும் எங்களுக்கு பூரண ஒத்துழைப்பை வழங்க வேண்டும். என அவர் மேலும் தெரிவித்தார்.

# மன்னார் — தலைமன்னார் வீதி, எழுத்தூர் சந்திக்யில் புதிதாக திறக்கப்பட்டுள்ள மதுபான சாலையை இட மாற்றக் கோரி மக்கள் போராட்டம்



- எஸ்.ஆர்.லெம்பேட் (30-09-2024)

மன்னார் - தலைமன்னார் பிரதான வீதி, எழுத்தூர் சந்திக்கு அருகாமையில் புதிதாக திறக்கப்பட்டுள்ள மதுபான சாலையை உடனடியாக இட மாற்றக் கோரி 30-09-2024 திங்கட்கிழமை காலை 9 மணி முதல் ஆண்கள், பெண்கள், வயோதிபர்கள் என பல நூற்றுக்கணக்கான மக்கள் ஒன்றுகூடி போராட்டத்தில் ஈடுபட்டனர்.

குறித்த போராட்டம் புதிதாக திறக்கப்பட்ட குறித்த மதுபானசாலைக்கு முன் இடம் பெற்றது.

குறித்த மதுபானசாலை அமைந்துள்ள பகுதியில் மக்களின் குடியேற்றம் ,இளைஞர் பயிற்சி நிலையம்,காமன்ஸ்,உற்பட பள்ளிவாசல் ஆகியவை காணப்படுகின்ற நிலையில் மக்களின் எதிர்ப்பையும் மீறி குறித்த மது விற்பனை நிலையம் அமைக்கப்பட்டு திறக்கப்பட்டுள்ளதாக மக்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

கடந்த மாதம் குறித்த பகுதியை சேர்ந்த மக்கள் மன்னார் மாவட்டச் செயலகத்திற்கு முன் ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெமுத்ததோடு, குறித்த மதுபான சாலையை திறக்க அனுமதிக்க வேண்டாம் என கோரி மன்னார் மாவட்ட அரசாங்க அதிபரிடம் மகஜர் கை அளித்ததாகவும், தாங்கள் தொடர்ந்து பல்வேறு எதிர்ப்பை வெளிப்படுத்தி வந்த நிலையிலும் குறித்த மது விற்பனை நிலையம் கடந்த வாரம் திறக்கப்பட்டதாக மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.



பிரேத பெட்டியுடன் குறித்த பகுதிக்கு வந்த நூற்றுக்கணக்கான மக்கள் பல்வேறு வாசகங்கள் எழுதிய பதாகைகளை ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர். திங்கட்கிழமை (30) குறித்த மது விற்பனை நிலையம் திறக்கப்படவில்லை.

இந்நிலையில் சம்பவ இடத்திற்கு வந்த மன்னார் பிரதேசச் செயலாளர் எம்.பிரதீப் மக்களுடன் கலந்துரையாடினார்.எனினும் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் குறித்த பகுதிக்கு வர வேண்டும் என்ற கோரிக்கையை முன் வைத்தனர்.

மக்களின் கோரிக்கைக்கு அமைவாக மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன் குறித்த பகுதிக்கு வருகை தந்து மக்களுடன் கலந்துரையாடினார்.

இதன் போது மக்கள் தமது பிரச்சினைகளை அரசாங்க அதிபரின் கவனத்திற்கு கொண்டு சென்றனர். இந்நிலையில் குறித்த மதுபானசாலையை பிரதேச செயலாளர் அல்லது அரசாங்க அதிபரின் உடனடியாக மூட முடியாது என்றும் மதுவரி திணைக்கள ஆணையாளர் நாயகம் ஊடாக வே நடவடிக்கை எடுக்க முடியும் என்றும்,இவ்விடயம் குறித்து உடனடியாக மதுவரி திணைக்கள ஆணையாளரின் கவனத்திற்கு கொண்டு வருவதாகவும், குறிப்பாக ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டு வந்து குறித்த மதுபானசாலையை நிரந்தரமாக மூடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும், குறிப்பாக தொடர்ச்சியாக மக்களின் எதிர்ப்பு காணப்படுகின்ற நிலையில் குறித்த மதுபானசாலை திறக்கப்பட்டுள்ள விடையத்தை உரிய தரப்பினரின் கவனத்திற்கு கொண்டு வருவதாகவும் அரச அதிபர் தெரிவித்தார்.

இந்த நிலையில் மக்களின் கோரிக்கை அடங்கிய மகஜர் அரசாங்க அதிபரிடம் கையளிக்கப்பட்ட நிலையில் அரச அதிபரின் வாக்குறுதிக்கு அமைய மக்கள் ஆர்ப்பாட்டத்தை கை விட்டுச் சென்றனர்.



# தலைமன்னார் கடற்பரப்பில் கைது செய்யப்பட்ட 17 இந்திய மீனவர்களையும் விளக்கமறியலில் வைக்க உத்தரவு



- எஸ்.ஆர்.லெம்பேட் (29-09-2024)

இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து மீன் பிடித்த நிலையில் கைது செய்யப்பட்ட 17 இந்திய மீனவர்களையும் எதிர்வரும் 10 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க மன்னார் நீதவான் 29-09-2024 ஆன்று ஞாயிற்றுக்கிழமை மாலை உத்தரவிட்டார்.

அன்று ஞாயிற்றுக்கிழமை (29) அதிகாலை இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து மீன் பிடித்துக் கொண்டிருந்த போது கடல் ரோந்து பணியில் ஈடுபட்ட இலங்கை கடற்படையினர் இரண்டு இந்திய இழுவைப் படகுகளையும் அதிலிருந்து 17 இந்திய மீனவர்களையும் கைது செய்தனர்.

பின்னர் குறித்த மீனவர்களையும், இலுவைப் படகுகளையும் கடற்படையினர் தலைமன்னார் கடற்படையினரிடம் ஒப்படைத்தனர்.

தலைமன்னார் கடற்படையினர் விசாரணைகளின் பின்னர் ஞாயிற்றுக்கிழமை (29) மாலை மன்னார் கடற்றொழில் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைத்தனர். இதன்போது யாழ் இந்திய துணைத் தூதரக அதிகாரிகள் வருகை தந்து மீனவர்களுடன் கலந்துரையாடினர்.

கடற்தொழில் திணைக்கள அதி-காரிகள் விசாரணைகளை மேற்கொண்ட நிலையில் குறித்த 17 இந்திய மீனவர்களையும் அன்று ஞாயிற்றுக்கிழமை (29) மாலை மன்னார் நீதவான் முன்னிலையில் ஆஜர் படுத்தினர்.

இதன் போது விசாரணைகளை மேற்கொண்ட மன்னார் நீதவான் குறித்த மீனவர்களை எதிர்வரும் 10 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார்.

# இளையோரை பாராளுமன்றத்துக்கு அனுப்புவதற்காக நான் தேர்தலில் போட்டியிடுவதிலிருந்து விலகிக் கொள்கின்றேன் என்கிறார் முன்னாள் எம்.பி.எஸ்.வினோ நோகராதலிங்கம்



- எஸ்.ஆர்.லெம்பேட் (02-10-2024)

எதிர்வரும் பாராளுமன்ற தேர்தலில் போட்டியிடாதிருக்க தீர்மானித்துள்ளதாக முன்னாள் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வினோ நோகராதலிங்கம் தெரிவித்துள்ளார்.

குறித்த விடயம் தொடர்பில் அவருடன் வினவிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், கடந்த ஜனாதிபதி தேர்தலில் தெற்கிலே மக்கள் மத்தியில் குறிப்பாக சிங்கள பெரும்பான்மை மக்கள் மத்தியிலே அரசியல் மாற்றம் ஒன்றின் தேவை உணரப்பட்டது.

அதன் விளைவுதான் அநுரகுமார திசாநாயக்க ஜனாதிபதியாகியமை. அதைப்போலவே வடகிழக்கில் எதிர்வரும் பாராளுமன்ற தேர்தலில் தமிழ் மக்களும் மாற்றம் ஒன்றை எதிர்பார்த்து நிற்கின்றனர்.

அது புதியவர்களையும், இளையோரையும் பாராளுமன்றத்துக்கு அனுப்ப வேண்டும் என்பதாகும். மக்கள் மனங்களில் ஏற்பட்டிருக்கும் இந்த மன மாற்றத்துக்கு நாம் தடையாக இருக்க முடியாது.

அதற்கு வழி விட வேண்டியது தவிர்க்க முடியாததாகும். மக்கள் மனங்களின் உணர்வுகளை புரிந்து கொண்டு ஏற்றுக் கொண்டு இளைஞர்களுக்கும், முதியவர்களுக்கும் இடம் கொடுப்பதே அரசியல் கட்சிகளினதும், தலைவர்களினதும் தலையாய கடமையாக இருக்க வேண்டும்.

என்னுடையதும் ஏனைய சில முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களதும் போட்டியிடாதிருக்கின்ற முடிவு ஏனையவர்களும் உணர்ந்து முடிவெடுக்க உந்துதலாக அமையும் என கருதுகின்றேன்.

வன்னி மாவட்டத்தில் அரசியல் தெளிவுள்ள ஆளுமை மிக்க இளம் தலைவர்களை பாராளுமன்றம் அனுப்ப வேண்டும் என்ற மக்களின், இளைஞர்களின் விருப்பங்கள் நிறைவேற மக்கள் மனதறிந்து எதிர்வரும் பாராளுமன்ற பொதுத் தேர்தலில் போட்டி யிடுவதில்லை என முடிவெடுத்துள்ளேன் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு நிதி உதவிகளை வழங்கி நோயாளர்களின் தேவைகளுக்கு தீர்வு காண வழி சமைக்கும் கனடா வர்த்தகர் கணேசன் சுகுமார்




தினமும் ஆயிரக்கணக்கான நோயாளர்கள் சிகிச்சைக்காகச் செல்லும் இலங்கையின் முக்கிய வைத்தியசாலையாகத் திகழும், யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு தொடர்ச்சியாக நிதி உதவிகளை வழங்கி நோயாளர்களின் தேவைகளுக்கு தீர்வு காண வழி சமைக்கும் கனடா வர்த்தகர் கணேசன் சுகுமார் அவர்களுக்கு உலகெங்குமிருந்து பாராட்டுக்களும் வாழ்த்துக்களும் குவிந்த வண்ணம் உள்ளன.

கனடாவில் நீண்ட காலமாக பல்வேறு வர்த்தக முயற்சிகளில் கால் பதித்து நூற்றுக்கானவர்களுக்கு வேலை வாய்ப்புக்களை வழங்கி வரும் கணேசன் சுகுமார் அவர்கள். கனடாவிலும் பல வைத்தியசாலைகளின் நிதித் தேவைகளின் போது உதவிகள் வழங்கி வருகின்றார் என்பதும் இரத்தம் சுத்திகரிப்பு செய்யும் இயந்திரங்களையும் பல தடவைகள் வழங்கியுள்ளார் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இவ்வாறான நிலை யில் கடந்த சில வருடங்களாக யாழ்ப்பாணம் வைத்தியசாலையின் பணிப்பாளர் த. சத்தியமூர்த்தி மற்றும் வைத்தியர்களின் வேண்டுகோளின் பேரில் கணேசன் சுகுமார் அவர்கள் தொடர்ச்சியாக நிதி உதவிகளை வழங்கியும் நேரடியாக யாழ்ப்பாணம் சென்றும் அவற்றை கையளித்தும் வருகின்றார்.

அந்த வகையில் சில நாட்களுக்கு முன்னர் யாழ்ப்பாண வைத்தியசாலையின் கண்சிகிச்சைப் பிரிவிற்கு 40 இலட்சம் ரூபாய் பெறுமதியான உபகரணங்களை வழங்கினார். அதற்கு முன்னர் கடந்த வருடங்களில் இருதய சிகிச்சைப் பிரிவிற்கு தேவையான மருத்துவ உபகரணங்கள் கொள்வனவு செய்ய 50 இலட்சம் ரூபாய்களை வழங்கினார்.

இந்த கையளிப்பு வைபவங்களில் திரு கணேசன் சுகுமார் சார்பாக இளங்கோ இரத்தினசபாபதி அவர்கள் கலந்து கொண்டார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.










# 20/20 CA$H RU$$H

- Western Union- Money Transfer, Payout, Bill Payments
- Buying Used Gold-Top Dollar paid
- Pawning
- Small Loans

நகைகள் திருத்தம் செய்து கொடுக்கப்படும்

இங்கே பிரசுரிக்கப்பட்டுள்ள இலக்கங்களை கொண்ட வாடிக்கையாளர்கள் தயவுசெய்து எம்முடன் தொடர்பு கொண்டு அடவுகளை மீட்கவும்.

Kindly redeem the following pawn ticket number immediately

**CR 260, Cr213, Cr265, Cr173, Cr221, cr199, cr203, cr 246, 185, 245, cr 230, 252, cr163, cr183, cr55, cr144, cr181, 3012, 3020, cr193, 224**

இலங்கையில் உள்ள உங்கள் உறவுகளுடன் குறைந்த கட்டணத்தில் தொடர்பு கொள்வதற்கான Pre-paid Top up ஐ எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.



தொடர்புகளுக்கு :

**Tel : 416-291-CASH (2274)**

**Fax : 416-291-2276**

E-mail : 2020cashrusshcorp@gmail.com | www.2020cashrussh.ca

4049 Sheppard Ave., East Scarborough. ON. M1S 1S8

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# ஜனநாயகத்தை பாதுகாக்கும் நோக்கில் தேர்தல் குறித்தான கருத்தமர்வு யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது

பு. கஜிந்தன்



இலங்கை தேசிய சமாதானப் பேரவையானது இலங்கையின் அனைத்து மாவட்டங்களிலும் மத்தியஸ்த செயற்பாடுகள், தெளிவூட்டல் கருத்தரங்குகள், பரிந்துரை ரீதியான செயற்பாடுகள் மற்றும் இனங்களுக்கு இடையிலான நம்பிக்கை மற்றும் உறவினை கட்டியெழுப்புவதற்காக அந்திவாரமாக செயற்பாடுகள் பலவற்றை முன்னெடுத்து வருகின்றது.

அதேவேளை இலங்கையின் ஆட்சிமுறையில் பல்வகைமை, வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறலையும் தொடர்ச்சியாக வலியுறுத்தியும் பரிந்துரைத்தும் வருகின்றது.

அந்தவகையில், இலங்கை தேசிய சமாதானப் பேரவையானது Active Citizens for Elections and Democracy (ACED) எனும் கருத்திட்டத்தின் கீழ் இலங்கையின் 25 மாவட்டங்களிலும் பல்வேறு செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றது. அதன் தொடர்ச்சியாக மேற்குறிப்பிடப்பட்ட கருப்பொருளிலான பயிற்சியானது யாழ். மாவட்டத்தில் உள்ள தனியார் விடுதி ஒன்றில் 01-10-2024 அன்றையதினம் நடைபெற்றது.



இலங்கை தேசிய சமாதான பேரவையினர், சொண்ட் நிறுவனத்தின் பணியாளர்கள், தேர்தல் கண்காணிப்பாளர்கள், ஊடகவியலாளர்கள், சமூக மட்ட சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகள் ஆகியோர் இந்த பயிற்சிப்பட்டறையில் கலந்துகொண்டனர்.

# தேசிய ரீதியில் நடைபெற்ற உடற்பயிற்சி போட்டியில் சாதனை படைத்த ஊர்காவற்துறை புனித அந்தோனியார் கல்லூரி!



அகில இலங்கை பாடசாலைகளுக்கு இடையிலான தேசியமட்ட உடற்பயிற்சி போட்டியில் ஆண்கள் பிரிவில் ஊர்காவற்துறை புனித அந்தோனியார் கல்லூரி மீண்டும் தங்கம் வென்று சாதனை படைத்துள்ளது.

அகில இலங்கை பாடசாலை களுக்கு இடையிலான தேசிய மட்ட உடற்பயிற்சி போட்டிகள் 30-09-2024 அன்றையதினம் குருநாகல் மலியதேவ பெண் கள் பாடசாலை மைதானத்தில் நடைபெற்றன.

இப்போட்டியில் வடக்கு மாகாணத்தை சேர்ந்த ஊர்காவற்துறை புனித அந்தோனியார் கல்லூரி தங்கம் வென்று சாதனைபடைத்துள்ளது. இப் போட்டியில் பங்கேற்ற வடக்கு மாகாணப் பாடசாலையான இளவாலை ஹென்றி அரசர் கல்லூரி அணி வெள்ளி பதக்கத்தை சுவீகரித்துள்ளது.

இதில் ஆண்கள் பிரிவில் பங்குபற்றி ஊர்காவற்துறை புனித அந்தோனியார் கல்லூரி தேசிய மட்ட உடற்பயிற்சிப் போட்டியில் இதுவரை பங்கேற்ற போட்டிகளில் 5 தங்கப் பதக்கம், 5 வெள்ளிப்பதக்கம், 3 வெண்கலப் பதக்கங்களை சுவீகரித்து இலங்கையில் விளையாட்டில் அதிக பதக்கம் வென்ற பாடசாலைகளில் முன்னணியில் விளங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை இளவாலை ஹென்றி அரசர் கல்லூரி அணியும் கடந்த காலத்தில் தங்கம், வெள்ளி, வெண்கலப் பதக் கங்களை சுவீகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இதே வேளை தேசியமட்ட உடற்பயிற்சி போட்டியில் பெண்கள் பிரிவில் பங்கேற்ற ஊர்காவற்றுறை கரம்பொன் சிறிய புஸ்பம் மகளிர் பாடசாலை தேசிய மட்டத்தில் 3 ஆம் இடத்தினை பெற்று வெண்கலப் பதக்கத் தினை பெற்றுள்ளது. குறித்த பாடசாலையும் கடந்த காலத்தில் தங்கம், வெள்ளி பதக்கத்தினை சுவீகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.




# யாழ்ப்பாணம் நெடுந்தீவு றோமன் கத்தோலிக்க மகளிர் கல்லூரியில் இடம்பெற்ற சிறுவர் தின நிகழ்வு!



யாழ்ப்பாணம் தீவக கல்வி வலயத்திற்குட்பட்ட நெடுந்தீவு றோமன் கத்தோலிக்க மகளிர் கல்லூரியில் சிறுவர் தின நிகழ்வுகள் 01-10-2024 அன்று சிறப்பாகக் கொண்டாடப்பட்டன.



கல்லூரி அதிபர் தலைமையில் பிள்ளைகளைப் பாதுகாப்போம் சமமாக மதிப்போம் எனும் தொனிப்பொருளில் நிகழ்வுகள் நடைபெற்றன.

கல்லூரிக்கு அருகில் உள்ள பிரதான வீதியூடாக சிறுவர் உரிமைகள் தொடர்பில், பொதுமக்களுக்கு தெளிவூட்டும் வகையில் விழிப்புணர்வு ஊர்வலமும் ஒழுங்குபடுத்தப்பட்டிருந்தது.

மாணவர்கள் பலூன்களைத் தாங்கியவாறு, சிறுவர் உரிமைகள் தொடர்பான கோசங்களை எழுப்பியவாறு, விழிப்புணர்வு ஊர்வலத்தில் பங்கெடுத்தனர்.

விழிப்புணர்வு ஊர்வலம் பாடசாலையை வந்தடைந்ததும், சமூகப் பெரியார்கள் மதிப்பளிக்கப்பட்டு, அவர்களிடம் மாணவர்கள் ஆசீர்வாதங்களையும் பெற்றுக்கொண்டனர்.

# எமது பல்கலைக்கழகத்தில் கருத்து சுதந்திரத்திற்கான வெளியினை உறுதிப்படுத்தல்

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தின் அறிக்கை

பல்கலைக்கழகத்தில் கருத்து சுதந்திரத்திற்கான வெளியினை உறுதிப்படுத்தல் என்ற தலையங்கத்தோடு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் அறிக்கை ஒன்றினை வெளியிட்டுள்ளது.

யாழ்ப்பாண பல்கலைக்கழக ஆசிரியர் சங்கமானது 02-10-2024 அன்றையதினம் ஊடக அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. அந்த ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

ஆரோக்கியமான விவாதங்களிற்கும், கருத்துப் பரிமாறல்களிற்குமான களமாக பல்கலைக்கழகங்கள் விளங்குகின்றன. கருத்துச் சுதந்திரம் கல்விச் சுதந்திரத்தின் ஒரு பகுதியாகும். பல்கலைக்கழக சமூகத்தினை சேர்ந்தவர்கள் கருத்துக்களை கருத்துக்களால் எதிர் கொள்ளவல்ல அறிவு முதிர்சியினை கொண்டிருப்பர்.

அண்மையில் 15 பல்கலைக்கழக ஆசிரியர்களால் வெளியிடப்பட்ட அறிக்கையொன்றிற்கு எதிராக யாழ் பல்கலைக்கழக வளாகத்தில் ஒட்டப்பட்ட அநாமதேய சுவரொட்டி, முதலான சில சம்பவங்கள் கருத்து சுந்திரத்திற்கான வெளியினை இல்லாதொழிக்கும் செயற்பாடுகளாக அமைந்துள்ளன.

இவ்வாறான கோழைத்தனமான செயற்பாடுகளின் பின்னால் உள்ளவர்களின் அநாகரீகமான நடவடிக்கைகளால் அவர்கள் தங்களை மாத்திரமன்றி இப் பல்கலைக்கழகத்தினையும் இழிவுபடுத்துகின்றனர்.

யாழ் பல்கலைக்கழகத்திற்கு களங்கத்தினை ஏற்படுத்தியுள்ள இவ்வாறான அநாகரீகமான செயற்பாட்டினை யாழ் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் வன்மையாக கண்டிக்கின்றது. இவ்வாறான செயற்பாட்டில் ஈடுபட்டவர்களை இனங்கண்டு தகுந்த நடவடிக்கை எடுக்குமாறு பல்கலைக்கழக நிர்வாகத்தினை ஆசிரியர் சங்கம் வலியுறுத்தி நிற்கின்றது என குறிப்பிடப்பட்டுள்ளது.

# இளைஞர்களை அரசியலுக்குள் உள்வாங்க வேண்டும் என்ற நோக்கில் யாழ்ப்பாணத்தில் கலந்துரையாடல்!

வடக்கிலங்கையின் பாராளுமன்ற பிரதிநிதித்துவத்திலும் ஏனைய அரசியல் செயற்பாடுகளிலும் தமிழ்த்தேசிய செயலாற்றுகையை முன்னிறுத்தி, மக்கள் பிரதிநிதிகளாக தெரியப்படுபவர்களிடத்தில் “மாற்றம்” வேண்டும் எனும் நோக்கில் கலந்துரையாடல் ஒன்று 2ம் திகதி புதன்கிழமையன்று மாலை யாழ்ப்பாணத்தில் உள்ள. தந்தை செல்வா அரங்கில் நடைபெற்றது.

தமிழ்த்தேசியத்தின் மீது ஆர்வமுடைய, நேரடி அரசியலில் ஈடுபடாத மற்றும் வருகின்ற தேர்தலில் ஒரு மாற்றத்தை விரும்புகின்ற பல்வேறு தரப்பிலும் உள்ள ஆர்வலர்களால் இந்த கலந்துரையாடல் ஏற்பாடு செய்யப்பட்டது.

தமிழ் தேசியம் சார்ந்த கட்சிகளின் கடந்தகால செயற்பாடுள் என்ன, தேசிய கட்சிகளின் செயற்பாடுகள் என்ன, அற்றின் தற்போதைய நிலைப்பாடுகள் என்ன, இளைஞர்கள் ஏன் அரசியலுக்கு வரவேண்டும், தமிழ் தேசியம் குறித்து நிலைப்பாடு என்ன, பெண்களுக்கான ஆசன ஒதுக்கீடு போன்ற பல விடயங்கள் அங்கு கலந்துரையாடப்பட்டது.

இந்த கலந்துரையாடலில் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், வைத்தியர்கள், சட்டத்தரணிகள், சமூக ஆர்வலர்கள், யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்கள், ஊடகவியலாளர்கள், இளைஞர்கள் யுவதிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.



இலங்கை செய்திகள் Sri Lanka News

மன்னார் நிருபர்

# மன்னார் பாலத்திலிருந்து குதித்து தற்கொலை செய்து கொள்ளச் சென்ற பெண்ணின் உயிரைக் காப்பாற்றிய பொலிஸ் சார்ஜன்ட்



- எஸ்.ஆர்.லெம்பேட் (29-09-2024)

மன்னார் போக்குவரத்து பிரிவு பொலிஸ் சார்ஜன்ட் மலலசேகர (41308) வின் துரித நடவடிக்கையின் காரணமாக மன்னார் பிரதான பாலத்தில் இருந்து குதித்து தற்கொலைக்கு முயன்ற பெண் ஒருவர் 29-09-2024 அன்று ஞாயிற்றுக்கிழமை காப்பாற்ற பட்டதாக தெரிய வருகிறது.

அன்று (29) காலை மன்னார் நகருக்குள் நுழையும் பிரதான பாலத்திற்கு அருகில் உள்ள அலுவலகத்தில் பிரதேச போக்குவரத்து பிரிவுக்கு பொறுப்பான பொலிஸ் சார்ஜன்ட் மலலசேகர (41308) பணிபுரிந்து கொண்டிருந்த போது பெண் ஒருவர் கையில் கடிதம் போன்ற ஒன்றை எடுத்துக் கொண்டு வந்துள்ளார்.

பின்னர் குறித்த யுவதி குறித்த பொலிஸ் அதிகாரியிடம் தமிழ் தெரியுமா? என கேட்டுள்ளார். அதற்கு சார்ஜன்ட் நீங்கள் யார் என்று தமிழில் கேட்க அந்தப் பெண், தன் கையில் இருந்த கடிதம் மற்றும் கையடக்கத் தொலைபேசியை போலீஸ் சார்ஜென்ட்டின் மேசையில் வைத்துவிட்டு மன்னார் பாலம் நோக்கி ஓடியுள்ளார்.

சம்பவத்தை அவதானித்த பொலிஸ் சார்ஜன்ட் மலலசேகரன், குறித்த பெண் தற்கொலை செய்து கொள்ளப் போவதாக சந்தேகித்து துரத்திச் சென்றுள்ளார்.

அப்போது குறித்த பெண் பாலத்தின் பாதுகாப்பு சுவரில் ஏறி கடலில் குதிக்க தயாராகியுள்ளார். அந்தப் பெண் பாலத்தில் குதிக்கத் தயாரான நிலையில் மலலசேகர அந்தப் பெண்ணின் காலைப் பிடித்துக் காப்பாற்றினார்.

சார்ஜன்டினால் மீட்கப்பட்ட 24 வயதுடைய பெண் மன்னார் பொலிஸ் மகளிர் மற்றும் சிறுவர் பணியகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

# மன்னாரில் இருந்து ஜனாதிபதி, பிரதமரை நோக்கிச் செல்லும் ஆயிரக்கணக்கான தபாலட்டைகள்

- எஸ்.ஆர்.லெம்பேட் (01-10-2024)

மன்னார் தீவில் முன்னெடுக்கப்பட்டு வரும் காற்றாலை மின்சாரம் அமைத்தல் மற்றும் கனிய மணல் அகழ்வு செயல்பாடுகளை நிறுத்த கோரி ஜனாதிபதி மற்றும் பிரதமருக்கு அழுத்தத்தை கொடுக்கும் வகையில் தபால் அட்டை மூலம் கோரிக்கைகள் முன் வைக்கும் நடவடிக்கைக்கு அமைவாக மக்களிடம் பெற்றுக் கொள்ளப்பட்ட தபாலட்டைகள் 01-10-2024 அன்றைய தினம் செவ்வாய்க்கிழமை மாலை மன்னார் தபாலகத்தில் அஞ்சல் செய்யப்பட்டது.

மன்னார் தீவில் முன்னெடுக்கப்பட்டு வரும் காற்றாலை மின்சாரம் அமைத்தல் மற்றும் கனிய மணல் அகழ்வு செயல்பாடுகளை நிறுத்த கோரி ஜனாதிபதி மற்றும் பிரதமருக்கு அழுத்தத்தை கொடுக்கும் வகையில் தபால் அட்டை மூலம் கோரிக்கைகள் முன் வைக்கும் நடவடிக்கை கடந்த வெள்ளிக்கிழமை மன்னாரில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் ஏற்பாட்டில் அதன் தலைவர் ஜாட்சன்பிகிராடோ தலைமையில் மன்னார் பேருந்து தரிப்பிடத்தில் ஆரம்பிக்கப்பட்டது.




அதனைத் தொடர்ந்து மன்னார் தீவு பகுதியில் பல்வேறு பகுதிகளில் தொடர்ச்சியாக மக்களிடம் தபாலட்டைகள் பெற்றுக்கொள்ளப்பட்டது.

மன்னார் மாவட்டத்தில் கடந்த பல வருடங்களாக முன்னெடுக்கப்பட்டு வரும் காற்றாலை மின் கோபுரம் அமைத்தல் மற்றும் கனிய மணல் அகழ்வு நடவடிக்கைகள் இடம் பெற்று வருகின்ற நிலையில் மக்கள் தொடர்ச்சியாக எதிர்ப்பை முன்னெடுத்து வந்தனர்.



மன்னார் தீவில் குறித்த நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டாம் என்ற கோரிக்கையை முன் வைத்து மக்கள் தொடர்ந்தும் எதிர்ப்பை வெளிப்படுத்தி வந்தனர்.

கடந்த காலங்களில் ஜனாதிபதி, பிரதமர் உள்ளிட்ட வர்களிடமும் கோரிக்கைகளை முன் வைத்த போதும் எவ்வித பலனும் கிடைக்கவில்லை.

இந்த நிலையில் தற்போதைய ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோருக்கு குறித்த திட்டத்தின் பாதகத்தையும் இத் திட்டம் மக்களுக்கு எதிரானது என்பதை வலியுறுத்தும் வகையிலும் கொழும்பில் உள்ள அலுவலகங்களுக்கு மக்களின் கோரிக்கை அடங்கிய தபால் அட்டைகள் இவ்வாறு அனுப்பி வைக்கப்படுகிறது.

புதிய ஜனாதிபதி தனது தேர்தல் பிரச்சாரங்களின் போது மன்னார் தீவில் அமைக்கப்படும் காற்றாலை மின்சார திட்டத்தை தான் ஜனாதிபதியாக வந்தால் குறித்த ஒப்பந்தத்தை ரத்து செய்வதாக கூறியிருந்தார்.

இந்த நிலையில் இதனை வலியுறுத்தும் வகையிலும் குறித்த தபாலட்டை அனுப்பி வைக்கப்படுகிறது.

மக்களிடம் பெற்றுக்கொள்ளப்பட்ட கோரிக்கை அடங்கிய தபாலட்டைகள் 01-10-2024 அன்றைய தினம் செவ்வாய்க்கிழமை மாலை மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தில் சேகரிக்கப்பட்ட நிலையில் ஆயிரக்கணக்கான தபாலட்டைகள் மன்னார் தபாலகம் ஊடாக ஜனாதிபதி மற்றும் பிரதமருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.




# ஒரு முன்மாதிரியான அறிவிப்பு

## "புதியவர்களுக்கு சந்தர்ப்பம் வழங்க வேண்டும்" என்பதற்காக நான் நாடாளுமன்ற தேர்தலில் போட்டியிடவில்லை என்கிறார் சாள்ஸ் நிர்மலநாதன்

- எஸ்.ஆர்.லெம்பேட் (01-10-2024)

புதியவர்களுக்கு சந்தர்ப்பம் வழங்க வேண்டும் என்ற நோக்கத்திற்காக இம்முறை நடைபெறுகின்ற நாடாளுமன்ற தேர்தலில் நான் போட்டியிடவில்லை என்பதை அனைத்து தமிழ் மக்களுக்கும் அறியத் தருகிறேன் என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் தனது முகநூலில் பதிவை விடுத்துள்ளார். குறித்த பதிவில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

கடந்த 2015 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற நாடாளுமன்ற தேர்தலில் வன்னி தேர்தல் தொகுதியில் அதிகூடிய வாக்குடன் மக்களின் விருப்பத்திற்கு அமைய நாடாளுமன்றத்துக்கு தெரிவு செய்யப்பட்டு இருந்தேன்.

அன்று தொடக்கம் இன்று வரை என்னால் முடிந்த அளவு தமிழ் மக்களுக்கு ஏற்படுகின்ற பிரச்சினைகளுக்கு தொடர்ச்சியாக நாடாளுமன்றத்தில் குரல் கொடுத்து வந்திருக்கிறேன்.

அத்துடன் எனது பிரதேசங்களில் தமிழ் மக்கள் எதிர்நோக்கிய பிரச்சினைகளுக்கு தீர்வுகளையும் என்னால் இயன்றவரை வழங்கியும் மக்கள் போராட்டங்களிலும் பங்கு பற்றி இருக்கிறேன்.

வன்னி மாவட்டத்தில் தேவையான என்னால் முடிந்த பல அபிவிருத்தி திட்டங்களையும் நான் முன்னெடுத்து இருக்கிறேன். தமிழ் மக்கள் எனக்கு இவ்வளவு காலமும் வழங்கிய ஆதரவிற்கும் கௌரவத்திற்கும் நான் நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றேன்.

புதியவர்களுக்கு சந்தர்ப்பம் வழங்க வேண்டும் என்ற நோக்கத்திற்காக இம்முறை நடைபெறுகின்ற நாடாளுமன்ற தேர்தலில் நான் போட்டியிடவில்லை என்பதை அனைத்து தமிழ் மக்களுக்கும் அறியத்தருகிறேன்.

அதே நேரம் தமிழர்களின் உரிமைக்காக தொடர்ச்சியாக நான் உழைத்துக் கொண்டிருப்பேன் என்பதை உறுதியாக கூறுகின்றேன்.

எனக்கு தொடர்ச்சியான ஆதரவை இவ்வளவு காலமும் நல்கிய அனைத்து உறவுகளுக்கும் நன்றிகளை தெரிவிப்பதுடன் தொடர்ந்தும் உங்களுடன் நான் பயணிப்பேன் என்பதையும் கூறிக் கொள்கிறேன் என்று தெரிவித்துள்ளார்.

# மன்னார் நீதிமன்றத்தில் நிலுவையில் இருந்த வழக்கு விசாரணை தொடர்பாக விமர்சித்து முகநூலில் பதிவிட்ட மன்னார் பகுதியைச் சேர்ந்த இளைஞனை விளக்கமறியலில் வைக்க உத்தரவு




(01-10-2024)

மன்னார் நீதிமன்றத்தில் நிலுவையில் இருந்த வழக்கு விசாரணை தொடர்பாகவும், நீதிமன்றத்தின் சுயாதீன விசாரணை யை விமர்சித்து முகநூலில் பதிவிட்ட மன்னார் பகுதியைச் சேர்ந்த இளைஞர் ஒருவரை எதிர்வரும் 15ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க மன்னார் நீதவான் செவ்வாய்க்கிழமை (1) உத்தரவிட்டுள்ளார்.

மன்னார் சட்டத்தரணிகள் சார்பாக குறித்த இளைஞருக்கு எதிராக மன்னார் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மன்னார் பகுதியைச் சேர்ந்த குறித்த இளைஞர் வைத்தியர் அர்ச்சனா உள்ளடங்களாக நிலுவையில் உள்ள வழக்கு விசாரணைகள் குறித்தும், மன்னார் நீதிமன்றம், சட்டத்தரணிகள் மற்றும் பொலிஸாருக்கு எதிராகவும் அவ நம்பிக்கையை ஏற்படுத்தும் வகையிலும் முகநூல் பக்கத்தில் பதிவிட்டிருந்தமை குறித்து மன்னார் சட்டத்தரணிகள் ஊடாக மன்னார் நீதிமன்றத்தில் குறித்த இளைஞருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

இந்த நிலையில் குறித்த இளைஞர் கடந்த மாதம் மன்றில் முன்னிலை ஆகாத நிலையில் பிடியாணை பிறப்பிக்கப்பட்ட நிலையில் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு செவ்வாய்க்கிழமை (1) மன்னார் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தினர்.

இதன் போது குறித்த இளைஞர் தனது குற்றத்தை ஒப்புக்கொண்ட நிலையில் குறித்த நபரை எதிர்வரும் 15ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதவான் உத்தரவிட்டார்.

குறித்த இளைஞர் வைத்தியர் அர்ச்சனா உள்ளடங்களாக சில வழக்கு விசாரணைகள் குறித்து நீதி மன்றம், சட்டத்தரணிகள், மற்றும் பொலிஸாரை விமர்சித்து முகநூலில் பதிவிட்ட நிலையில் அவர் கைது செய்யப்பட்டுள்ளதாக சட்டத்தரணி பா.டெனிஸ்வரன் தெரிவித்தார்.

# டான்ஸ்ரீ விக்னேஸ்வரன் முயற்சியில் உருவான ஈவுட் தமிழ்ப்பள்ளிக்கு துன் சாமிவேலு பெயர் சூட்டவேண்டும்

- நக்கீரன் -



சுங்கை சிப்புட், அக்.03:

**நா**ட்டில் 530-ஆவது தமிழ்ப் பள்ளியாக வகைப்படுத்தப்பட்டுள்ள சுங்கை சிப்புட் ஈவுட் தமிழ்ப் பள்ளி, பல கட்டங்களைக் கடந்து வரும் ஞாயிற்றுக் கிழமை பிற்பகலில் தொடக்கி வைக்கப்படுவதை அறிந்து மகிழ்ச்சி அடையும் அதேவேளை, இந்தப் பள்ளிக்கு மஇகா-வின் முன்னாள் தலைவர் துன் சாமிவேலனார் பெயரை சூட்ட வேண்டும் என்று உள்ளூர் மக்கள் விரும்புகின்றனர் என்று மஇகா சுங்கை சிப்புட் தொகுதித் தலைவர் சின்னராசு வீரப்பன் தெரிவித்துள்ளார்.

நாட்டில் 14-ஆவது பொதுத் தேர்தல் நடைபெறுவதற்கு முன், சுமார் 3 ஆண்டுகளாக சுங்கை சுப்புட் தொகுதியிலேயே வாழ்ந்தவர் மஇகா தேசியத் தலைவர் டான்ஸ்ரீ டத்தோஸ்ரீ டாக்டர் ச.விக்னேஸ்வரன்.

2008 பொதுத் தேர்தலின்போது இழந்த அத்தொகுதியை மீண்டும் கைப்பற்ற வேண்டும் என்ற இலட்சியத்தில் முழுமுச்சுடன் பாடுபட்ட அந்த நேரத்தில், பேராக் மாநிலத்தின் அரச நகரான கோல கங்சார் மாவட்டத்தையும் உலு பேராக் மாவட்டத்தையும் உள்ளடக்கிய சுங்கை சிப்புட் நாடாளுமன்றத் தொகுதியில் ஒரு புதிய தமிழ்ப் பள்ளியை உருவாக்கி சாதனைப் படைக்க வேண்டும் என்ற எண்ணத்தில் டான்ஸ்ரீ விக்னேஸ்வரன் எடுத்த முயற்சிக்கு துணை நின்றவர் அன்றைய பிரதமர் டத்தோஸ்ரீ நஜீப்.

5.9 ஏக்கர் நிலப்பரப்பில் 11.1 மில்லியன் வெள்ளி கட்டுமானத்திற்கு ஒப்புதல் அளித்த தேசிய முன்னணி அரசு சார்பில், முதற்கட்டமாக 3.3 மில்லியன் வெள்ளியையும் ஒதுக்கீடு செய்ததன் அடிப்படையில் கட்டுமானப் பணிகள் துரிதமாக நடைபெற்று வந்த நிலையில், 2018 மே மாதம் இடம்பெற்ற ஆட்சி மாற்றத்தால், இந்தப் பள்ளிக்கான கட்டுமானம் நிலைகுத்தி நின்றது.

இந்த நிலையில், பலகட்ட முன்னெடுப்பிற்குப்பின், 2020-ஆம் ஆண்டில், இந்தப் பள்ளியின் கட்டுமானம் தொடர முடிவெடுக்கப்பட்ட நிலையில், ஏற்கெனவே செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தம் தொடர முடியாத நிலை உருவானது காரணம், இடைப்பட்ட காலத்தில் ஏற்பட்ட விலையேற்றம் மற்றும் பொருளாதார சூழல் இதனால், 2 மில்லியன் அதிகரிக்கப்பட்டு புதிய ஒப்பந்ததாரரிடம் ஒப்படைக்கப்பட்டு பணிகள் தொடர்ந்த நிலையில் இப்பொழுது பள்ளிக் கட்டுமானம் நிறைவடைந்து ஒற்றுமை அரசாங்கத்தின் சார்பில் பிரதமர் டத்தோஸ்ரீ அன்வார் இப்ராகிம் இந்தப் பள்ளியைத் தொடக்கி வைக்க இருக்கிறார்.

பிரதமர் தொடக்கி வைக்க இருக்கும் முதல் தமிழ்ப் பள்ளி இது என்பதில் மகிழ்ச்சி என்றாலும், சுதந்திர மலேசியாவில் தேசிய முன்னணி அரசு உரிமத்துடன் அங்கீகரித்த ஏழு புதிய தமிழ்ப்பள்ளிகளில் இதுவும் ஒன்று என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

530ஆவது தமிழ்ப் பள்ளியாக வகைப்படுத்தப்பட்டுள்ள இந்தத் தமிழ்ப்பள்ளிக்கு அடித்தளம் இட்டது மஇகா-வும் அதன் நடப்பு தேசியத் தலைவர் டான்ஸ்ரீ விக்னேஸ்வரன் என்பதும் இந்தப் பள்ளியில் வரலாற்றில் என்றென்றும் நிலைத்திருக்கும்.

அதை அங்கீகரிக்கும் வகையில், இந்தத் தொகுதியின் நாடாளுமன்ற உறுப்பினராக 34 ஆண்டுகள் செயல்பட்ட மஇகா முன்னாள் தேசியத் தலைவரும் கடந்த நூற்றாண்டின் தேசிய கட்டுமான நாயகன் என்று பாராட்டப்பட்டவரும் பொதுப்பணித்துறையின் அந்நாளைய அமைச்சருமான துன் சாமிவேலனாரின் பெயரை இந்தப் பள்ளிக்கு சூட்டும்படி சுங்கை சிப்புட்வாழ் இந்திய மக்களின் சார்பாக கேட்டுக் கொள்வதாக வீ.சின்னராசு வெளியிட்டுள்ள அறிக்கையில் ஒற்றுமை அரசுக்கும் பிரதமருக்கும் கோரிக்கை வைத்துள்ளார்.





- நக்கீரன் - Nakkeeran 013-244 36 24

---



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி. வசந்தா நடராசன் B.A.
(416) 332-0269
vasantha@rogers.com



# ஈழத்துத் திருக்கோயில்கள்

வரலாறும் மரபும் 1114

## ஸ்ரீ கிருஷ்ணன் கோவில் திருகோணமலை

" அன்பே தகழியாய் ஆர்வமே நெய்யாக
இன்புருகு சிந்தை இடுதிரியா - நன்புருகி
ஞானச் சுடர் விளக்கேற்றினேன் நாரணற்கு
ஞானத் தமிழ்புரிந்த நான் "

இந்து சமயத்துள் அடக்கமாகியுள்ள வைணவம் தற்காலத்தில் தனிப்பெரும் மதமாகவும் போற்றப்படுகின்றது. இந்து சமயம் என்ற பெயர் புதியது. வேதங்களிலோ இதிகாசங்களிலோ இந்து என்ற பெயர் இடம்பெறவில்லை. கிரேக்கர்கள் சிந்து நதியை ஒட்டி வாழ்ந்த மக்களை இந்து என்று அழைத்தனர். சிந்துநதியை ஒட்டி வாழ்ந்த மக்கள் பின்பற்றிய வழிபாட்டுமுறை இந்துமதம் என அழைக்கப்பட்டது. சிந்து என்ற சொல் இந்துஎன்று உலிக்க மேனாட்டவரும் அவ்வாறே அழைக்க ஆரம்பித்தனர். இவ்வாறுதான் இந்தியா, இந்துநாகரிகம். இந்துமதம் என்ற பதங்கள் எங்கும் பரவின. இந்துமதம் சனாதனதர்மம் என்றே ஆரம்பத்தில் வழங்கப்பட்டுள்ளது.

மனிதன் வாழ்வுநெறியை ஆரம்பித்தபோதே, இயற்கையாக மரர்ந்த வாழ்வுநெறியாக சனாதன தர்மத்தைக் கொள்ளமுடியும். பிற்காலத்தில் இம்மதம் பல்வேறு பிரிவுகளாகப் பிளவுபட்டுக் காணப்பட்டது. இப்பிளவுகளை நீக்கி, இந்துசமயம் என்று அழைக்கப்பட்டதை சைவம், சாக்தம், வைணவம், காணபதியம்,
கௌமாரம், சௌரம் என அறுவகைச் சமயங்களாக்கி சமயஒற்றுமைக்கும், மாற்றத்திற்கும் வித்திட்டவர் ஸ்ரீ சங்கராச்சாரிய சுவாமிகளாவர்.

இந்த மாற்றத்தின்பின் அறுவகைச்சமயங்களும் சேர்ந்து பொதுப்பெயரால் இந்துமதம் என மீண்டும் ஒன்றுசேர்ந்தது. விஷ்ணுவை முழுமுதலாகக்கொண்டு அப்பிரிவிற்குரிய வழிபாட்டு நெறிகளை வகுத்து, தனிப்பெரும் மதமாக விளங்கியபோதிலும் இம்மதமும் இந்துமதத்துள் சங்கமித்தே காணப்படுகின்றது. ஏனைய மதங்கள் சைவத்துள் அடக்கமாகி அதற்குரிய வழிபாட்டு நெறிகளுடன் காணப்படுகின்றது.

புழந்தமிழர்களின் வழிபாட்டிலே திருமால் வணக்கமுறை இடம்பெற்றுள்ளமையை தொல்காப்பியத்தின் பொருளதிகாரம்,

" மாயோன் மேய காடுறை உலகமும்
சேயோன் மேய மைவரை உலகமும்
வேந்தன் மேய தீம்புனல் உலகமும்
வருணன் மேய பெருமணல் உலகமும்
முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் என
சொல்லிய முறையாற் சொல்லவும் படுமே "

எனக் கூறியுள்ளது. இச் சூத்திரத்தில் தொல்காப்பியர், முல்லைத்தெய்வம் மாயோன் என எடுத்துக்காட்டியுள்ளார்.

ஈழத்திருநாட்டிலும் வைணவவழிபாடு புகழ்பெற்ற வழிபாடாகக் காணப்படுகின்றது. திருகோணமலைப் பட்டினத்தில், புகையிரத நிலையத்திற்குச் சமீபமாக, வீரகத்திப்பிள்ளையார் கோவிலுக்கு அருகே ஸ்ரீ கிருஷ்ணன்கோவில் அமைந்துள்ளது. திருத்தலங்கள் மிகுந்து காணப்படும் இடத்தில் சனீஸ்வரன் ஆலயத்திற்கு எதிராக ஸ்ரீகிருஷ்ணர் ஆலயம் அமைந்து காணப்படுவது சிறப்புடையது. சைவப்பெருமக்கள் நிறைந்துவாழும் திருகோணமலைப்பிரதேசத்தில் காணப்படும் ஒரேயொரு கிருஷ்ணன் கோவில் இதுவாகும்.

திரு. மணிமுத்துநாயகர் என்பவர் வடஇந்தியாவைச் சோந்த வைணவர். இலங்கையைப் பிரித்தானியர் ஆளத்தொடங்கிய ஆரம்பகாலத்திலே, பிரித்தானியருடைய தரைப்படையிலே வடஇந்தியர்களைக்கொண்ட படைப்பிரிவொன்று இருந்தது. இவர்களைத் தலைப்பாக்கட்டிகள் என்று அழைக்கும் வழக்கு அக்காலத்திலே காணப்பட்டுள்ளது. இந்தப்படையைச் சேர்ந்தவர்கள் வைணவர்களாகக் காணப்பட்டனர். இவர்கள் தங்களுக்கென ஒரு வழிபாட்டுத்தலத்தை அமைக்க எண்ணங்கொண்டாகள். இவ்வேளையிலே தற்பொழுது கிருஷ்ணன் கோவில் அமைந்துள்ள இடத்திற்கு மேலாக மூன்றுநாட்களாக ஒரு கருடன் வட்டமிடுவதை இவர்கள் அவதானித்தார்கள். கருடன், பெரிய பெருமாளாகிய மகாவிஷ்ணுவின் வாகனம். கருடாழ்வார் என்று வை'ணவர்கள் வணங்குவர். ஆதலால் கருடன் வட்டமிட்ட அந்த இடத்தை தமது வழிபாட்டுத்தலமாக, பெருமாளே அடையாளமிட்டுக் காண்பித்ததாக இவர்கள் கருதினார்கள்.

கருடன் வட்டமிட்ட இடம் பெரிய இராசக்கோன் முதலியார் என்பவருடைய தர்மக் காணியாக, வீரகத்திப்பிள்ளையார் கோவிலுக்குரியதாகக் காணப்பட்டது. அந்த இடத்தை வீரகத்திப்பிள்ளையார் கோவில் உரிமையாளர்களிடமிருந்து பெற்றுக்கொண்டார்கள். இதுபற்றி எழுதப்பட்ட சாசனமொன்று தற்காலத்திலும் காணப்படுகின்றது. இவ்வாறு பெற்றுக்கொண்ட நிலத்திலே திரு. மாரிமுத்து நாயக்கரும், ஆரியநாட்டவர், திருவிளங்க நகரத்தார் ஆகியோரும் சேர்ந்து கூட்டாக ஸ்ரீ கிருஷ்ணன் ஆலயத்தை அமைத்துள்ளனர்.

கருங்கல்லினாலான கற்பக்கிரகத்தையும், அர்த்தமண்டபத்தையும் அமைப்பதற்கு இந்தியாவிலிருந்து கருங்கற்களைக் கொண்டு வந்துள்ளார்கள். திருக்கோணேஸ்வரத்தின் வரலாற்றிலே, இராமேஸ்வரம் கோவிலை அமைப்பதற்கு திருகோணமலையிலிருந்தும் கருங்கற்கள் கொண்டு செல்லப்பட்டதாக ஒரு குறிப்புக் காணப்படுகின்றது. அப்படியிருக்கையில், இந்தியாவிலிருந்து இவர்கள் ஏன் கருங்கற்களைக் கொண்டு வரவேண்டும் என்பதற்கும் ஒரு காரணம் கூறப்பட்டுள்ளது.

வளரும்...

# Tamil mothers threatened by "President Anura Kumara Dissanayake's rep" "Anura's Man" intimidate Tamil mothers searching for their beloved ones

**- Siva Parameswaran**

"I am with Anura" was the straightforward threat to the war-affected Tamil mothers in Vavuniya searching for their loved ones who were handed over to the Sri Lanka's military for more than 15 years now.

The said person, claiming himself to be a supporter of the newly elected President Anura Kumara Dissanayake could be seen threatening the mothers who are part of the Association for the Relatives of the Enforced Disappearances (ARED) in the North and East Provinces, a civil society group created to search for the tens of thousands of people who disappeared during Sri Lanka's armed conflict.

The grieving mothers were observing 'International Children's Day' on the first of October by carrying placards with the photos of the children who were victims of enforced disappearances demanding the day be observed as a black day. The protest was held in front of the Vavuniya bus station.

Sri Lanka along with El Salvador and Guatemala are the three countries where the incidents of enforced disappearances are very high and victims suffer the most.

While the Tamil mothers were staging their protest seeking the whereabouts of their children, an unidentified man claiming himself to be with the newly elected President AKD threatened the protestors in an intimidating manner and demanded they stop the protest.

Reacting sharply the grieving mothers re-torted back saying, "if so render justice to us" in unison.

The unidentified person claiming to be a supporter of the President accused the protesting mothers of receiving money from the diaspora and the LTTE and reminding them of the regime change and understanding that the representatives of the ARED must stop the protest apart from intimidating the elderly mothers.

"You cannot act like a hooligan and behave atrociously," said ARED president of the Vavuniya district Sivananthan Jenita adding "This is our country, our land, we have rights over this and we are fighting for justice to us", to which the unidentified person defiantly replied he is with Anura.

In the war of words, the elderly mothers shot back saying, "If so, get us justice from the new President" and continued the protest, the said to be supporter of AKD shouted back saying "Don't shout you dogs, will beat you black and blue", local journalists who witnessed the clash say.

Locals who witnessed the threatening of the self-styled supporter of the new President also had the audacity to tell the mothers their bank accounts would be searched and were forced to leave the place after a strong rebuttal from the unwavering mothers. Even as the first protest under the new President was intimidated, Sivananthan Jenita demanded the President to identify the person who used his name and threatened the mothers who were searching for their children who were victims of enforced disappearance.

"An inquiry should be conducted against the person who tried to scuttle our protest seeking justice for our loved ones," she told local media.

Sivananthan Jenitha reiterated their protest was a peaceful and democratic one.

"Now that the 9th President is in office; we took forward our protest in a democratic way demanding our rights. However, while we were carrying out our protest, an individual unnecessarily intervened and questioned us about how we could stage a protest. Who is this person? Who sent him? The nation and the international community should question this".

She also recalled the new President Anura Kumara Dissanayaka's message on the occasion of International Children's Day.

"By developing the children physically and mentally, we hope they would develop into good human beings with independent thinking abilities with softness through which they could win over the world" the President had said in his message.

He had also outlined his plan of action to achieve his thought as said in his message.

"We would prioritize the necessary political change with dedication to ensure the necessary economic freedom and humanism, accepting and reciprocating mutual belief and respect, creating a society with such values, and protecting the environment, which has abundant natural resources. While dedicating ourselves to that goal, we all should responsibly function to achieve it".

The President of the Vavuniya district ARED, Sivananthan Jenita further accused the past Presidents who came to power of failing to accept responsibility for the war and cheating the Tamil people and the International Community to cover up their defeat, Sivananthan Jenita added further.

"The Sri Lankan government is unable to answer our queries. They are unable to tell us where our children are, hundreds of them, whom the parents handed over to the military after the end of the war at the checkpoints. There has been no answer whatsoever. The past 8 Presidents never came forward to accept responsibility for the war yet they tried to cover it up by saying, they are not there, we did not abduct them, they are not in our custody and so on thereby deceiving the International Community and the Tamil people".

Meanwhile, the members of the ARED in Jaffna and Killinochi declared the Children's Day as a Black Day demanding accountability for their disappeared children and emphasizing justice for them, even as they undertook a protest for the same.

The protests were held in front of the International Organization for Migrants in Jaffna and before the Kanthasamy Kovil in Killinochi, where they carried banners and placards with the photos of their children who are victims of enforced disappearances, local journalists say.

Human Rights Organizations have documented at least 280 people surrendered to the military based on their announcement, just a day before the war came to an end. Among them were an 8-month-old infant and 29 children under the age of 10.

A leading global rights organization International Truth and Justice Project- has said that was the day when most children went missing on a single day globally.

The grieving mothers, grandmothers, wives, and sisters are continuing their peaceful protest continuously for over 2780 days braving sun and rain on the streets of the traditional Tamil homeland in the North and East of Sri Lanka without proper food.

Many of the protestors have lost their lives during the past 8 years without knowing the fate of their beloved ones, whom they handed over to the Sri Lankan armed forces or those who surrendered to them after their announcement guaranteeing safety and security.

None of those who were either handed over by the relatives or surrendered or made victims of enforced disappearance were ever seen again.

The Office for Missing Persons (OMP), a government body formed by an act of Parliament "to trace and find the missing persons" has not even found a single person despite thousands of petitions seeking their kith and kin were handed over to them. Tamils have rejected the OMP right from day one calling it a sham and an eyewash.

Meanwhile, the leader of the Tamil Progressive Alliance, Mano Ganesan has called upon the President to immediately arrest the person claiming to be his man and threaten the protest by the mothers in Vavuniya.

"Families of missing persons are protesting. They are continuing their protest in a democratic way. A thug calling himself Anura's man has intervened and threatened the mothers. We are not saying so on a political basis. It's not like that. He says so. So check if he is your man. See if he is using your name. Take legal action against that individual, that thug".

Mano Ganesan made this demand along with other leaders of the opposition party the Samagi Jana Balawegaya during a press conference in Colombo.

# Colombo Mass Graves: Budget Estimates Submitted for Further Digging

**- Siva Parameswaran**

In the continuing saga of mass graves in Sri Lanka, two skeletons have been found on day three of the second phase of the excavation in the latest mass grave inside the Colombo Port.

Further digging has been put on hold awaiting budget approval, the estimates of which have been submitted to the concerned authorities.

Two mass graves were found in the last two years in Sri Lanka. One was huge where over fifty skeletons and body parts were found, a final report of which has been submitted to the Mullaitivu court, while the exhumation in the other is in progress.

Forensic Archaeologist Prof. Raj Somadeva says the inquiry into the skeletons found in the mass grave inside the Colombo Port cannot be paused for a long time. Once the budget estimates are approved and the money is made available, he says the excavation is likely to begin on the 17th of October or even earlier than that.

"It could take at least another month to fully excavate the mass grave. The Budget estimate for the same has already been submitted to the Port police". When the exhumation was put on hold on the 13th of September after the first phase of excavation, at least two skeletons and four skulls were found in that mass grave. The second phase of excavation commenced on the 26th of September and ended two days later. Journalists present during this phase say they understand more skeletons to be there.

Prof. Raj Somadeva, who led the exhumation in the Kokkuthoduvai mass grave in the war-affected Mullaitivu district submitted his final report on the 26th of September to the Mullaitivu Magistrate Court.

The mass grave in Kokkuthoduvai was discovered accidentally when the water supplies department was laying pipelines along the Kokkuthoduvai Mahavidyalam-Kokkilai road on the 29th of June 2023. Body parts with pieces of clothing were found on that day. Subsequently laying of the pipes was halted and the excavation process began.

The excavation process was conducted in three phases which was closed on the 15th of July this year (2024) as per the court order.

Senior Tamil Attorney Vallipuram Sandirapragasam Niranchan who was representing the families of the victims of the Enforced Disappearances told local journalists the final report presented to the court confirmed the bodies belonged to the erstwhile LTTE cadres who were shot dead during the 1990's and buried unceremoniously with-out following the proper ritual and cultural procedures.

In the excavation at the mass grave near the Colombo Port, at least one skull of an individual was found.

Exhumation activity at the site of the mass grave inside Colombo Port began in July this year.

The first phase of exhumation at the Colombo Port mass grave was temporarily stopped on the 13th of September after 8 days of operation, during which at least two skeletons were exhumed, while four skulls were found inside the grave.

A local journalist at the site during the second excavation phase on Friday (27th September 2024) observed only one skull was recovered during the day.


The body parts found and exhumed from the mass grave during the first phase of excavation at the Colombo Port are kept in safe custody at the office of the Colombo Judicial Medical Officer.

Excavation at the huge mass grave at the Colombo Port is done under the supervision of the Colombo Judicial Medical Office Sunil Hewage and Archeological expert Prof. Raj Somadeva.

Body parts were found inside the Colombo Port when earthwork was being undertaken for the Express Highway leading towards the port. Those human remains were found for the first time in the complex which housed the old secretariat.

Upon being informed to the court, the excavation at the spot commenced on the 5th of September this year (2024) in the presence of Magistrate Bandara Ilasinghe.




**NON-PROFIT Corporation**
**Established in 2001**

**SAREGA MUSIC இசைப்பள்ளி - 24-வது ஆண்டில் !!!**
**நியூ யார்க் ராஜா - இசை அமைப்பாளர்/ஆசிரியர்**
**HAPPY NAVARATHIRI**
**விஜய தசமி | Oct 12, Saturday 2024**
புதிய வகுப்புகள் ஆரம்பம். உடனே பதிவு செய்யவும்
**Keyboards & Guitar - சினிமா பாடல்கள்**
**Please Call 416 884 7288 Or Email to Register ASAP!**
**Email: learn@saregamusic.com**
வீட்டிலிருந்தே வசதியாக Zoom வழியாக இசையை கற்கலாம்.




**New York-Raja**
**Award Winning Music Composer & Teacher**


Ginersh


Vignesh


Vaageesan


Abhiraluxmi


Pathumithaa

**5 Students Graduated in our 23rd Annual Show held on June 22, 2024 in Etobicoke.**
**We have produced 111 Graduates and 35 Music Composers & Arrangers in the last 23 years.**
$3326 was awarded to many Students as Gifts, Scholarships & Musical Instruments etc.

23 ஆண்டுகளில், 111 மாணவர்கள் பட்டம் பெற்றிருக்கிறார்கள். 35 மாணவர்கள் இசை அமைப்பாளர்களாக அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறார்கள். 23-வது ஆண்டு விழாவில் 5 மாணவர்கள் பட்டம் பெற்றார்கள். $3326 டாலர்கள் Scholarship அன்பளிப்பாக வழங்கப்பட்டன.

# MORTGAGE
# FINANCIAL SOLUTIONS

- RESIDENTIAL
- CONSTRUCTION
- COMMERCIAL
- VACANT LAND
- INDUSTRIAL




## RESIDENTIAL- COMMERCIAL

- **Purchase**
  - Builder Purchase
  - MLS Purchase
  - Private Purchase
- **Refinance**
- **Renewal**
- **Equity line of Credit**

Contact Us Today

**NESAN**
*Subramaniam*
**416-908-5656**

Office: 416-660-5656
Fax: 647-351-3099
Toll: 1-844-878-2721

1585 Markham Rd, Unit #406,
Toronto, ON. M1B 2W1
Canada

www.nesan.ca

**WE DEAL WITH ALL BANKS**

**Powered By**

MORTGAGE ALLIANCE
RightBroker=RightMortgage
Mortgage Agent level 1 Licence # M15001465
Mortgage Alliance, Brokerage #10330

Scotiabank · TD Canada Trust · National Bank · RFA · First National Financial LP · Manulife · Desjardins · MCAP · Home Trust · Equitable Bank · radius financial · RMG mortgages

இலங்கை செய்திகள் Sri Lanka News




# "நான் அனுர குமாரவுடன் இருக்கின்றேன்"

## - வவுனியாவில் தமிழ் தாய்மார்களுக்கு அச்சுறுத்தல்

யுத்தத்தின் போதும் அதன் பின்னரும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட பிள்ளைகளுக்கு நீதி கோரி வவுனியாவில் தாய்மார்களால் முன்னெடுக்கப்பட்ட போராட்டம் இலங்கையின் புதிய ஜனாதிபதியின் ஆதரவாளர் எனக் கூறிக்கொள்ளும் ஒருவரால் அச்சுறுத்தப்பட்டுள்ளது.

காணாமல் ஆக்கப்படுதலில் மிகவும் பாதிக்கப்பட்ட முதல் மூன்று நாடுகளான எல் சல்வடோர், குவாத்தமாலா மற்றும் இலங்கை ஆகிய நாடுகள் ஒக்டோபர் முதலாம் திகதி சிறுவர் தினத்தை கொண்டாடுகையில், காணாமல் ஆக்கப்பட்டுள்ள சிறுவர்களின் புகைப்படங்களை ஏந்தியவாறு இத்தினத்தை கறுப்பு தினமாக பிரகடனப்படுத்தி வவுனியா பஸ் நிலையத்திற்கு முன்பாக போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

போராட்டம் இடம்பெற்ற இடத்திற்கு வந்த ஒரு நபர், "நான் அனுர குமாரவுடன் இருக்கிறேன்" என அச்சுறுத்தி போராட்டத்தை நிறுத்துமாறு கோரியுள்ளார்.

"அப்படியானால் எங்களுக்கு நியாயத்தை பெற்றுத்தாரும்" என தாய்மார் ஒருமித்த குரலில் முழக்கமிட்டனர்.

1959 ஆம் ஆண்டு சிறுவர்களின் உரிமைகள் தொடர்பான சாசனம் மற்றும் 30 வருடங்களுக்கு பின்னர் சிறுவர் உரிமைகளுக்கான சாசனம் ஆகிய இரண்டும் ஏற்றுக்கொள்ளப்பட்ட நவம்பர் 20ஆம் திகதி உலக சிறுவர் தினமாக ஐக்கிய நாடுகள் சபையால் அறிவிக்கப்பட்டது.

போராட்டம் நடைபெறும் இடத்திற்கு வந்த ஒருவர், புலம்பெயர் தேசத்தவர்களிடமும், விடுதலைப் புலிகளிடமும் பணம் பெற்றதாகக் குற்றம் சுமத்தி, அரசாங்கம் மாறிவிட்டது எனக் கூறி, போராட்டத்தை நிறுத்துமாறு காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சங்கப் பிரதிநிதிகளை அச்சுறுத்தியுள்ளார்.

"ரௌடித் தனம், சண்டித்தனம் காட்ட முடியாது" எனக் கூறிய, வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சங்கத்தின் வவுனியா மாவட்டத் தலைவி சிவானந்தன் ஜெனிற்றா, "இது எங்கள் நாடு, எங்கள் நிலம், இதற்கு எங்களுக்கு உரிமை உண்டு. எங்களின் நீதிக்காக நாங்கள் போராடுகிறோம்" எனக் கூறியபோது, தான் அனுரகுமாரவுடன் இருப்பதாக குறித்த நபர் உறுதிபடக் கூறினார்.

அவ்வாறாயின் புதிய ஜனாதிபதியிடம் நீதியை பெற்றுத்தருமாறு கோரி தமிழ்த் தாய்மார்கள் போராட்டம் நடத்திய போது, அந்த நபர் "கத்தாத நாய், வெலுப்பன்" என குறித்த நபர் தாய்மாரை அச்சுறுத்தியதாக பிரதேச ஊடகவியலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களின் சங்க உறுப்பினர்களின் வங்கிக் கணக்குகளை சோதனையிடுவதாக அச்சுறுத்திய குறித்த நபர், தமிழ்த் தாய்மார்களின் எதிர்ப்பை அடுத்து அவ்விடத்தை விட்டுச் சென்றதாகவும் அவர்கள் குறிப்பிடுகின்றனர்.

புதிய ஜனாதிபதியின் ஆட்சியில் முதல் போராட்டத்தை அச்சுறுத்திய போதிலும் யுத்தத்தின் போது வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட சிறுவர்களுக்கு நீதி கோரி வவுனியா பஸ் நிலையத்திற்கு முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட தமிழ் தாய்மார்களுக்கு தலைமை தாங்கிய சிவானந்தன் ஜெனிற்றா, புதிய ஜனாதிபதி தெரிவாகியுள்ள நிலையில், தமது போராட்டத்தை குழப்பும் வகையில் செயற்பட்டவர் யார் என்பது தொடர்பிர் விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டுமென, ஊடகங்களுக்கு தெரிவித்தார்.

"தற்போது 9ஆவது ஜனாதிபதி வந்த வேளையில், நாம் எமக்கான உரிமைகளை தேடுவதற்கு ஜனநாயக முறையில்தான் நாங்கள் எங்கள் போராட்டத்தை மேற்கொண்டோம். ஆனால் நாங்கள் எங்கள் போராட்டத்தை மேற்கொள்கையில் ஒரு நபர் வந்து இதனை குழப்பி, இந்த ஜனாதிபதி வந்திருக்கின்றார். நீங்கள் எப்படி போராட்டத்தை முன்னெடுக்க முடியும்? என கேள்வி எழுப்புகிறார் எனின், இவர் யார்? இவரை யார் அனுப்பியது என்பதை இந்த நாட்டில் உள்ளவர்களும் சர்வதேசமும் கேட்க வேண்டும்."

"உடலாலும், உள்ளத்தாலும் ஆரோக்கியமான சிறுவர்களின் தலைமுறையை உருவாக்குவதன் மூலம், எதிர்கால உலகை வெல்லும் சுதந்திரமான கற்பனைத்திறன் கொண்ட கனிவான மற்றும் உன்னதமான மனிதர்கள் உருவாக்கப்படுவதாக நாம் நம்புகிறோம்," என ஜனாதிபதி அனுர குமார திஸாநாயக்க சிறுவர் தினத்தை முன்னிட்டு விடுத்த வாழ்த்துச் செய்தியில் தெரிவித்திருந்தார்.

"அதற்கு அவசியமான பொருளாதார சுதந்திரம் மற்றும் மனித நேயம், பரஸ்பர நம்பிக்கை, மரியாதை மற்றும் ஏற்றுக்கொள்ளுதல் ஆகியவற்றைக் கொண்ட சமூகத்தை உருவாக்குதல் மற்றும் இயற்கை வளங்கள் நிறைந்த சுற்றுச்சூழலைப் பாதுகாக்கவும் தேவையான அரசியல் மாற்றத்தை நமது முன்னுரிமைப் பணியாகக் கருதி செயற்படுத்த அர்ப்பணிப்போம். அந்தப் பொறுப்பை நிறைவேற்றுவதற்கு நாம் அனைவரும் பொறுப்புடன் செயற்படுவோம்!" எனவும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

கடந்த காலத்தில் ஆட்சிக்கு வந்த இலங்கையின் ஜனாதிபதிகள் அனைவரும் போருக்கான பொறுப்பை ஏற்கத் தவறியதாகவும், தமது தோல்வியை மறைக்க தமிழ் மக்களையும் சர்வதேச சமூகத்தையும் ஏமாற்றியதாகவும் சிவானந்தன் ஜெனிற்றா இதன்போது குற்றஞ்சாட்டினார்.

"யுத்தம் முடிவடைந்த பின்னர் சோதனை சாவடிகளில் ஒப்படைக்கப்பட்ட குழந்தைகள். நூற்றுக்கும் மேற்பட்ட குழந்தைகளை பெற்றோருடன் கையில் ஒப்படைத்தவர்களை எங்கே என சொல்ல முடியாமல் இந்த இராணுவம் எங்கு பராமரிக்கின்றார்கள் என சொல்ல முடியாத நிலையில்தான் இந்த ஸ்ரீலங்கா அரசாங்கம் ஆட்சி செய்துகொண்டிருக்கிறது. இந்த எட்டு ஜனாதிபதிகளும் யுத்தத்திற்கான பொறுப்புக்கூறலை ஏற்கத் தவறியுள்ளதோடு அதனை மூடி மறைக்கும் நோக்கில் அவர்கள் இல்லை, அவர்களை பிடிக்கவில்லை என்ற பொய்களை கூறிக்கொண்டு சர்வதேசத்தையும், இந்த தமிழ் மக்களையும் ஏமாற்றிக்கொண்டிருக்கின்றார்கள்."

யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சியில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட தமது பிள்ளைகளுக்கு நீதியும் பொறுப்புக்கூறலையும் வலியுறுத்தி சிறுவர் தினத்தை கறுப்பு தினமாக பிரகடனப்படுத்தி வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சங்கத்தின் பிரதிநிதிகள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

யாழ்ப்பாணத்தில் உள்ள புலம்பெயர்வுக்கான சர்வதேச அமைப்பின் (ஐஓஎம்) அலுவலகம் முன்பாகவும் கிளிநொச்சி கந்தசாமி கோவில் முன்பாகவும் காணாமல் ஆக்கப்பட்ட தமது பிள்ளைகளின் புகைப்படங்களை காட்சிப்படுத்தி உறவினர்கள் போராட்டத்தை முன்னெடுத்ததாக பிரதேச ஊடகவியலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இலங்கை இராணுவத்தின் அழைப்பின் பேரில், யுத்தம் முடிவடைவதற்கு முதல் நாள், சரணடைந்து காணாமல்போன 280 பேரில் எட்டு மாத குழந்தை உட்பட 10 வயதுக்குட்பட்ட 29 சிறுவர்களை மனித உரிமை அமைப்புகள் ஆவணப்படுத்தியுள்ளன.

உலகில் ஒரே நாளில் அதிகளவான சிறுவர்கள் காணாமல் போன காலம் இதுவென சர்வதேச உண்மை மற்றும் நீதி செயற்றிட்டம் (ITJP) தெரிவித்துள்ளது.



2,780 நாட்களாகத் தமிழ்த் தாய்மார்கள் வெயிலையும், மழையையும் பொருட்படுத்தாமல், சரியான ஆகாரமின்றி தொடர்ந்து வீதியில் இறங்கிப் போராடிக்கொண்டிருக்கிறார்கள்.



# இலங்கைக்கான கியூபா தூதுவர் ஜனாதிபதியுடன் சந்திப்பு

## டெங்கு ஒழிப்புக்கான நிபுணத்துவ அறிவை பகிர்ந்துகொள்ள இணக்கம்

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க மற்றும் இலங்கைக்கான கியூபா தூதுவர் அண்ட்ரஸ் மார்ஷலோ கொன்ஷாலேஸ் கொரிடோ (Andres Marcelo Gonzales Gorrido) ஆகியோருக்கு இடையிலான சந்திப்பொன்று 2ம் திகதி புதன்கிழமை அன்று முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றது.

இதன்போது இரு நாடுகளுக்கும் இடையிலான நீண்ட கால இராஜதந்திர தொடர்புகள் மற்றும் நட்புறவுகளை பலப்படுத்திக்கொள்வது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டது.

ஜனாதிபதி தேர்தலில் பெற்றுக்கொண்ட வெற்றிக்கு ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவிற்கு வாழ்த்துத் தெரிவித்த கியூபா தூதுவர், ஜனாதிபதியின் தலைமைத்துவத்திற்கு பாராட்டு தெரிவித்ததோடு, இலங்கையுடனான ஒத்துழைப்புக்களை பலப்படுத்த கியூபா எதிர்பார்த்திருப்பதாகவும் தெரிவித்தார்.

அதேபோல் டெங்கு ஒழிப்புக்கு இலங்கை அரசாங்கம் மேற்கொண்டுவரும் முயற்சிகளுக்கு கியூபா அரசாங்கத்தின் தொடர்ச்சியான ஒத்துழைப்பு வழங்கப்படுமென இதன்போது உறுதியளிக்கப்பட்டது.

டெங்கு ஒழிப்புச் செயற்பாடுகளில் கியூபா பெற்றுள்ள வெற்றிகள் தொடர்பில் சுட்டிக்காட்டிய கியூபா தூதுவர், இலங்கைக்கு டெங்கு ஒழிப்புக்கு அவசியமாக பொதுச் சுகாதார வேலைத்திட்டங்கள் தொடர்பிலான நிபுணத்துவ அறிவைப் பகிர்ந்துகொள்வதில் ஆர்வமாக இருப்பதாகவும் அறிவித்தார்.



# இலங்கைக்கான கனேடிய உயர்ஸ்தானிகர், ஜனாதிபதி அநுர குமார அவர்களைச் சந்தித்தார்



இலங்கை ஜனாதிபதியின் ஊழல் எதிர்ப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டம் மற்றும் IMF மற்றும் கடன் மறுசீரமைப்பு செயல்முறைக்கு ஆதரவு வழங்குவதாகவும் இலங்கைக்கான உயர்ஸ்தானிகர் தெரிவித்தார்.

இலங்கைக்கான கனேடிய உயர்ஸ்தானிகர் எரிக் வோல்ஷ் (Eric Walsh) 02-10-2024 அன்று முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவை சந்தித்தார்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க பெற்ற வெற்றிக்க தனதும் கனேடிய அரசாங்கத்தினதும் மக்களினதும் மனப்பூர்வமான வாழ்த்துத் தெரிவித்த கனேடியத் தூதுவர், ஊழலை ஒழித்து நாட்டில் பாதுகாப்பான சூழலை ஏற்படுத்துவதில் ஜனாதிபதி அநுர குமார திசானாயக்கவின் அர்ப்பணிப்பையும் பாராட்டினார்.

ஊழல் மற்றும் பாதுகாப்பின்மையும் வெளிநாட்டு முதலீடுகளை ஈர்ப்பதில் முக்கிய தடையாக இருப்பதாக சுட்டிக்காட்டிய எரிக் வோல்ஷ், உத்தேச சீர்திருத்தங்களின் மூலம் சர்வதேச முதலீடுகளை ஈர்ப்பதற்கான மிகவும் பொருத்தமான சூழல் இலங்கையில் உருவாகும் என நம்பிக்கை தெரிவித்தார்.

சர்வதேச நாணய நிதியத்துடனான (IMF) இலங்கை தொடர்புபட்டிருப்பது மற்றும் தற்போது முன்னெடுக்கப்பட்டு வரும் கடன் மறுசீரமைப்பு செயல்முறைக்கும் கனேடிய அரசாங்கத்தின் முழு ஆதரவையும் வழங்குவதாகவும் உயர்ஸ்தானிகர் உறுதியளித்தார்.

இலங்கை செய்திகள் Sri Lanka News

# 2030 ஆம் ஆண்டிற்குள் ஒரு டிரில்லியன் டாலர் இலக்கினை அடைய சுற்றுலாத்துறையின் பங்களிப்பு இருக்கும் வகையில் பணியாற்றிடுவோம்

## தமிழ்நாடு சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் அழைப்பு






சென்னை சுற்றுலா வளாக கூட்டரங்கில், சுற்றுலாத்துறை மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டம் மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் திரு. இரா.இராஜேந்திரன் அவர்கள் தலைமையில், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர்.பி.சந்தரமோகன், இ.ஆ.ப., அவர்கள், சுற்றுலா ஆணையர் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக மேலாண்மை இயக்குநர் திரு. சி.சமயமூர்த்தி. இ.ஆ.ப., அவர்கள் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் சுற்றுலாத்துறை மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் ஆகியவற்றின் பிரிவுகள், கட்டமைப்பு வசதிகள், செயல்பாடுகள் குறித்து உயர் அலுவலர்களிடம் கேட்டறிந்தார்.

சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை முதன்மைச் செயலாளர் அவர்கள் சுற்றுலாத்துறை குறித்து தெரிவித்ததாவது, நாட்டின் மொத்த உற்பத்தியில் 12 சதவீத பங்களிப்பினை சுற்றுலாத்துறை கொண்டுள்ளது. சுற்றுலாத்துறை பொழுதுபோக்கு சுற்றுலா, பாரம்பரிய சுற்றுலா, ஆன்மீக சுற்றுலா, பண்பாட்டு சுற்றுலா, மருத்துவச் சுற்றுலா என பல்வேறு வகைகளில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இந்த அனைத்து வகைகளிலும் தமிழ்நாட்டில் சிறப்பான வாய்ப்புகள் உள்ளதால் உள்நாட்டு சுற்றுலா பயணிகளின் வருகையில் தமிழ்நாடு இந்தியாவிலேயே முதல் இடத்தில் உள்ளது. வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் வருகையில் முன்னணி மாநிலங்களில் ஒன்றாக திகழ்கின்றது.

தமிழ்நாட்டில் 1,000 ஆண்டுகளுக்கு பழமையான 800க்கும் மேற்பட்ட கோவில்களும், இந்து சமய அறநிலையத்துறையின் கட்டுப்பாட்டில் 46,000 க்கும் மேற்பட்ட கோவில்களும் ஆன்மீக சுற்றுலாவிற்கு முக்கிய பங்களிப்பை கொண்டுள்ளன. பல நூற்றாண்டு பழமையான கிறிஸ்துவ தேவாலயங்கள், இஸ்லாமிய மசூதிகள் அனைத்து மதத்தினரும் ஆன்மீக சுற்றுலா மேற்கொள்ள வழிவகுக்கின்றன. மதுரை அழகர் திருவிழா, பழனி தைப்பூசத்திருவிழா, குலசை தசரா திருவிழா, திருச்செந்தூர் சூரசம்கார திருவிழா, வேளாங்கண்ணி மாதாகோவில் திருவிழா, நாகூர் தர்கா திருவிழாக்கள் ஆண்டுதோறும் லட்சக்கணக்கான சுற்றுலா பயணிகளை ஈர்த்து வருகின்றன. தமிழ்நாட்டின் மருத்துவ கட்டமைப்பு குறைந்த செலவில் அதிநவீன, தரமான, சிறப்பான மருத்துவத்தை அளித்து வருவதால் மருத்துவச் சுற்றுலாவில் இந்தியாவில் முதலாவது மாநிலமாக திகழ்கின்றது.

தற்போது சுற்றுலா பயணிகள் சுற்றுலா செல்லும் இடங்களில் நீங்காத அனுபவங்களை அளிக்கும் மலையேறுதல், மலைப்பகுதிகளில் தங்குதல், நீர்சறுக்கு, அலைச்சறுக்கு மேற்கொள்ளுதல் உள்ளிட்ட புதிய அனுபங்களை மேற்கொள்ள விரும்புகின்றார்கள். இவை தற்போது வளர்ச்சியடைந்து வருகின்றன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சுற்றுலாவை தொழிலாக அங்கீகரிக்கும் வகையில் சுற்றுலா கொள்கையை வெளியிட்டுள்ளார்கள். இதனால் தனியார் துறையினர் சுற்றுலாத்துறையில் அதிக அளவில் பங்கேற்க வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

சென்னை நந்தம்பாக்கம் வர்த்தக மையம், கோவை கொடீசியா, மதுரை மடீசியா ஆகிய இடங்களில் நடைபெறும் வர்த்தக கண்காட்சிகள் மிகப்பெரிய அளவில் (MICE) வர்த்தகச் சுற்றுலாவிற்கு வாய்ப்பாக அமைந்துள்ளன. தமிழ்நாடு சுற்றுலாத்துறை உலக சுற்றுலா பயணிகளை ஈர்க்கும் வகையில் தனியாருடன் இணைந்து பட்டம் விடும் திருவிழா, பலூன் திருவிழாக்களை நடத்தி வருகின்றது. பொள்ளாச்சி பலூன் திருவிழா ஒன்றிரண்டு வெப்பக்காற்று பலூன்களுடன் ஆரம்பித்து தற்போது பல வெளிநாடுகளைச் சேர்ந்த 15 க்கும் மேற்பட்ட பலூன்கள் பங்கேற்புடன் நடைபெற்று வருகின்றது.

வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் எளிதில் தமிழ்நாட்டில் சுற்றுலா மேற்கொள்ள சென்னை, திருச்சி, கோவை, மதுரை ஆகிய நான்கு சர்வதேச விமான நிலையங்களைக் கொண்டுள்ளோம். மதுரை விமான நிலையம் விரைவில் 24 மணி நேரமும் இயங்க உள்ளது வெளிநாட்டு விமானங்கள் அதிக அளவில் வருகை தர வாய்ப்பாக அமையும் என்று தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் சுற்றுலா ஆணையர் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக மேலாண்மை இயக்குநர் திரு.சி.சமயமூர்த்தி.இ.ஆ.ப., அவர்கள் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் குறித்து தெரிவித்ததாவது,

மாண்புமிகு முத்தமிழறிஞர் அவர்களால் சுற்றுலா வளர்ச்சிக்காக 1971ல் ஆரம்பிக்கப்பட்ட தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் தமிழ்நாடு முழுவதும் 26 ஓட்டல் தமிழ்நாடு தங்கும் விடுதிகளுடன் செயல்பட்டு வருகின்றன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஓட்டல் தமிழ்நாடு உணவகங்களுக்கு அமுதகம் என்று பெயர் சூட்டி உணவகங்கள் சுற்றுலா பயணிகளுக்கு எளிதில் அடையாளம் காணச் செய்துள்ளார்கள்.

மேலும் நீங்காத அனுபவங்களை தரும் வகையில் 9 படகு குழாம்கள் மூலம் சுற்றுலா பயணிகளுக்கு படகு சவாரி மேற்கொள்ள சேவை அளித்து வருகின்றது. 3 தொலைநோக்கி இல்லங்களையும் செயல்படுத்தி வருகின்றது. மேலும் 5 வால்வோ சொகுசு போருந்துகள், 6 அதிநவீன சொகுசு பேருந்துகள், 3 சிறிய ரக சொகுசு பேருந்துகள் என 14 பேருந்துகள் மூலமாக புகழ்பெற்ற திருப்பதி சுற்றுலா, மாமல்புரம் சுற்றுலா, வெளிமாநில சுற்றுலா பயணிகளின் விருப்பமான 8 நாட்கள் தமிழ்நாடு சுற்றுலா உள்ளிட்ட 52 வகையான சுற்றுலா பயணத்திட்டங்களை செயல்படுத்தி குறைந்த செலவில் பொதுமக்கள் சுற்றுலா பயணம் மேற்கொள்ள சேவையாற்றி வருகின்றது என்று தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் திரு. இரா.இராஜேந்திரன் அவர்கள் அவர்கள் பேசுகையில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வெளியிட்டுள்ள சுற்றுலா கொள்கையின் அடிப்படையில் தமிழ்நாட்டில் அதிக அளவில் சுற்றுலாத் திட்டங்களை செயல்படுத்தி வெளிநாட்டு மற்றும் வெளிமாநில சுற்றுலா பயணிகளின் வருகையை அதிகரிக்கச் செய்யும் பணிகளை மேற்கொள்வோம். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 2030 ஆம் ஆண்டிற்குள் ஒரு டிரில்லியன் டாலர் என்ற லட்சிய இலக்கினை அடைய, சுற்றுலாத்துறையின் பங்களிப்பு முதன்மையாக இருக்கும் வகையில் பணியாற்றிடுவோம் என்று சுற்றுலாத்துறை மற்றும் சுற்றுலா பங்குதாரர்களுக்கு அழைப்பு விடுத்தார்.

இக்கூட்டத்தில் சுற்றுலாத்துறை துணைச் செயலாளர் திரு.வீருசாமி, தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக பொதுமேலாளர் மற்றும் மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி. ச.கவிதா, சுற்றுலாத்துறை இணை இயக்குநர் திரு. ப.புஷ்பராஜ் உள்பட சுற்றுலாத்துறை, தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# ஈழத்தமிழர்களின் அரசியல் அபிலாசைகளை கரிசனையோடு அணுகுங்கள்

## ஜனாதிபதியிடம் முன்னாள் எம்.பி.சிறீதரன் கோரிக்கை

**- நடராசா லோகதயாளன்**

ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க அவர்களுக்கும் யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனுக்கும் இடையிலான சந்திப்பு இன்றையதினம் ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்றுள்ளது.

குறித்த சந்திப்பின் போது, இலங்கையின் 9வது ஜனாதிபதியாக பொறுப்பேற்றுள்ள ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கவுக்கு வாழ்த்துரைத்த சிறீதரன், ஈழத்தமிழ் மக்களின் எதிர்பார்ப்பையும் நிலைப்பாட்டையும் பிரதிபலிக்கும் எழுத்துமூல கோரிக்கைக் கடிதம் ஒன்றையும் ஜனாதிபதியிடம் நேரில் கையளித்துள்ளார்.

குறித்த கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது, காலமாறுதல்களின் அடிப்படையில், இந்த நாட்டில் ஆட்சி மாற்றம் ஒன்றை எதிர்பார்த்த எமது மக்களின் ஆணையை ஏற்று, இலங்கைத் தீவின் 9வது சனாதிபதியாகப் பொறுப்பேற்றுள்ள தங்களுக்கு எனது மனப்பூர்வமான வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தங்களின் ஆட்சி, அதிகாரங்களின் மீது இந்த நாட்டின் பெரும்பான்மை மக்கள் கொண்டுள்ள எதிர்பார்ப்பைப் போலவே, இலங்கைத் தீவின் சுதேசிய இனத்தவர்களான தமிழர்களும், தமது அடிப்படை உரித்துகள் மீதான சாதக நகர்வுகள் தங்கள் ஆட்சிக்காலத்திலேனும் ஈடேறும் என்ற எதிர்பார்ப்போடு இருக்கிறார்கள் என்ற செய்தியை, அந்த மக்களின் பிரதிநிதியாக தங்களிடத்தே பதிவுசெய்ய விரும்புகிறேன்.



கடந்த ஏழரைதசாப்த காலமாக இந்த நாட்டில், ஈழத்தமிழர்கள் எதிர்கொள்ள நேர்ந்த இனவன்முறைப் பாதிப்புகள், அவற்றுக்கு நீதிகோரி மூன்று தசாப்தங்களாக நிகழ்ந்தேறிய போரின் விளைவுகள், போர் மௌனிக்கப்பட்ட பின்னரும் தமிழர் தாயகமான வடக்கு - கிழக்கில் வலிந்து மேற்கொள்ளப்படும் கட்டமைக்கப்பட்ட இன, மத, மொழி மற்றும் கலாசாரப் படுகொலைகள், கைதுகள், காணமலாக்கல்கள் உள்ளிட்ட துயரச் சம்பவங்கள் தினம்தினம் அரங்கேற்றப்பட்டு வருவதை அறிந்திருப்பதைப் போலவே, தங்கள் ஆட்சியில் அத்தகைய துயர வரலாறுகள் இடம்பெறாதிருக்கும் என்ற எமது மக்களின் ஏகோபித்த நம்பிக்கையையும் தாங்கள் கரிசனையோடு அணுகுவீர்கள் என எதிர்பார்க்கிறேன்.

அந்தவகையில், வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களுக்கான சர்வதேச நீதி, மீள நிகழாமையை உறுதிசெய்தல், தமிழ் அரசியற்கைதிகளின் விடுதலை, மதத்தின் பெயரால் நடைபெறும் நிலப்பறிப்புகள் உள்ளிட்ட விடயங்களில் தங்களின் துரிதமானதும், சாதகமானதுமான நகர்வுகளையும், நடவடிக்கைகளையும் கோரி நிற்கிறேன்.


சமநேரத்தில், போர்க்காலச் சூழலில் இனத்திற்காகப் போராடி மடிந்த தமது புதல்வர்களை நினைவேந்தும் உரிமை கூட மறுக்கப்பட்ட இந்த தேசத்தில், போரியல் இயக்கம் ஒன்றின் வழிவந்த ஒருவராக எமது மக்களின் அக உணர்வுகளையும், அதிலுள்ள நியாயாதிக்கங்களையும் உணர்ந்து செயற்படும் மக்கள் தலைவராக, நாட்டின் நல்லிணக்கத்திற்கு துளியேனும் பாதிப்பை ஏற்படுத்தாத, உணர்வுநிலைப்பட்ட நினைவேந்தல்களை மேற்கொள்வதற்கு, எமது மக்களுக்கு இருக்கும் அடிப்படை உரித்தை உறுதிசெய்ய வேண்டுமென்றும் தங்களைத் தயவோடு கோரிநிற்கிறேன்.

அதற்கமைய, ஈழத்தமிழர்களின் அடிப்படை எதிர்பார்ப்புகளையும், அபிலாசைகளையும் உணர்ந்தும், ஏற்றும் செயற்படத்தக்க அரசியற் கூருணர்வும், சகோதரத்துவமும் மிக்க தங்களின் ஆட்சிக்காலம், இலங்கைத் தீவின் துயர வரலாறுகளை மீள நிகழ்த்தாத காலமாக, தேசிய இனப்பிரச்சினைக்கான நிரந்தரத் தீர்வு நோக்கிய வரலாற்றின் திருப்பங்கள் நிகழும் காலமாக அமையவேண்டுமெனக் கோருவதோடு, அத்தகைய நகர்வுகள் சார்ந்த தங்களின் பயணத்தில் எமது பரிபூரண ஒத்துழைப்பு உங்களோடு இருக்கும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். என்றுள்ளது.

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# மதுபானசாலைகளின் அனுமதிப்பத்திரமும் அரசியல்வாதிகளின் நாடகமும்

## நான் அனுமதிப்பத்திரம் விற்பனை செய்யவில்லை சிபாரிசுக் கடிதம் மட்டுமே வழங்கினேன் என்று மக்களை ஏமாற்றும் - சி.வி.விக்னேஸ்வரன்



**- எஸ்.ஆர்.ராஜா**

இலங்கையில் மதுபானசாலைகளின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது. இது சமூகத்தில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. மதுபானசாலைகள் அதிகரிக்கும் போது அங்கு பாரிய குற்றச்செயல்கள் இடம்பெறுவதற்கான அடித்தளங்கள் திறக்கப்படுவதாகவே கருதவேண்டும். இம் மதுபானசாலைகள் திறக்கப்படும் இடம் தொடர்பான முன்னர் பல வரையறைகள் காணப்பட்டன. அதாவது பாடசாலைகள், ஆலயங்கள், பொது நிறுவனங்கள் போன்ற முக்கிய நிறுவனங்களுக்கு அருகில் இவை அமைக்கப்படக் கூடாது என்பது பொதுவான விதிமுறை.

இத்தகைய விதிமுறைகள் முன்னர் கடைப்பிடிக்கப்பட்டு வந்தாலும் தற்போது பாராளுமன்ற உறுப்பினர்களின் சிபார்சின் பேரில் மதுபானசாலைகள் அமைப்பதற்கான அனுமதியானது வழங்கப்பட்டு வருகின்றமையினால் அத்தகைய மதுபானசாலைகளை நிறுவுதற்கான இடம் தொடர்பில் எவரும் கவனம் செலுத்துவதாக தெரியவில்லை. இதன் காரணமாக குடிமனைகள், பாடசாலைகள், வணக்கஸ்தலங்கள் என எவற்றினையும் கருத்தில் கொள்ளாது தமக்கு பிடித்த இடங்களில் எல்லாம் மதுபானசாலைகள் அமைக்கப்பட்டு வருகின்றன. இது அரசியல் மயப்படுத்தப்பட்டுக் காணப்படுவதால் எவராலும் எதிர்த்துக் குரல் கொடுக்க முடியாது காணப்படுகின்றமை உண்மையே.

அண்மையில் ஜனாதிபதியாக பொறுப்பேற்ற அனுரகுமார திஸநாயக்க அவர்கள் அண்மையில் தேர்தலில் வெற்றி பெறும் நோக்குடன் அரசியல் வாதிகளை வளைப்பதற்காக வழங்கப்பட்ட அனைத்து மதுபானசாலை அனுமதிப்பத்திரங்களும் இரத்துச் செய்யப்பட வேண்டும் என அறிவித்ததைத் தொடர்ந்து பாரிய சிக்கல் நிலை தோன்றியுள்ளது. அதுமட்டுமன்றி பல்வேறு அரசியல் பிரமுகர்களும் இவ் அனுமதிப்பத்திரங்களைப் பெற்று பாரிய தொகையினை வருமானமாக ஈட்டியுள்ளமையும், சிபார்சுக் கடிதம் வழங்கி பணம் பெற்றுள்ளமையும் வெளியாகியுள்ளது.

கடந்த இரண்டு வருடங்களில் இதுவரையில் 180 இற்கும் மேற்பட்ட மதுபானசாலைக்கான அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. அந்தவகையில் இலங்கையில் ஒவ்வொரு மாவட்டத்திலும் அதிகளவான மதுபானசாலைகள் புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ளன.

இந்தவகையில் மலையகத்தில் தேர்தல் காலங்களில் அதிகளவான புதிய மதுபானசாலைகள் உருவாக்கப்பட்டதாகவும் இவற்றை தடுக்குமாறு பொதுமக்கள் - நலன்விரும்பிகள் அரசியல் வாதிகளை கேட்டுக்கொண்டபோது அது கொழும்பு அரசாங்கத்தின் தீர்மானம் அதை நாம் எதுவும் செய்ய முடியாது என்று கூறி நழுவிச் சென்றார்கள். ஆனால் ஜனாதிபதித் தேர்தலின் பின் அனுரகுமார திஸ ாநாயக்க வெற்றி பெற்ற பின் புதிய மதுபானசாலை தொடர்பான அரசியல் வாதிகளின் தலையீடுகள் அனைத்தும் வெளியில் வந்துள்ளன.

அத்துடன் வடக்குக் கிழக்கில் பல அரசியல் வாதிகளும் இவ்வாறு மதுபானசாலை அனுமதிப் பத்திரங்களை பெற்று அவற்றின் மூலம் பணம் சம்பாதித்த விடயம் தற்போது ஒவ்வொன்றாக வெளிவரத் தொடங்கியுள்ளது. அந்தவகையில் தேர்தல் காலத்தில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஸ்ரீதரன் அவர்களின் பெயரில் கிளிநொச்சி பரந்தன் சந்தியில் மதுபானசாலை ஒன்று உள்ளதாக செய்தி வெளியாகி பின்னர் அது பொய்யான தகவல் என்று அவர் தெரிவித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

அதேபோல் அண்மையில் தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமன சி.வி.விக்னேஸ்வரனினால் கிளிநொச்சியில் வழங்கப்பட்டுள்ள மதுபானசாலை அனுமதி பத்திரங்களில் அவரின் கோட்டாவில் வழங்கப்பட்டுள்ளதாக சர்ச்சையை ஏற்படுத்தி இருந்தது. இந்த விடயம் தொடர்பாக பல்வேறு ஊடகங்களில் செய்திகள் வெளியாகியிருந்தது.

குறித்த சர்ச்சைக்குரிய கருத்துத் தெரிவித்து அறிக்கை ஒன்றை வெளியிட்ட சி.வி.விக்னேஸ்வரன் இவ் மதுபானசாலை அனுமதி பத்திரத்தினை தாய் தந்தை அற்ற ஒரு பெண்மணிக்கே பெற்றுக் கொடுத்தேனே அன்றி நான் எடுக்கவில்லை என தெரிவித்துள்ளார்.

இதேவேளை, கிளிநொச்சி மாவட்டத்தின் கரடிப்போக்குச் சந்தியில் இயங்கும் மதுபான சாலை ஒன்றுக்கான அனுமதி வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்னேஸ்வரன் ஊடாகப் பெற்றமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

மதுபானசாலைக்கான அனுமதி

ரணில் விக்ரமசிங்க ஆட்சியில் மக்கள் பிரதிநிதிகள் பலருக்கு சட்டவிரோத மதுபானசாலை அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளதாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் குற்றஞ்சாட்டியுள்ளார்.

அந்தவகையில் முன்னாள் நீதியரசர் விக்னேஸ்வரனின் சிபார்சின் அடிப்படையில் மதுபானசாலை அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டுள்ளதாக ஆதாரத்துடன் தகவல் வெளியாகியுள்ளதாக எம்.ஏ.சுமந்திரன் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் அங்கஜன் இராமநாதனின் தந்தையின் சிபார்சின் பேரிலும் ஒரு மதுபானசாலைக்கான அனுமதி வழங்கப்பட்டதற்கான கடிதம் கூட வெளிவந்திருந்தது.

இவ்வாறு ஒவ்வொருவர் தொடர்பாகவும் நாளுக்கு நாள் தகவல்கள் வெளியாகியுள்ளன. அந்தவகையில் ஒவ்வொரு பாராளுமன்ற உறுப்பினர்களும் தங்களுக்குக் கிடைக்கும் கோட்டாக்களை மக்களின் நலன்களுக்காக பயன்படுத்தாது தமது தனிப்பட்ட வருமானத்தைப் பெருக்கிக் கொள்ளும் நோக்குடனேயே செயற்பட்டு வந்தார்கள்.

இதேவேளை, கடந்த புதன்கிழமை 02.10.2024 அன்று ஊடகவியலாளர்களைச் சந்தித்த எம்.ஏ.சுமந்திரன் கடந்த ஆட்சியில் மதுபானசாலை உரிமைப் பத்திரங்களை பெற்று வழங்கிய முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள், அரசியல்வாதிகள் அனைவரது பெயர்களையும் தற்போதைய அரசு உடனடியாகப் பகிரங்கப்படுத்த வேண்டும் என தெரிவித்துள்ளார்.

இவ்வாறான அறிக்கை விரைவில் வெளிவந்தால் எந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் அல்லது அரசியல்வாதிகள் சிபாரிசு செய்து அதிகூடிய மதுபானக் கடைகள் திறக்கப்பட்டுள்ளன என்பது மக்களுக்குத் தெரிய வேண்டும் எனவும் அது உடனடியாக அதுவும் தேர்தலுக்கு முன்னர் வழங்கப்படவேண்டும் எனவும் அவ்வாறு வழங்கப்பட்டாலே மக்கள் அரசியல் வாதிகளின் முகத்தினை இனங்காண முடியும்.

தற்போதைய ஜனாதிபதி எடுத்துவரும் அதிரடி நடவடிக்கைகளில் ஒன்றாக இது கருதப்படவேண்டியுள்ளது. எனெனில் இவ்வாறு மதுபானசாலை அனுமதிப்பத்திரம் தொடர்பான சர்ச்கை வெளியாகிக் கொண்டிருக்கும் போது மதுபானம் தொடர்பான மற்றொரு அதிரடி நடவடிக்கை ஒன்றை எடுத்துள்ளார்.

பெருந்தொகையான வரியை செலுத்தாத மதுபானசாலை உரிமையாளர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்கும்படி, ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க உத்தரவிட்டுள்ளதாக, இலங்கை மதுவரி திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்நிலையில் நிலுவைத் தொகையை செலுத்தத் தவறிய மதுபான ஆலைகளுக்கு இனி அனுமதி இல்லை என திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் எம்.ஜே.குணசிறி தெரிவித்துள்ளார்.

மதுபான சாலைகளின் வரி நாட்டுக்கு முக்கியமானது இவ் வருமானத்தின் அடிப்படையில் பாதிய வேலைத்திட்டங்களை மேற்கொள்ள முடியும். அந்தவகையில் 2023 - 2024 ஆம் ஆண்டுக்கான வரி நிலுவையாக 1.8 பில்லியன் ரூபா உள்ளதாக குறிப்பிட்ட அவர், நிலுவைத் தொகையை எதிர்வரும் நவம்பர் 30 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்தாத மதுபான உற்பத்தியாளர்களின் 2025 ஆம் ஆண்டிற்கான உரிமத்தை நீட்டிக்க வேண்டாம் என்று, ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் நின்று விடாது நிலுவைத்தொகையை குறிப்பிட்ட காலத்திற்குள் செலுத்தாத மதுபான உற்பத்தியாளர்களின் 2025 ஆம் ஆண்டுக்கான அனுமதிப்பத்திரத்தை இரத்துச் செய்த அவற்றை புதியவர்களுக்கு வழங்க வேண்டும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

எனவே ஒட்டுமொத்தத்தில் ஜனாதிபதி எடுத்துள்ள இன் நடவடிக்கையானது நாட்டின் மதுபானம் தொடர்பான சில சட்டவிரோத செயற்பாடுகள் அனைத்தும் முடிவுக்கு வருவதுடன் மக்களுக்கு பல்வேறு நன்மைகளை அது பெற்றுக் கொடுப்பதாக உள்ளது.

இந்தவகையில் மதுபானங்களின் குடியினால் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் உட்பட அத்துடன் துன்பத்னை அனுபவிக்கும் பெரும்பாலான மக்களின் வாக்குகள் ஜனாதிபதிக்கு பலம் சேர்க்கும் என்பதில் ஐயமில்லை.

ஜனாதிபதி மேற்படி மதுபானசாலை தொடர்பான அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொண்டவர்களின் பெயர்கள் வெளிவந்ததும் தமிழ் மக்கள் பொதுவாக வடக்குக் கிழக்கில் உள்ளவர்கள் தமது அரசியல் தலைமைகளில் நிலைமை தொடர்பாக அறிந்து கொள்ளலாம்.

வடக்குக் கிழக்கில் உள்ள மக்கள் இம்முறை தேர்தலில் ஊழல்வாதிகள், சுயநலவாதிகள், மற்றும் பெரும்பாண்மை இன ஊழல் வாதிகளுக்கு சாமரம் வீசும் நபர்களை இனங்கண்டு நிராகரிப்பதுடன் இளமைத் துடிப்பும் இனப்பற்றும், சிறந்த கல்விப் பின்புலமும் அரசியல் சார்பான அறிவினையும் உடைய நபர்களை இனங்கண்டு அவர்களின் இலக்கத்திற்கு வாக்களிப்பதன் மூலம், எம் மக்களை விற்றுப் பிளைப்பு நடத்தும் அரசியல்வாதிகள், சுயநலவாதிகளை நிராகரிக்க முடியும் என்பது உண்மையே.

# ரணிலின் உறவினர் என நம்பப்படுபவரால் பூநகரியில் மண் அகழ்வதற்கு மேற்கொண்ட முயற்சிக்குத் "ஆப்பு"



**- நடராசா லோகதயாளன்**

கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரிப் பிரதேச செயலாளர் பிரிவில் பரமன்கிராய் பகுதியில் 130 ஏக்கர் நிலத்தில் 02-10-2024 அன்றுமுதல் முன்னாள் ஜனாதிபதி ரணிலின் உறவினர் என நம்ப்பப்படுபவரின் பெயரில் உள்ள நிறுவனத்திற்கு மணல் அகழப்பட மேற்கொண்ட முயற்சி மாவட்ட மற்றும் மாகாண அரச திணைக்களங்களால் இடை நிறுத்தப் பரிந்துரைத்துள்ளனர்.

பூநகரி பரமன்கிராயில் காணிச் சீர்திருத்த ஆணைக் குழுவின் ஆளுகையில் உள்ள நிலத்திலேயே இவ்வாறு மணல் அகழ்வதற்காக அன்றைய தினம் கனரக வாகனங்கள் சகிதம் அப்பகுதிக்கு வருகைதந்தபோது அங்கே சகல தரப்பினரும் ஆய்வில் ஈடுபட்டனர்.

இதில் பூநகரி பிரதேச செயலாளரின் பிரதிநிதி, பரமன்கிராய் கிராம சேவகர், காணிச் சீர்திருத்த ஆணைக் குழுவின் பிரதிநிதிகள், புவிச்சரிதவியல் அளவை சுரங்கங்கள் பணியகத்தின் பிராந்திய பொறியியலாளர் உட்பட பலரும் கலந்துகொண்டனர்.

இப் பகுதியில் மணல் அகழப்படவுள்ள பகுதியைச் சூழ பெருமளவு மக்கள் வாழ்கின்றபோதும் அவை தொடர்பில் கருத்தில் எடுக்கப்படாது இதற்கான ஏற்பாட்டினை 2024-09-26 அன்று புவிச்சரிதவியல் அளவை சுரங்கங்கள் பணியகத்தின் பிராந்திய பொறியியலாளர் வழங்கியதான மக்கள் கருத்து, அப்பகுதி நிலம் எமது ஆளுகைக்கு உட்பட்ட நிலம்தான் ஆனால் எவருக்கும் பாரப்படுத்தப்படாதபோதும் தமக்குச் சொந்தம் என பெருந்தோட்டச் சபை உரிமை கோரி நிற்பதோடு இந்த மணல் அகழ்விற்கான அனுமதிகளையும் அவர்களே வழங்கியுள்ளதாக காணிச் சீர்திருத்த ஆணைக்குழு தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இதேநேரம் இப் பகுதியில் வாழும் எமக்கு பெரும் ஆபத்தை ஏற்படுத்தும் வகையிலான இந்த ஆபத்தை அனைவரும் தடுத்து நிறுத்த வேண்டும் என அப்பகுதி மக்களும் கோரிக்கை விடுக்கின்றனர்.

எனவே இதுதொடர்பில் மாவட்ட அரச அதிபர் மற்றும் மாகாண ஆளுநரின் கவனத்திற்கு கொண்டு சென்று தீர்வைப் பெறும் வரையில் எந்த நடவடிக்கையும் எடுக்க கூடாது என பிரதேச செயலாளர் தரப்பில் தெரிவிக்கப்பட்டு பணிகள் யாவும் இடை நிறுத்தப்பட வேண்டும் என பணிக்கப்பட்டது.

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# சர்வதேச முதியோர் வாரத்தை முன்னிட்டு யாழ்ப்பாணத்தில் முதியோர்கள் கௌரவிப்பு நிகழ்வு!



சர்வதேச முதியோர் தின வாரத்தை முன்னிட்டு கோப்பாய் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட வறுமை கோட்டுக்கு உட்பட்டு வாழும் தெரிவு செய்யப்பட்ட முதியவர்களை கௌரவிக்கும் நிகழ்வு கோப்பாய் நவ மங்கை நிவாசத்தில் இடம்பெற்றது.



நவமங்கை நிவாச நிறுவனர் சுவர்ணா நவரட்ணம் தலைமையில் இடம் பெற்ற குறித்த நிகழ்வில் விருந்தினர்களாக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன், வட மாக-ாண பிரதம செயலாளர் லக்ஷ்மன் இளங்கோவன் மற்றும் கோப்பாய் பிரதேச செயலாளர் சிவசிறி ஆகியோர் கலந்து கொண்டனர்.

குறித்த நிகழ்வில் 30க்கும் மேற்பட்ட முதியவர்கள் கௌரவிக்கப்பட்டதுடன் அவர்களுக்கு தல 5 ஆயிரம் ரூபாய் பெறுமதியான உலர் உணவுப் பொருட்களும் வழங்கி வைக்கப்பட்டதுடன் சேலைகள் மற்றும் வேட்டிகளும் வழங்கி வைக்கப்பட்டதன.

இதன் போது எதிர்வரும் 8ஆம் திகதி கோப்பாய் பிரதேச செயலகத்தில் இடம்பெறவுள்ள முதியோர் தின விழாவுக்காக 25 சேலைகள் பிரதேச செயலக உத்தியோகத்தரிடம் வழங்கி வைக்கப்பட்டன.

# யாழ்ப்பாணத்தில் 2024 ஆம் ஆண்டுக்கான விவசாயக் கண்காட்சி



(03-10-2024)

“காலநிலை மாற்றத்தை எதிர்கொண்டு சூழல் நேயமான நிலைபேறான விவசாய யுகம் நோக்கி” என்ற தொனிப் பொருளில் வடக்கு மாகாண விவசாய கண்காட்சி திருநெல்வேலியில் அமைந்துள்ள மாவட்ட விவசாய பயிற்சி நிலையத்தில் 02-10-2024 அன்று ஆரம்பமாகி நடைபெற்றது.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகன் அவர்கள் நாடா வெட்டி ஆரம்பித்து வைத்தார்.

இந் நிகழ்வில் சிறப்பு விருந்தினராக வடக்கு மாகாணப் பிரதம செயலாளர் இ.இளங்கோவன், கௌரவ விருந்தினராக வடக்கு மாகாண விவசாய அமைச்சின் செயலாளர் திரு.ம.ஜெகூ அவர்களும் கலந்து சிறப்பித்ததுடன் அரச. அதிகாரிகள், விவசாயிகள்,பாடசாலை மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் உரையாற்றிய கௌரவ ஆளுநர், எமது பிரதேசம் விவசாயத்திற்கு சிறந்த பிரதேசமாக விளங்குகின்ற போதும் இன்று விவசாயிகளின் வாழ்வாதாரம் மிகவும் பாதிப்படைந்து உள்ளது.

இந்நிலைமையை மாற்றியமைத்து விவசாயிகளின் வாழ்வாதாரத்தை உயர்த்த வேண்டும் என்பதுடன் விவசாயிகள் காலநிலை மாற்றத்திற்கு ஏற்ப நவீன முறைகளை உட்புகுத்த வேண்டிய தேவை உள்ளது. நவீன முறைகளை



பின்பற்றாவிட்டால் அவர்களின் உற்பத்தியில் பாதிப்பு ஏற்படுவதோடு விவசாயத்தை கைவிடும் நிலைக்கு தள்ளப்படுவார்கள் எனவும் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து உரையாற்றும் போது விவசாயிகளுக்கு முக்கியமான பிரச்சினையாக காணப்படுவது சந்தைப்படுத்தலே. அவர்களின் உற்பத்தியை நியாயமான விலையில் சந்தைப்படுத்துவதற்கு உரிய சந்தை வாய்ப்புக்களை பெற்றுக் கொடுக்க வேண்டும் எனவும் விவசாயிகள் கஷ்டப்பட்டு உற்பத்தி செய்யும் பொருட்களுக்கு சந்தையில் இடைத் தரகர்களால் அவர்களது உழைப்பு சுரண்டபடுகின்ற நிலையே காணப்படுகின்றது. எனவும் இன்றைய கால இளைஞர்களில் மிகக்குறைவானவர்களே விவசாயத்தில் ஈடுபடுவதாகவும் அவர்களது ஆர்வம் குறைந்து வருவதாகவும் இன்றும் வயதானவர்களே விவசாயத்தில் அதிக நாட்டம் கொண்டவர்களாக காணப்படுகின்றனர். எனவும் குறிப்பிட்டார்.

மேலும் நான் விவசாயத்தில் பங்கு பற்றியவன் என்ற வகையில் விவசாயிகளது பிரச்சனை தனக்கு நன்றாக தெரியும் எனக், கூறியதுடன் தரகர்களின் தலையீடுகள் இயன்ற அளவு தடுக்கப்பட வேண்டும் அதற்காக அனைவரும் ஒன்றாக உழைக்க வேண்டும். எனவும் விவசாயிகளின் வருமானம் உயர்த்தப்பட இவ்வாறான கண்காட்சி ஏனைய மாவட்டங்களிலும் மாவட்டங்களுக்கு உரிய பயிர் வகைகளோடு இடம்பெற வேண்டுமெனவும் இக் கண்காட்சி அனைத்து மட்ட மக்களையும் சென்றடைய வேண்டும் எனவும் தனது பிரதம விதத்தினர் உரையில் குறிப்பிட்டார்.

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# யாழ்ப்பாணத்தில் கைப்பேசி விளையாட்டுக்கு அடிமையான சிறுவன் தவறான முடிவெடுத்து உயிரை மாய்த்துக்கொண்டார்

யாழ்ப்பாணத்தில் கைப்பேசி விளையாட்டுக்கு அடிமையான சிறுவன் தவ-றான முடிவெடுத்து உயிரை மாய்த்துக் கொண்ட சம்பவம் வட மாகாணத்தில் அதிர்ச்சி அலைகளை ஏற்படுத்தியுள்ளது.

கைப்பேசி விளையாட்டுக்கு அடிமையாகிய சிறுவன் ஒருவன் 3ம் தி-கதி வியாழக்கிழமை அன்றையதினம் தவறான முடிவெடுத்து தூக்கிட்டு உயிர்மாய்த்துள்ளளான். யாழ்ப்பாணம் பெரியபுலம் மகா வித்தியாலயத்தில் தரம் 11இல் கல்வி கற்கும், லோட்டஸ் வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம் பகுத-ியைச் சேர்ந்த தவசுதன் சாருஜன் (வயது 15) என்ற மாணவனே இவ்வாறு உயிரிழந்துள்ளான்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில், குறித்த மாணவன் கசநந கசைந என்ற கைப்பேசி விளையாட்டிற்கு அடிமையாகிய நிலையில் கடந்த 3 மாதங்களாக பாடசாலைக்கும் செல்லவில்லை. கிராம சேவகர், அதிபர், ஆசிரியர்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் வந்து, பாடசாலைக்கு வருமாறு கோரியும் பாடசாலைக்கு செல்லவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில் குறித்த மாணவனின் கைப்பேசியினை தந்தை பறித்துள்ளார். இதனால் குறித்த மாணவன் 25.10.2024 அன்று வீட்டினை விட்டு வெளியேறி சென்றுள்ளான். இது குறித்து பெற்றோர் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்திலும் முறைப்பாடு பதிவு செய்தனர்.

குறித்த மாணவன் பரந்தனில் உள்ள தமது வீட்டில் நின்றதாக கூறி உறவினர் ஒருவர் அவனை 2ம் திகதி புதன் இரவு வீட்டிற்கு அழைத்து வந்து பெற்றோருடன் சேர்ப்பித்தார். அந்த மாணவன் 3ம் திகதி அன்று அதிகாலை 2 மணிவரை குறித்த கேமினை விளையாடிவிட்டு வீட்டிற்கு அருகேயுள்ள காணியில் தூக்கிட்டு உயிர்மாய்த்துள்ளான்.

இந்நிலையில் மாணவனது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். உடற்கூற்று பரி-சோதனைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.



# இந்தியப் பிரதமரின் அண்மைய அமெரிக்க வருகை

உலக செய்திகள்
World News

குவாட் உச்சிமாநாட்டுக்கூட்டத்தில் கலந்து கொள்ள அமெரிக்காவுக்கு வருகையளித்திருந்த மாண்புமிகு இந்தியத் தலைமை அமைச்சர், திரு. நரேந்திர மோடி அவர்கள் கலந்து கொண்ட சமூக வரவேற்பு, கலைப் பண்பாட்டு விழா, நியூயார்க் பெருநகரில் செப்டம்பர் 22, 2024 ஆம் நாள் இடம் பெற்றது.



- வட அமெரிக்கத் தமிழ்ச்சங்கப் பேரவைக்கும் அழைப்பு விடுக்கப்பட்டு, பேரவை வாயிலாக விழாவுக்குப் பதிவு செய்திருந்தோருக்கு சிறப்பு வர-ிசையில் அமர இடங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டு இருந்தன.

- காலை நேரத்தில் இடம் பெற்ற மாண்புமிகு இந்திய அயலகத்துறை அமைச்சர் முனைவர். S. ஜெய்ஷங்கர் அவர்களுடனான கலந்துரையாடற்கூட்டத்திலும் பேரவைக்குழுவினர் விழாக்குழுவினரின் முன்னழைப்பின் பெயரில் கலந்துகொண்டனர்.

- இந்தியத் தூதரக அலுவலர்கள், அமைச்சரக அலுவலர்களுக்கு பேரவைச்செயற்குழுவினர் அறிமு-கம் செய்து வைக்கப்பட்டு, தொடர்புகளுக்கான வழிவகைகள் மேற்கொள்ளப்பட்டன.

- பிற்பகலில் இந்தியப் பிரதமர் கலந்து கொண்ட பண்பாட்டு விழாவில், சிறப்பு இருக்கைகள் அளிக்கப்பட்டு, பிரதமருக்கு செயற்குழுவினர் அறிமுகம் செய்து வைக்கப்பட்டனர்.

- பிரதமர் அவர்களை வரவேற்பதில் தங்கள் மகிழ்வையும், உலகெங்கும் அவரது முயற்சியால் நிறுவப்படவுள்ள “திருவள்ளுவர் பண்பாட்டு மையங்களுக்கு” தங்களது நன்றிகளையும் செயற்குழுவினர் தெரிவித்துக் கொண்டனர்.

- அயலக மண்ணில் ஆற்றிவரும் சமூகப்பணிகளுக்குத் தம் வாழ்த்துகளையும் நன்றிகளையும் தெரிவித்துக் கொள்வதாக பிர-தமர் வாழ்த்துரைக்க, பேரவைச் செயற்குழுவினருடன் நிழற்படமும் எடுத்துக் கொள்ளப்பட்டது.

- தமிழ்ச்சமூகத்துக்கான பணிகளை மென்மேலும் வளர்த்துக் கொள்ள இணைந்து பணியாற்றுவோமென அமைச்சரக அலுவலர்கள் பேரவைச் செயற்குழுவினரிடம் நம்பிக்கை தெரிவித்துக் கொண்டனர்.

- விழாவுக்கான ஏற்பாடுகளைச் செய்தும், பேரவையினருக்கு வாய்ப்பளித்துச் சிறப்பளித்தும், பேரவைக்குழுவினரை “தேசிய ஆலோசனைக்குழு உறுப்பினர்”களாக அங்கீகரித்தும் நிகழ்ச்சிக்கு வரவேற்ற, இந்திய அமெரிக்கர் சமூக அமைப்பின் (IACU) விழாக்குழுத்தலைவர் மரு. பரத் பராய் அவர்களைச் சந்தித்து, பேரவைத்தலைவர் நன்றி தெரிவித்துக் கொண்டதோடு, பேரவைப் பணிகளுக்கும் ஆதரவளிக்குமாறு வேண்டிக் கொண்டார்.





# தமிழ் தேசிய அரசியல் பண முதலைகளிடம் விலைபோய்விட்டதா?

இலங்கை செய்திகள்
Sri Lanka News



லைக்காவின் பணத்தின் மூலம் ஒரு தமிழ் தேசிய கட்சி உருவாக்கம் பெற ஆரம்பித்திருப்பதாக தகவல்,

இந்த நாசகார அரசியல் சதியினால் பயன்படப் போகின்றவர்கள் மகிந்தாவும் கோட்டாபாயவும் தான் என்பதும் சில அரசியல் அவதானிகளால் உணரப்பட்டுள்ளதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. காரணம். மகிந்தா மற்றும் கோட்டாபாய ரணில் ஆகியோரின் நெருங்கிய நண்பரான லைகா அதிபர் சுபாஸ்கரன், அவர்களின் வீழ்ச்சியை தாங்கிக் கொள்ளவில்லை என்பதும் கொழும்பில் பேசப்படும் ஒன்றாக உள்ளது என அறியப்படுகிறது.

இந்த கட்சி தொடர்பாக, அதன்பொருட்டு டெலோ செல்வம் அடைக்கலநாதன், ஸ்ரீதரன், மணிவண்ணன் உட்பட பல்வேறு தரப்பினர் அணுகப்பட்டு ஒரு இணக்கம் எட்டப்பட்டிருப்பதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. இதுதொடர்பிலான உண்மை நிலவரங்கள் விரைவில் தெரியவரலாம்..! யார் யார் ஒன்று சேர்கிறார்கள், யார் யார் ஒரு கட்சியில் இருந்துகொண்டு மறுபக்கம் முதலைகள் பிடியில் சிக்கியிருக்கிறார்கள் என்பது விரைவில் தெரியவரும்!

தமிழ் தேசிய அரசியல் பண முதலைகளிடம் விலைபோய்விட்டன, சங்கு சின்னத்தில் பொதுவேட்பாளர் ஒருவரை நிறுத்தும் தெரிவு கூட அப்படியான ஒன்றின் அடிப்படை தான் என்று பலமுறை என்று அரசியல் விமர்சகர் ஒருவர் தெரிவித்திருந்தார்.

பார்ப்போம் - காலம் அனைத்து உண்மைகளையும் நடுத்தெருவிற்கு கொண்டுவரும்! ஒருபக்கம் ஐபிசி பாஸ்கரன், மறுபக்கம் லைக்கா சுபாஸ்கரன் என்று இரு பண முதலைகள் தமிழ் தேசிய பரப்பில் அரசியல் தலைகள், வால்கள் முதற்கொண்டு அனைவரையும் வலைக்குள் போட்டு வைத்திருக்கின்றனர். தமிழ் தேசியத்தின் பெயரில் மிளகாய் அரைக்க தயாராவார்கள் பார்க்கத்தானே போகிறோம்!



# அவதூறுகள் எம்மை நோக்கி வருவதற்கு தேர்தல் அச்சமே காரணம்

## செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவாந்தா சுட்டிக்காட்டு!

தோற்றுப்போவோம் என்ற அச்சமும் கழ்ப்புணர்ச்சியுமே மீண்டும் எம்மீதான அவதூறுகளை இதர தமிழ் அரசியல் தரப்பினர் கையில் எடுத்து பூச முற்படுகின்றனர் என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா சுட்டிக்காட்டியுள்ளார்.

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் கிளிநொச்சி மாவட்டத்தை பிரதிநிதித்துவம் செய்யும் பொதுச்சபை உறுப்பினர்கள், வட்டாரக் குழு உறுப்பினர்கள், மற்றும் கட்சி செயற்பாட்டாளர்களுடனான விசேட கலந்துரையாடல் 02.10.2024 அன்று கிளிநொச்சி பலநோக்கு கூட்டுறவுச்சங்க மண்டபத்தில் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நடைபெற்றது.

இதன்போது உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்திருந்த செயலாளர் நாயகம் மேலும் கூறுகையில், எமது வழிநடத்தலும் அதனை முன்னெடுத்துச் செல்லும் பொறிமுறையும் தான் சரியானது என கடந்த காலங்களில் மக்கள் எமது பாதையை நோக்கி அணிதிரளத் தொடங்கியதை கண்டு அச்சமுற்ற தரப்பினர் அரசியல் ரீதியில் நேருக்கு நேர் நின்று வெற்றிகொள்ள முடியாதுபோன காரணத்தால் எம்மை தோற்கடிப்பதற்காக பல்வேறு அவதூறுகளையும் சேறுபூசல்களையும் வாரி இறைத்தனர்.

அத்தகையவர்களது குறித்த செயற்பாடுகளால் தோற்கடிக்கப்பட்டது எமது மக்களும் மக்களது அபிலாசைகளுமே தவிர நாமல்ல. நாம் என்றும் தனித்துவத்துடன் தடம்மாறாத கொள்கையுடன் எமது செயற்பாடுகளை மக்களிடம் கொண்டுசென்று வருகின்றோம்.

அதனால்தான் கடந்த 30 ஆண்டுகளாக தமிழ் மக்கள் என்னை தமது பிரதிநிதியாக நாடாளுமன்றத்திற்கு தொடர்ச்சியாக அனுப்பி வருகின்றனர்.

இதேநேரம் தமிழ் மக்களிடம் நீண்டகாலமாக எமக்கு அதிகளாவான நாடாளுமன்ற அரசியல் அதிகாரங்களை தருமாறும் அவ்வாறு கிடைக்கப்பெற்றால் நிச்சயமாக தமிழ் மக்களின் அபிலாசைகள் அனைத்தும் ஈடேறும் என்றும் கூறிவருகின்றேன். ஆனாலும் இதுவரை அந்த அரசியல் பலத்தை தமிழ் மக்கள் எம்மை நோக்கி தரவில்லை என்பது கவலையான விடயம்.

தற்போது மாற்றம் வேண்டும் என நீண்டகாலமாக முயற்சித்துவந்த இலங்கை மக்கள் மத்தியில் தற்போது அரசியல் அதிகாரத்தில் மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளனர். அதேபோன்று தமிழர் தேசப்பரப்பில் இற்றைநாள்வரை புரையோடிப்போயுள்ள போலித் தேசியத்துக்கும் சுயநல அரசியல் செயற்பாடுகளுக்கும் முற்றுப்புள்ள வைத்து மாற்றத்தை கொண்டுவர தமிழ் மக்கள் நினைக்கின்றனர்.

எம்மிடம் சுயநலமற்ற தடம் மறாதா கொள்கை இருக்கின்றது. அதனை முன்னெடுத்துச் செல்லும் ஆற்றறுலும் சிறந்த தலைமைத்துவ வழிகாட்டலும் இருக்கின்றது இதை கடந்தகால வரலாறுகளே சாட்சிசொல்லும்.

அந்தவகையில் மத்தியில் ஏற்பட்டதைப்போன்று தமிழ் அரசியல் பரப்பிலும் மாற்றத்தை கொண்டுவர மக்கள் தற்போது முயற்சிப்பதை கண்டு குறிப்பாக அந்த மாற்றம் எம்மை நோக்கியதாக இருப்பதை கண்டு அச்சமுற்றுள்ள இதர சுயநல தமிழ் அரசியல் தரப்பினரும் சில இலத்திரனியல் சமூக ஊடகங்களும் மீண்டும் எம்மை நோக்கி தவறான பிரசாரங்களையும் சேறடிப்பகளையும் மேற்கொள்ள முயற்சிக்கின்றனர்.

இதேநேரம் கடந்தகாலங்களில் எம்மை நோக்கி முன்னெடுக்கப்பட்ட சேறுபூசல்களும் அவதூறுகளும் போலியானவை திட்டமிட்டே செய்யப்பட்டன என்றும் அவ போலியானவை என்பதும் நிரூபாணமானது.

அதேபோன்று தற்போது மாற்றத்தை ஏற்படுத்த நினைக்கும் தமிழ் மக்கள் எம்மிடம் தமது அரசியல் அதிகாரங்களை வழங்கிவிடுவார்கள் என்ற அச்சம் காரணமாக மீண்டும் சுயநல தமிழ் அரசியல் தரப்பினர் எம்மைநோக்கி சேறடிப்புகளை செய்ய முயற்சிப்பதை மக்கள் உணர்ந்து கொள்வார்கள் என்றும் தான் நம்பவதாகவும் அவர் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.





# ஆயுதப் படைகளை "அனைத்து அம்சங்களிலும்" மேம்படுத்துவதற்கு திட்டம்

ஜனாதிபதி அனுர குமார திஸாநாயக்க தலைமையிலான அரசாங்கத்தின் பாதுகாப்பு அமைச்சு ஆயுதப்படைகளை மேம்படுத்த நடவடிக்கை எடுக்க திட்டமிட்டுள்ளது.

தேசிய பாதுகாப்பிற்கு பல "வழக்கத்திற்கு மாறான" அச்சுறுத்தல்கள் கண்டறியப்பட்டுள்ளதாக எச்சரித்துள்ள பாதுகாப்பு அமைச்சின் புதிய செயலாளர், முப்படைகள் தொழில் ரீதியாக தரமுயர்த்துவது உட்பட அனைத்து அம்சங்களிலும் அபிவிருத்தி செய்யப்படும் என மக்களுக்கு உறுதியளித்துள்ளார்.

"நாங்கள் கண்டறிந்துள்ளோம். இந்த கடமையை செய்வதற்கு அவசியமான காரணங்கள் அனைத்தையும் நாம் கண்டறிந்துள்ளோம். எமது நாட்டின் தேசிய பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலான அனைத்து வகையான அச்சுறுத்தல்களையும் நாம் கண்டறிந்துள்ளோம். ஆகவே என்னுடைய தலைமையின் கீழ் நாட்டு மக்கள், பொது மக்கள் அளெசகரியங்களை எதிர்கொள்ளும் அனைத்து முறைகளிலும் ஏற்படும் சம்பிரதாயபூர்வமல்லாத அச்சுறுத்தல்கள் நிறையவே இருக்கின்றன. அந்த சம்பிரதாயபூர்வமல்லாத அச்சுறுத்தல்களுக்கு முடிந்தவரை விரைவாக நிவாரணமளித்து முப்படையினருக்கும் காணப்படும் இயலுமையை மேலும் முன்னேற்றமடையச் செய்து அவர்களின் அர்ப்பணிப்பின் அடிப்படையில் அந்த பணியை நிறைவு செய்வதே எமது அரசின் எதிர்பார்ப்பு."

பாதுகாப்பு அமைச்சில் கடமைகளை பொறுப்பேற்றுக்கொண்டதன் பின்னர் கடந்த வார இறுதியில் கண்டி தலதா மாளிகைக்குச் சென்ற எயார் வைஸ் மார்'ல் சம்பத் துய்கொந்தாவிடம், ஆயுதப்படைகளின் செயற்பாடுகளை அபிவிருத்தி செய்வது என்பதன் அர்த்தம் என்னவென ஊடகவியலாளர்கள் கேள்வி எழுப்பியதற்கு பதிலளித்த அவர், ஆயுதப்படைகளை தொழில்சார் மட்டத்திற்கு கொண்டு வருவதற்கு தாம் செயற்படுவதாக தெரிவித்திருந்தார்.

"இராணுவத்தின் அனைத்து பக்கத்திலும் நவீன தொழில்நுட்பம், பயிற்சி, பயற்சிப் பெற வேண்டிய வாய்ப்பு, தொழில் ரீதியாக உயர் நிலைக்குச் கொண்டுச் செல்வதற்கான அனைத்து காரணங்களையும் கண்டறிந்து முறையான வகையில் செயற்படுவதே எமது எதிர்பார்ப்பு."

கடந்த காலங்களில், இலங்கையின் பாதுகாப்புப் படைகள் மிக உயர்ந்த தொழில்முறை மட்டத்தில் இருப்பதாக அரசாங்கத்தின் அதிகாரிகளும் இராணுவத்தினரும் அடிக்கடி வலியுறுத்தி வந்தமை குறிப்பிடத்தக்கது.

# யாழ்ப்பாணத்தில் தன் காணியை விற்றுப் பெற்ற 1 கோடி 8 இலட்சம் ரூபாயை வீதியில் கொள்ளையர்களிடம் பறிகொடுத்த வெளிநாட்டு வாசி

வெளிநாட்டில் இருந்து வந்த ஒருவர் யாழ்ப்பாணத்தில் உள்ள தனது காணியை விற்றுவிட்டு அந்தப் பணத்தினை எடுத்துச் சென்றவேளை, அவரிடம் இருந்து கொள்ளையர்கள் அந்த பணத்தினை கொள்ளையடித்து சென்றுள்ளனர். இந்தச் சம்பவம் 02-19-2024 பிற்பகல் 7 மணி அளவில் மானிப்பாய் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சங்குவேலி பகுதியில் இடம்பெற்றது.

குறித்த சங்குவேலி பகுதியில் உள்ள தனது காணியை விற்பனை செய்துவிட்டு 1 கோடி 8 இலட்சம் ரூபாவினை எடுத்துச் சென்றவேளை இந்த கொள்ளைச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இது குறித்து பாதிக்கப்பட்ட நபர் மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்துள்ளார். பணத்தினை கொள்ளையடித்தவர்களை கைது செய்வதற்கான நடவடிக்கைகளை மானிப்பாய் பொலிசார் மேற்கொண்டு வருகின்றனர்.

# யாழ்ப்பாணம் தனியார் விடுதியில் இருந்து முதியவரின் சடலம் மீட்பு!

யாழ்ப்பாணத்தில் ல் உள்ள தனியார் விருந்தினர் விடுதியில் தங்கியிருந்த ஒருவர் 03-10-2024 வியாழன் அன்று மாலை சடலமாக மீட்கப்பட்டுள்ளார். ஈச்சமோட்டை வீதி, சுண்டுக்குளி பகுதியைச் சேர்ந்த மைக்கல் அன்ரன் சுரேந்திரன் (வயது 70) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில், குறித்த நபரின் மனைவி லண்டனிலும், பிள்ளைகள் கொழும்பிலும் வசித்து வருகின்றனர். இவர் கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்னர் கட்டாரில் இருந்து வந்து சகோதரியின் வீட்டில் வசித்து வருகிறார்.

இருப்பினும் கடந்த வாரங்களாக அவர் குறித்த விடுதியில் தங்கியிருந்துள்ளார். அவரை கைப்பேசியில் அழைத்த நண்பர் அவரை தொடர்புகொள்ள முடியாத காரணத்தால் அன்று மாலை குறித்த விடுதிக்கு வந்து அறை கதவினை திறந்து பார்த்தவேளை அவர் தூக்கில் தொங்கியவாறு காணப்பட்டார்.

அவர் இரண்டு தினங்களுக்கு முன்னர் இறந்திருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது. அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். உடற்கூற்று பரிசோதனைகளுக்காக சடலம் யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது.

கனடிய செய்திகள்
Canadian News

# Marketing Experts Inc, founded by Mr. Anton Arumainayagam, a well known Broadcaster in Canada, was officially opened in Scarborough

# சந்தைப்படுத்தல் நிறுவனத்தை கனடாவில் நன்கு அறிமுகமான ஒலிபரப்பாளரான அன்ரன் அருமைநாயகம் கடந்த 21ம் திகதி ஸ்காபுறோவில் ஆரம்பித்து வைத்தார்

Marketing Experts Inc என்னும் வர்த்தக ஆலோசனை மற்றும் சந்தைப்படுத்தல் நிறுவனத்தை கனடாவில் நன்கு அறிமுகமான ஒலிபரப்பாளராக விளங்கும் அன்ரன் அருமைநாயகம் அவர்கள் 21ம் திகதி சனிக்கிழமை மதியம் ஸ்காபுறோவில் ஆரம்பித்து வைத்தார்.

மேற்படி நிறுவனத்தின் திறப்பு விழாவில் நாடாவை வெட்டி நிறுவனத்தை திறந்து வைத்தார், அண்மையில் ஆரம்பிக்கப்பெற்று வெற்றிகரமாக வளர்ந்து வரும் ஸ்காபுறோ "விஜயா நகைமாளிகை" உரிமையாளர் ருபன் அவர்கள். அத்துடன் சிறப்பு விருந்தினராக உதயன் பத்திரிகையின் பிரதம ஆசிரியரும் கலந்து கொண்டார்.

அன்றைய திறப்பு விழாவில் பல ஊடக நண்பர்களும் கலந்து கொண்டனர். வர்த்தகப்பிரமுகர்களும் பெருமளவில் வருகை தந்து அன்ரன் அருமைநாயகம் அவர்களையும் நிறுவனத்தையும் வாழ்த்திச் சென்றார்கள்.

அன்றைய நிகழ்வில் அமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினருமாகிய ஹரி ஆனந்தசங்கரி அவர்களின் அலுவலக நிர்வாக உத்தியோகத்தர் கோபி பொன்னுத்துரை அவர்கள் மற்றும் மாகாணப் பாராளுமன்ற உறுப்பினர் லோகன் கணபதி அவர்களின் அலுவலகப் பிரதிநிதி திமோ அவர்கள் ஆகியோரும் கலந்து கொண்டு மத்திய அரசு மற்றும் மாகாண அரசு ஆகியவற்றின் சார்பான பாராட்டுப் பத்திரங்களை அன்ரன் அருமைநாயகம் அவர்களுக்கு வழங்கிச் சென்றார்கள்.



கனடா உதயன் பத்திரிகையின் ஆசிரியர் அங்கு உரையாற்றும் போது "இன்றைய திறப்பு விழாவில் எனது அருமைச் சகோதரர் அன்ரன் அருமைநாயகம் அவர்களின் நிறுவனத் திறப்பு விழாவில் அதனை திறந்து வைத்தவரின் சிறப்பு தான் மேலோங்கி நிற்கின்றது. ஸ்காபுறோவில் வெற்றிகரமாக வளர்ந்து வரும் ஸ்காபுறோ "விஜயா நகைமாளிகை" உரிமையாளர் ருபன் அவர்கள் அண்மையில் தனது நகைமாளிகையில் தங்க நகைகளை கொள்வனவு செய்தவர்களுக்கிடையில் நடத்தப்பெற்ற அதிஸ்டக் குலுக்களில் முதலிடத்தைப் பெற்றவருக்கு ஒரு விலையுயர்ந்த அவ்டி காரை பரிசாக வழங்கினார். அவரது கைகளால் இன்று இந்த நிறுவனம் திறந்து வைக்கப்பெற்றிருக்கின்றது ஒரு எதிர்கால வளர்ச்சியின் அடையாளமே!" என்று தெரிவித்தார்.





இங்கு காணப்படும் படங்கள் திறப்பு விழாவில் எடுக்கப்பட்டவையாகும்.

# கனடா — மொன்றியால் வாழ் எழுத்தாளர் "வீணைமைந்தன்" சிவாஜி கணேசன் பற்றி எழுதிய நூல் சென்னையில் "சிவாஜி ஓர் சகாப்தம்" என்னும் விழாவில் வெளியிடப்பெறுகின்றது

கனடா - மொன்றியால் வாழ் எழுத்தாளரும் கனடா தமிழ் எழுத்தாளர் இணையத்தின் முன்னாள் தலைவருமாகிய "வீணைமைந்தன்" எழுதிய சிவாஜி கணேசன் பற்றிய நூல் சென்னையில் "சிவாஜி ஓர் சகாப்தம்" என்னும் மாபெரும் விழாவில் வெளியிடப்பெறுகின்றது.

எதிர்வரும் 08-10-2024 செவ்வாய்க்கிழமையன்று சென்னையில் நடைபெறவுள்ள மேற்படி விழாவில் திரையுலகப் பிரமுகர்கள் பலர் கலந்து கொள்கின்றார்கள் என எமது சென்னைச் செய்தியாளர் அறிவித்துள்ளார்.




# அன்பின் தொனி - 788

பாஸ்டர் அல்பிரட் சொருபிம் (மீட்பர் கிறிஸ்து சபை - பிரம்டன்)

**தேவகிருபை** - Grace of God

**கர்த்தரைக் கண்டடையத்தக்க சமயத்தில் அவரைத் தேடுங்கள்**

ஓ, தாகமாயிருக்கிறவர்களே, நீங்கள் எல்லாரும் தண்ணீர்களண்டைக்கு வாருங்கள்; பணமில்லாதவர்களே, நீங்கள் வந்து, வாங்கிச் சாப்பிடுங்கள்; நீங்கள் வந்து, பணமுமின்றி விலையு மின்றித் திராட்சரசமும் பாலும்கொள்ளுங்கள். நீங்கள் அப்பமல்லாததற்காகப் பணத்தையும், திருப்திசெய்யாத பொருளுக்காக உங்கள் பிரயாசத்தையும் செலவழிப்பானேன்? நீங்கள் எனக்குக் கவனமாய்ச் செவிகொடுத்து நலமானதைச் சாப்பிடுங்கள்; அப்பொழுது உங்கள் ஆத்துமா கொழுப்பான பதார்த்தத்தினால் மகிழ்ச்சியாகும். உங்கள் செவியைச் சாய்த்து, என்னிடத்தில் வாருங்கள்: கேளுங்கள், அப்பொழுது உங்கள் ஆத்துமா பிழைக்கும்; தாவீதுக்கு அருளின நிச்சயமான கிருபைகளை உங்களுக்கு நித்திய உடன்படிக்கையாக ஏற்படுத் துவேன். இதோ, அவரை ஜனக்கூட்டங்களுக்குச் சாட்சியாகவும், ஜனங்களுக்குத் தலைவராகவும் அதிபதியாகவும் ஏற்படுத்தினேன். இதோ, நீ அறியாதிருந்த ஜாதியை வரவழைப்பாய்; உன்னை அறியாதிருந்த ஜாதி உன் தேவனாகிய கர்த்தரின் நிமித்தமும், இஸ்ரவேலுடைய பரிசுத்தரின் நிமித்தமும் உன்னிடத்திற்கு ஓடிவரும் அவர் உன்னை மேன்மைபடுத்தியிருக்கிறார். கர்த்தரைக் கண்டடையத்தக்க சமயத்தில் அவரைத் தேடுங்கள்; அவர் சமீபமாயிருக் கையில் அவரை நோக்கிக் கூப்பிடுங்கள். துன்மார்க்கன் தன் வழியையும், அக்கிரமக்காரன் தன் நினைவுகளையும்விட்டு, கர்த்தரிடத்தில் திரும்பக்கடவன்; அவர் அவன்மேல் மனதுருகு வார் நம்முடைய தேவனிடத்திற்கே திரும்பக்கடவன்; அவர் மன்னிக்கிறதற்குத் தயை பெரு த்திருக்கிறார். என் நினைவுகள் உங்கள் நினைவுகள் அல்ல; உங்கள் வழிகள் என் வழிகளும் அல்லவென்று கர்த்தர் சொல்லுகிறார். பூமியைப்பார்க்கிலும் வானங்கள் எப்படி உயர்ந்திருக்கிறதோ, அப்படியே உங்கள் வழிகளைப்பார்க்கிலும் என் வழிகளும், உங்கள் நினைவுகளைப் பார்க்கிலும் என் நினைவுகளும் உயர்ந்திருக்கிறது. மாரியும் உறைந்த மழையும் வானத்திலிருந்து இறங்கி, அவ்விடத்துக்குத் திரும்பாமல் பூமியை நனைத்து, அதில் முளை கிளம்பி விளையும்படிச்செய்து, விதைக்கிறவனுக்கு விதையையும், புசிக்கிறவனுக்கு ஆகாரத்தையும் கொடுக்கிறது எப்படியோ, அப்படியே என் வாயிலிருந்து புறப்படும் வசனமும் இருக்கும், அது வெறுமையாய் என்னிடத்திற்குத் திரும்பாமல், அது நான் விரும்புகிறதைச்செய்து, நான் அதை அனுப்பின காரியமாகும்படி வாய்க்கும். நீங்கள் மகிழ்ச்சியாய்ப் புறப்பட்டு, சமாதானமாய்க் கொண்டுபோகப்படுவீர்கள், பர்வதங்களும் மலைகளும் உங்களுக்கு முன் பாகக் கெம்பீரமாய் முழங்கி, வெளியின் மரங்களெல்லாம் கைகொட்டும். முட்செடிக்குப் பதிலாகத் தேவதாரு விருட்சம் முளைக்கும், காஞ்சொறிக்குப் பதிலாக மிருதுச்செடி எழும்பும்; அதுகர்த்தருக்குக் கீர்த்தியாகவும், நிர்மூலமாகாத நித்திய அடையாளமாகவும் இருக்கும். **- ஏசாயா 55 1-13**

**என் இரட்சிப்பு வரவும், என் நீதி வெளிப்படவும் சமீபமாயிருக்கிறது.**

கர்த்தர் சொல்லுகிறார்: நீங்கள் நியாயத்தைக் கைக்கொண்டு, நீதியைச் செய்யுங்கள் என் இரட்சிப்பு வரவும், என் நீதி வெளிப்படவும் சமீபமாயிருக்கிறது. இப்படிச் செய்கிற மனுஷனும், இதைப் பற்றிக்கொண்டிருந்து, ஓய்வுநாளைப் பரிசுத்தக் குலைச்சலாக்காதபடி ஆசரித்து, ஒரு பொல்லாப்பையும் செய்யாதபடி தன் கையைக் காத்துக்கொண்டிருக்கிற மனுபுத் திரனும் பாக்கியவான். கர்த்தரைச் சேர்ந்த அந்நியபுத்திரன்: கர்த்தர் என்னைத் தம்முடைய ஜனத்தைவிட்டு முற்றிலும் பிரித்துப்போடுவாரென்று சொல்லானாக; அண்ணகனும், இதோ, நான் பட்டமரமென்று சொல்லானாக. **- ஏசாயா 56 1-3**

தொடரும்...

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# திருக்கோவிலில் சட்டவிரோதமாக செட்கண் துப்பாக்கி ரவைகளை வைத்திருந்த ஒருவர் கைது

கனகராசா சரவணன்

திருக்கோவில் பொலிஸ் பிரிவிலுள்ள விநாயகபுரம் பகுதியில் சட்டவிரோதமாக செட்கண் ரக துப்பாக்கியின் ரவைகளை வைத்திருந்து மிருகவேட்டையாடிவரும் 54 வயதுடைய ஒருவரை 27-09-2024 வெள்ளிக்கிழமை இரவு 8 துப்பாக்கி ரவைகளுடன் கைது செய்துள்ளதாக பொலிஸ் நிலைய பெரும் குற்றத்தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் யு.எல்.எஸ். ஆப்தீன் தெரிவித்தார்.

பொலிசாருக்கு கிடைத்த இரகசிய தகவல் ஒன்றினையடுத்து பெரும் குற்றத்தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் யு.எல்.எஸ். ஆப்தீன் தலைமையிலான பொலிசார் சம்பவதினமான விநாயகபுரம் 4ம் பிரிவிலுள்ள காயத்திரிகிராமம் பகுதியிலுள்ள குறித்த நபரின் வீட்டை முற்றுகையிட்டு சோதனையிட்டனர்.

இதன்போது பாவிக்க கூடிய செட்கண் ரக துப்பாக்கியின் 5 ரவைகளையும் வெறுமையான ரவைகள் 3 உட்பட 8 ரவைகளைமீட்டதுடன் ஒருவரை கைது செய்தனர்.

இதில் கைது செய்யப்பட்டவர் 54 வயதுடையவர் எனவும் காட்டுமிருகங்களை சட்டவிரோத உள்ளூர் தயாரிப்பு துப்பாக்கிகளை பாவித்து வேட்டையாடி வருவதாகவும் இவரை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

# மட்டக்களப்பில் பாராளுமன்ற தேர்தலில் போட்டியிடுவதற்கு 3 சுயேச்சைக்குழுக்கள் கட்டுப்பணம் செலுத்தின



மட்டக்களப்பில் பாராளுமன்ற தேர்தலுக்காக போட்டியிடுவதற்காக 3 சுயேட்சைகுழுக்கள் 30-09-2024 அன்று திங்கட்கிழமை மட்டு தேர்தல் திணைக்களத்தில் கட்டுப்பணங்களை செலுத்தியுள்ளன.

ஏதிர்வரும் நவம்பர் 14 ம் திகதி நடைபெறவுள்ள பாராளுமன்ற தேர்தலில் போட்டியிடுவதற்கான கட்டுப்பணங்களை செலுத்தும் நடவடிக்கை ஆரம்பித்துள்ளது இதற்கமைய மட்டு தமிழ் உணர்வாளர் அமைப்பின் தலைவர் கணபதிப்பிள்ளை மோகன் தலைமையில் சுயேட்சை குழுவில் 8 பேர் போட்டியிடுவதற்காக முதல் முதலாக கட்டுப்பணத்தை இன்று தேர்தல் திணைக்களத்தில் செலுத்தியுள்ளார்.





அதேவேளை மட்டக்களப்பு நல்லையா வீதியைச் சேர்ந்த அரச திணைக்களத்தில் கடமையாற்றி ஓய்வு பெற்ற 81 வயதுடைய கனகசூரியம் சோமாஸ்கந்தமூர்த்தி தலைமையில் சுயேச்சைக்குழுவில் போட்டியிடுவதற்கு 8 பேருக்கான கட்டுப்பணத்தை செலுத்தியுள்ளார்.

இதனை தொடர்ந்து முன்னாள் அமைச்சர் அலிஹார் மௌலானாவின் ஊடக செயலாளர் அஸ்மி தலைமையில் சுயேட்சைக்குழுவில் 8 பேர் களமிறக்கப்பட்டு அதற்கான கட்டுப்பணத்தை இன்று செலுத்தியுள்ளனர்.



# தேசிய கராத்தே தைக்குண்டோ போட்டியில் மட்டக்களப்பு வின்சன்ட் தேசிய பெண்கள் பாடசாலை மாணவி ச.அனந்தினி பதக்கம் வென்று சாதனை

மட்டக்களப்பு வின்சன்ட் உயர்தர பெண்கள் பாடசாலையின் மாணவி சரவணன் அனந்தினி தேசிய மட்டத்தில் இரத்தினபுரியில் இடம்பெற்ற ஆகக்கூடிய எடையான (73 கிலோவிற்கு மேல்) 18-20 வயதுப் பிரிவின் கீழ் கராத்தே தைக்குண்டோ எனும் காலால் மட்டும் தாக்கும் விளையாட்டில் வெண்கல பதக்கத்தை பெற்று இந்த போட்டியில் பாடசாலை வரலாற்றில் முதல் தடைவை பங்குபற்றி சாதனை படைத்துள்ளார்.

மட்டக்களப்பில் இடம்பெற்ற கிழக்கு மாகாணத்திற்கான இந்த போட்டியில் பங்குபற்றி மாகாண மட்டத்தில் முதலாம் இடத்தை பெற்று தேசிய மட்டத்துக்கு தெரிவான இவர் கடந்த 28 தொடக்கம் 30ம் திகதிவரை இரத்தினபுரியில் இடம்பெற்ற தேசிய மட்ட போட்டியில் கலந்து கொண்டு 3ம் இடத்தை பெற்று வெண்கல பதக்கத்தை சுவீகரித்தார்.

இவர் மட்டக்களப்பு எஸ்.கே.ஓ. கராத்தே கழகத்தைச் சேர்ந்த பயிற்றுவிப்பாளர்களான கே.ரி.பிரகாஸ், க.குகதாசன், வி.விமல்ராஜ், கணேசலிங்கம் ஆகியோரின் மாணவியான இவரை நேற்றைய தினம் பாடசாலை சமூகம் நினைவு கேடயம் வழங்கி கௌரவித்தது குறிப்பிடத்தக்கது.





# ஜனாதிபதி விவசாயிகளுக்கு வழங்க உத்தரவிட்ட மானியத்தை நிறுத்திய தேர்தல் ஆணையம் அதனை வழங்க ஆவண செய்ய வேண்டும்

## மட்டக்களப்பு மாவட்ட விவசாய அதிகாரசபையின் அமைப்பு கோரிக்கை



புதிய ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க கடந்த காலங்களில் ஹெக்டயருக்கு 15,000 ரூபாயாக இருந்த எங்களுடைய உர மானிய கொடுப்பனவை 25000 ரூபாவாக உடனடியாக வழங்குமாறு பணித்ததையடுத்து விவசாயிகள் அனைவரும் மிகுந்த சந்தோஷத்திலேயே இருந்தனர் ஆனால் இதனை உடனடியாக நிறுத்துமாறு தேர்தல் ஆணையம் அறிவித்திருக்கின்றது எனவே இதனை அரசியலாகப் பார்க்காது விவசாய மக்களினுடைய நலனை கருத்தில் கொண்டு தேர்தல் ஆணையம் இதனை திரும்ப வழங்குவதற்கு ஆவணம் செய்ய வேண்டும். என மட்டக்களப்பு மாவட்ட விவசாய அதிகாரசபையின் மாவட்ட அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.

மட்டக்களப்பு வெயூஸ் ஒப் மீடியா கற்கை நிலையத்தில் 02-10-2024 அன்று புதன்கிழமை இடம்பெற்ற ஊடக மாநாட்டில் மாவட்ட விவசாய அதிகாரசபையின் மாவட்ட அமைப்பின் தலைவர் மற்றும் செயலாளர் இவ்வாறு வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

ஜனாதிபதி அனுர குமாரதிசாநாயக்கவுக்கு மாவட்ட அதிகார சபையின் சார்பில் முதலில் எமது நன்றிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம். ஜனாதிபதி கடந்த சில நாட்கள் சிறந்த சில நடவடிக்கைகளை எமது நாட்டிலும் அரசியலிலும் மேற்கொண்டு வருவது எமது விவசாயிகளுக்கும் நாட்டு மக்களுக்கும் சந்தோ‘த்தினை அளிக்கின்றது.

அதேபோன்று அவர் விவசாயிகளுக்கான உரம் மானியத்துக்கான ஹெக்டருக்கு 25000 ரூபாவிற்கு மாற்றுவதாக அறிவித்தார். இந்த செய்தியை கேட்டு எமது விவசாயிகள் கிழக்கு மாவட்டத்தில் மிகவும் சந்தோஷமடைந்ததுடன் கடந்த காலங்களிலே எமது விவசாயிகள் கைவிடப்பட்டிருந்த காணிகளையும் பசளைப் பிரச்சனை, பொருளாதார பிரச்சனை காரணமாக கைவிடப்பட்டிருந்த காணிகளையும் நெற்செய்கை செய்வதற்கு என்று சொல்லி திட்டமிட்டு இருந்தார்கள்.

எனினும் ஒரு சில தினங்களில் பாராளுமன்ற தேர்தலுக்கான அறிவிப்பு வெளியிடப்பட்டதால் தேர்தல் ஆணையாளர் இவ்வாறான சில கொடுப்பனவுகளை தற்போது மேற்கொள்ள முடியாது எனக்கூறி ஒரு உத்தரவிட்டிருந்தார்.

இந்த உத்தரவின் காரணமாக விவசாயிகள் மிகவும் மனவேதனை அடைந்துள்ளனர் எனவே இவ்வாறான ஒரு செயற்பாடானது எமது மாவட்டத்திற்கும் நாட்டுக்கும் எதிர்காலத்திலே உணவு உற்பத்தியிலும் ஏனைய பொருளாதார ரீதியாகவும் பாரிய ஒரு தாக்கத்தினை ஏற்படுத்தும்.

தற்போது விவசாயிகள் உழவு வேலைகளை ஆரம்பித்து விவசாய செயற்பாடுகளில் ஈடுபட்டு இருக்கின்றார்கள். எனவே எமது உர மானியத்துக்கான அதிகரிக்கப்பட்ட கொடுப்பனவை உடனடியாக வழங்குவதன் மூலம் விவசாயிகளுக்கு பெரிய உதவியாக இருக்கும் என தேர்தல் ஆணையத்திடம் பணிவாக கேட்டுக் கொள்கின்றோம்.

தற்பொழுது டீசல், பெற்ரோல், மண்ணெண்ணை விலைகள் முதலாம் திகதியில் இருந்து ஜனாதிபதி குறைத்தது விவசாயிகளுக்கு பாரிய நிவாரணமாக அமைகின்றது. எனவே ஜனாதிபதி எதிர்காலத்தில் எங்களுக்கான பசளை, களைநாசிகளுக்கான விலைகளை குறைத்து நாட்டின் பொருளாதாரத்தை கட்டி எழுப்ப விவசாயிகளுக்கு பூரண ஒத்துழைப்புக்களை வழங்க வேண்டும்.

இருந்த போதிலும் அதனை அடுத்து இந்த பாராளுமன்றத் தேர்தல் அறிவிக்கப்பட்ட பின்பு அதனை உடனடியாக நிறுத்துமாறு தேர்தல் ஆணையம் அறிவித்திருக்கின்றது. மிகுந்த சந்தோ‘த்திலேயே விவசாயிகள் அனைவரும் இருந்த போதும் தற்போது பாரிய ஏமாற்றத்தோடும் பாரிய வீழ்ச்சியாகவும் நாங்கள் இதனை எதிர்பார்க்கின்றோம். இதனை அரசியலாகப் பார்க்காது விவசாய மக்களினுடைய நலனை கருத்தில் கொண்டு தேர்தல் ஆணையம் இதனை திரும்ப வழங்குவதற்கு ஆவணம் செய்ய வேண்டும்.

கனடிய செய்திகள் Canadian News

# Tamil Rights Group Provides Recommendations to the Foreign Interference Commission on Sri Lankan Interference Against Tamil Canadians

tamil rights group

# தமிழ் கனேடியர்களுக்கு எதிரான இலங்கையின் தலையீடு குறித்து "கனடா – தமிழர்களுக்கான உரிமைகள் குழு" பரிந்துரைகளை வழங்குகிறது

Ottawa, Canada - After private meetings with the commissioner, Tamil Rights Group (TRG) was granted official standing from the Foreign Interference Commission and participated in a critical public consultation panel alongside other diaspora organizations. This panel addressed the impact of foreign interference on diaspora communities' affairs in Canada and provided informed insights on how Canada can effectively combat these challenges.

During the submission, TRG underscored the alarming strategies employed by the Sri Lankan government against Tamil Canadians, which include surveillance, disinformation and smear campaigns, and the intimidation of activists. These actions pose a significant threat to our community's pursuit of justice and accountability for the genocidal crimes committed against Tamils.

TRG presented six key recommendations to the Commission aimed at ensuring accountability for Sri Lanka's egregious crimes of genocide. They reinforce the imperative that Sri Lanka should not be allowed to evade responsibility for its actions nor intimidate Canadian citizens who advocate for accountability. The recommendations are:

1) Public Education on Foreign Interference: Empower communities to recognize and respond to foreign interference threats, ensuring advocates are aware of available resources to take action against such interference.

2) Enhanced Accountability: Strengthen existing sanctions and impose additional measures against Sri Lankan state officials.

3) Support for Independent Investigations: Continue supporting the UN Human Rights Council and strengthen the Sri Lankan Accountability Project (SLAP) mandate.

4) Referral to International Courts: Leverage international law to hold accountable those responsible for crimes against humanity, war crimes and genocide through referrals to the International Criminal Court (ICC) and the International Court of Justice (ICJ).

5) Utilization of Universal Jurisdiction: Encourage direct action against war criminals through universal jurisdiction principles in Canada.

6)Formal Recognition of Tamil Genocide: Advocate for the official acknowledgment of the Tamil genocide in Canada and internationally

கனடா ஒட்டாவா மாநகரில் உள்ள Foreign Interference Commission அமைப்பின் ஆணையாளருடனான தனிப்பட்ட சந்திப்புகளுக்குப் பிறகு, கனடா-தமிழ் உரிமைகள் குழு (டி.ஆர்.ஜி) வெளிநாட்டு குறுக்கீடு ஆணையத்தில் இருந்து உத்தியோகபூர்வ நிலைப்பாடு வழங்கப்பட்டது மற்றும் பிற புலம்பெயர் அமைப்புகளுடன் ஒரு முக்கியமான பொது ஆலோசனைக் குழுவில் பங்கேற்றது. கனடாவில் புலம்பெயர் சமூகங்களின் விவகாரங்களில் வெளிநாட்டு தலையீட்டின் தாக்கத்தை இந்த குழு மேற்படி ஆணையாளருக்கு எடுத்துரைத்தது. மற்றும் இந்த சவால்களை கனடா எவ்வாறு திறம்பட எதிர்த்துப் போராட முடியும் என்பது குறித்த தகவலறிந்த நுண்ணறிவுகளையும் வழங்கியது.

அண்மையில் இடம்பெற்ற இந்த சந்திப்பின்போது. சமர்ப்பிப்பின் போது, தமிழ் கனேடியர்களுக்கு எதிராக இலங்கை அரசாங்கம் பயன்படுத்திய ஆபத்தான உத்திகளை தமிழர் உரிமைகள் குழு அடிக்கோடிட்டுக் காட்டியது, இதில் கண்காணிப்பு, மற்றும் தவறான தகவல் மற்றும் விசமப் பிரச்சாரங்கள் மற்றும் ஆர்வலர்களின் மிரட்டல் ஆகியவை அடங்கும். இந்த நடவடிக்கைகள் தமிழர்களுக்கு எதிராக செய்யப்பட்ட இனப்படுகொலை குற்றங்களுக்கு எங்கள் சமூகத்தின் நீதி மற்றும் பொறுப்புக்கூறலுக்கு குறிப்பிடத்தக்க அச்சுறுத்தலை ஏற்படுத்துகின்றன.

மேற்படி ஆணையத்திற்கு தமிழர் உரிமைகள் குழுவினால் சமர்ப்பிக்கப்பட்ட கோரிக்கைகள் பின்வருமாறு: இலங்கையின் இனப்படுகொலை குற்றங்களுக்கு பொறுப்புக்கூறலை உறுதி செய்வதை நோக்கமாகக் கொண்ட கமிஷனுக்கு தமிழர் உரிமைகள் குழு ஆறு முக்கிய பரிந்துரைகளை வழங்கியது. இலங்கை அதன் செயல்களுக்கான பொறுப்பை தவிர்க்கவோ அல்லது பொறுப்புக்கூறலுக்காக வாதிடும் கனேடிய குடிமக்களை அச்சுறுத்தவோ அனுமதிக்கக்கூடாது என்ற கட்டாயத்தை அவை வலுப்படுத்துகின்றன.

பரிந்துரைகள்: வெளிநாட்டு குறுக்கீடு குறித்த பொதுக் கல்வி: வெளிநாட்டு குறுக்கீடு அச்சுறுத்தல்களை அங்கீகரிக்கவும் பதிலளிக்கவும் சமூகங்களை மேம்படுத்துதல், அத்தகைய குறுக்கீட்டிற்கு எதிராக நடவடிக்கை எடுக்க சட்டவாதிகளும் கிடைக்கக்கூடிய வளங்களை அறிந்திருப்பதை உறுதிசெய்கிறார்கள்.

மேம்பட்ட பொறுப்புக்கூறல்: தற்போதுள்ள பொருளாதாரத் தடைகளை வலுப்படுத்துங்கள் மற்றும் இலங்கை மாநில அதிகாரிகளுக்கு எதிராக கூடுதல் நடவடிக்கைகளை விதிக்கவும்.

சுயாதீன விசாரணைகளுக்கான ஆதரவு: ஐ.நா மனித உரிமைகள் சபைக்கு தொடர்ந்து ஆதரவளித்து, இலங்கை பொறுப்புக்கூறல் திட்ட ஆணையை வலுப்படுத்துங்கள்.

சர்வதேச நீதிமன்றங்களுக்கு பரிந்துரை: சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் (ஐ.சி.சி) மற்றும் சர்வதேச நீதிமன்றம் (ஐ.சி.ஜே) ஆகியவற்றின் பரிந்துரைகள் மூலம் மனிதநேயம், போர்க்குற்றங்கள் மற்றும் இனப்படுகொலைக்கு எதிரான குற்றங்களுக்கு பொறுப்பானவர்களை பொறுப்புக்கூற வைக்க சர்வதேச சட்டத்தை மேம்படுத்துதல்.

உலகளாவிய அதிகார வரம்பைப் பயன்படுத்துதல்: கனடாவில் உலகளாவிய அதிகார வரம்புக் கொள்கைகள் மூலம் போர் குற்றவாளிகளுக்கு எதிரான நேரடி நடவடிக்கையை ஊக்குவித்தல்.

# கனடா – நடேஸ்வரக்கல்லூரி பழைய மாணவர் சங்கம்




**- குரு அரவிந்தன் -**

கனடா - காங்கேசந்துறை நடேஸ்வரக்கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் சென்ற சனிக்கிழமை செப்ரெம்பர் மாதம் 21 ஆம் திகதி காலை 10 மணியளவில் கனடா ரொறன்ரோவில் உள்ள 1160, ராப்ஸ்கொட் வீதியில் உள்ள தமிழர் செந்தாமரை மண்டபத்தில் இடம் பெற்றது.

முதலில் தமிழ்தாய் வாழ்த்து, கனடா தேசியப்பண், கல்லூரிக்கீதம், அகவணக்கம் ஆகியன இடம் பெற்றன. தொடர்ந்து மன்றத்தின் தலைவர் மார்க் நிர்மலன் அவர்களின் உரை இடம் பெற்றது. அதைத் தொடர்ந்து செயலாளர் அறிக்கை, பொருளாளர் அறிக்கை ஆகியன இடம் பெற்றன. நிகழ்ச்சி நிரலில் இடம் பெற்றபடி, கல்லூரியின் அவசரமான முக்கியமான தேவைகளுக்கு உதவி செய்வதற்கு பொதுச்சபை இணக்கம் தெரிவித்தது. அதேபோல கனிஸ்ட பாடசாலையின் முக்கிய தேவைகள் சிலவற்றைக் குறிப்பாகக் குடிநீர் வசதிகள் போன்றவற்றைச் செய்து கொடுப்பதையும் பொதுச்சபை ஏற்றுக் கொண்டது.

தொடர்ந்து காப்பாளர்களின் உரை இடம் பெற்றது.

இங்குள்ள புதிய தலைமுறையினருக்கு நடேஸ்வரக்கல்லூரியின் வரலாறு பற்றி அதிகம் தெரியாது என்பதால் குரு அரவிந்தன் அதைச் சுருக்கமாகக் குறிப்பிட்டார். "ஒரு காலத்தில் வலிகாமம் வடக்கில் மகாஜனக்கல்லூரி, யூனியன் கல்லூரிகள் போன்று பிரபலமாக இருந்த நடேஸ்வரக்கல்லூரி போர்ச்சூழல் காரணமாகவும், அதிபாதுகாப்பு வலயத்தில் இருந்ததாலும் கட்டாயமாக இடம் பெயரவேண்டிய நிலை ஏற்பட்டது. குடிமக்களும் முற்றாக இடம் பெயர்ந்தார்கள்.

போர்க்காலத்தில் பல இடங்களுக்கும் இன்னல்களுக்கு மத்தியில் இடம் பெயர்ந்து, மீண்டும் பழைய இடமான கல்லூரி வீதிக்கே பாடசாலை வந்திருக்கின்றது. சில மாதங்களுக்கு முன்புதான் அப்பகுதியில் இருந்த இராணுவ முகாம் அகற்றப்பட்டது. வீடுகளும், கோயில்களும் இடிக்கப்பட்டுத் தரைடமட்டமாக்கப்பட்டதால் குடிமனைகள் இருக்கவில்லை. அதனால் மாணவர்களின் வருகை குறைவாகவே இருந்தது. இதையே சாட்டாக வைத்துப் பாடசாலையை நிரந்தரமாக மூடிவிட முடிவுகள் எடுக்கப்பட்டன.

ஆனாலும் பழைய மாணவர்களும், அயலவர்களும் ஒன்று சேர்ந்து பாடசாலையை தொடர்ந்தும் நடத்த முடிவெடுத்தார்கள். அதன் பலன்தான் இன்று பாடசாலை அங்கு சிறப்பாக இயங்கத் தொடங்கி இருக்கின்றது. பாடசாலை விளையாட்டு மைதானமும் திருத்தப்பட்டு, அமரர் தனபாலசிங்கத்தின் பெயரில் பார்வையாளர் அரங்கம் ஒன்றும் கட்டப்பட்டு இருக்கின்றது. கல்விச் செல்வம் ஒன்றுதான் எம்மிடம் உள்ள நிரந்தரமான செல்வம் என்பதால், மீண்டும் கல்லூரி வழமைபோல இயங்குவதற்குப் பழைய மாணவர்களாகிய நாங்கள் எம்மால் முடிந்த அளவு உதவி செய்வோம்" என்று காப்பாளர் குரு அரவிந்தன் தனது உரையில் குறிப்பிட்டிருந்தார்.

இலங்கையில் இருந்து "நடேஸ்வரக்கல்லூரி நம்பிக்கை நிதியக்குழுவில்" அங்கம் வகிக்கும் திரு. ஏ. சிறிரங்கநாதன் மற்றும் எஸ். சிவசுப்ரமணியம் ஆகியோரும் சிறப்பு விருந்தினர்களா வந்து கலந்து கொண்டு உரையாற்றினார்கள். அரசு பாடசாலைக்கு நிதி தந்தாலும், அது போதாது என்பதை அவர்களும் சுட்டிக் காட்னார்கள். வருகை தந்தவர்களுக்கும், மண்டபத்தைத் தந்துதவிய ராஜி அரசரத்தினத்திற்கும் சங்கத்தின் சார்பாக நன்றி தெரிவிக்கப்பட்டது.

# நவராத்திரி விழா (நிலைமண்டில ஆசிரியப்பா)

இந்துக்கள் கொண்டாடும் இரவுத் திருநாள்
பந்துக்கள் சேர்ந்து பட்சணம் செய்தே
சொந்த பந்தம் சினேகமாய்க் கூடியே
இந்த இரவுகளை இனிதாய்க் களிப்பர்.
ஒன்பது நாட்கள் ஒன்றாய்ச் சேர்த்து
முன்மூன்று தினங்கள் முழுதாய்த் துர்க்கைக்கும்
பின்மூன்று இராக்கள் பிரியமாய் வாணிக்கும்
இன்னும் இலட்சுமிக்கு நடுமூன்று நாட்களும்
விருப்பொடு வினையற விரதம் இருந்தே
கருத்தொடு கண்கவர் கொலுவை அமைத்து
பருப்பொடு பலவகைப் படையல் செய்து
விருந்தினர் அழைத்தே விருந்து கொடுப்போம்
பத்தாம் நாளில் பற்றொடு பெற்றோர்
சொத்தான தமது சொந்தச் சிறார்க்கு
முத்தான கல்வியை மகிழ்வாய்த் தொடக்கியே
வித்தகனாய் வந்திட வழிதேடிக் கொடுப்பர்
மாநோன்பு நாளில் வன்னி மரத்தை
வானோரும் வாழ்த்தும் வண்ணம் வெட்டியே!
ஈனோரும் இந்நாளைஈகையுடன் கொண்டாட
தேனோடு பாலாய்ச் சிறந்த நாளிதே!
சுண்டலும் வடையும் சுவைமிகு அவலும்
பண்டம் மாற்றிப் பகிர்ந்து மகிழ்வோம்
கண்டம் தோறும் கலைந்து இருப்பினும்
பண்டிகை நாட்களை பண்பாய்ப் போற்றுவோமே!

ஈனோர் – – – இவ்வுலகினர். ஈகை – – – கொடை

**ஆக்கம் ... பாவலர் மார்க்கம் சந்திரன்**
(416) 844-7453



# தமிழ் மக்கள் பொதுச்சபை ஏன் நாடாளுமன்ற தேர்தலில் இறங்கவில்லை?

- யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார் -

ஜனாதிபதித் தேர்தலில் ஒரு பொது வேட்பாளரை நிறுத்திய தமிழ்த் தேசிய பொதுக்கூட்டமைப்புக்குள் அங்கம் வகிக்கும் மக்கள் அமைப்பாகிய தமிழ் மக்கள் பொதுச்சபையானது நாடாளுமன்றத் தேர்தலில் தான் நேரடியாக இறங்கப் போவதில்லை என்று அறிவித்திருக்கிறது. கடந்த ஞாயிற்றுக்கிழமை 29 ஆம் தேதி திருகோணமலையில் உள்ள ஆயர் இல்லத்துக்கு சொந்தமான மண்டபத்தில் இடம்பெற்ற தமிழ் மக்கள் பொதுச்சபையின் சந்திப்பின்போது, இந்த முடிவு எடுக்கப்பட்டது.

ஜனாதிபதித் தேர்தலில் ஒரு பொது வேட்பாளரை நிறுத்தியதன் மூலம் 2,26,000 வாக்குகள் கிடைத்தன. இது ஒரு குறிப்பிட்ட செல்லக்கூடிய அடைவு. கடந்த நாடாளுமன்ற தேர்தலின் போது தமிழ்த் தேசியக் கட்சிகள் மொத்தமாக பெற்ற வாக்குகள் 4 லட்சத்து 16 ஆயிரம். இப்பொழுது பொது வேட்பாளர் பெற்ற வாக்குகள் அதன் அரைவாசியை விடவும் கூடுதலான தொகை. எனவே தேசமாக திரள்வோம் என்று கோஷத்துக்கு அடிப்படை வெற்றி கிடைத்திருக்கிறது.

இந்த வெற்றியை அடுத்தடுத்த கட்டங்களுக்கு வளர்த்துச் செல்வதென்றால் தொடர்ந்து வரும் தேர்தல்களை எதிர்கொள்ள வேண்டும். அதன் மூலம்தான் வாக்களித்த மக்களை அடுத்தடுத்த கட்டங்களுக்கு திரட்டிக் கொண்டு போக முடியும் என்ற ஒரு வாதம் முன்வைக்கப்படுகிறது. தமிழ் மக்கள் பொதுச்சபையானது பொதுக் கட்டமைப்பை நம்பி வாக்களித்த மக்களுக்கு பொருத்தமான வழிகாட்டலைச் செய்யாமல் இடை நடுவில் அடுத்த தேர்தலில் ஈடுபடுவதில்லை என்று கூறி பின்வாங்குகிறது என்ற ஒரு குற்றச்சாட்டு முன்வைக்கப்படுகிறது. தமிழ் மக்கள் பொதுச்சபையானது தேர்தலில் ஈடுபட்டு நேர்மையானவர்களையும் கண்ணியமானவர்களையும் இறக்கி மாற்றத்தை காட்ட வேண்டும் என்று கோரிக்கைகள் முன்வைக்கப்படுகின்றன. தென் இலங்கையில் ஐக்கிய மக்கள் சக்தியானது மாற்றத்துக்கான அரசியல் அலை ஒன்றை தோற்றுவித்திருக்கும் பின்னணியில், தமிழ் மக்கள் பொதுச்சபையானது தேர்தலில் இருந்து பின்வாங்குவது தமிழர் பகுதிகளில் ஐக்கிய மக்கள் சக்திக்கு வெற்றி வாய்ப்புகளை அதிகப்படுத்துவதாக அமையலாம் என்று விமர்சிக்கப்படுகிறது. வரும் நாடாளுமன்ற தேர்தலில் தமிழ் மக்கள் பொதுச்சபை பங்கெடுக்கவில்லையென்றால், அது அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கு பொருத்தமில்லாதவர்களிடம் பிரதிநிதித்துவம் போவதற்கு வாய்ப்பளித்ததாக அமைந்துவிடும் என்றும் கூறப்படுகிறது.

தமிழ் மக்கள் பொதுச்சபை இதற்கு என்ன விளக்கத்தை கூறுகின்றது?

ஒரு மக்கள் அமைப்பின் வேலை தொடர்ச்சியாக தேர்தலில் ஈடுபடுவது அல்ல. தேசத்தை திரட்டுவது என்ற கோஷத்தோடுதான் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்கள் பொதுச்சபை தலையிட்டது. அரசுடைய தரப்பினால் அறிவிக்கப்பட்ட ஒரு தேர்தல் களத்தை அரசற்ற தரப்பொன்று எப்படித் தேச நிர்மாணத்துக்குப் பயன்படுத்தலாம் என்ற ஒரு பரிசோதனைதான் பொது வேட்பாளர். ஜனாதிபதித் தேர்தல் களமானது அவ்வாறான ஒரு பரிசோதனையை செய்வதற்கு வசதியானது. அங்கே பொது வேட்பாளர் ஒரு குறியீடாக முன்நிறுத்தப்பட்டார். அவருக்கு விழும் வாக்குகளை அவர் ஒரு கண்ணாடி ஒளிக் கதிர்களை பிரதிபலிப்பது போல வாக்களித்த மக்களுக்கு திருப்பி கொடுத்தார். அந்த மக்களை அவர் ஒரு அணியில் திரட்டினார். அப்படிப் பார்த்தால் அரசாங்கம் அறிவித்த ஒரு தேர்தலில் ஒரு சிறிய மக்கள் கூட்டம் எப்படி புத்திசாலித்தனமாகவும் தீர்க்கதரிசனமாகவும் புதுமையாகவும் எதிர்கொள்ள முடியும் என்பதற்கு அது ஒரு உதாரணமாக அமைந்தது. இலங்கைத் தீவில் மட்டுமல்ல இந்த பிராந்தியத்திலேயே அது ஒரு புதுமையான முன்னுதாரணம்.

ஆனால் நாடாளுமன்ற தேர்தல் களம் அத்தகையது அல்ல. அங்கே வேட்பாளர்கள் குறியீடாக நிறுத்தப்பட மாட்டார்கள். ஒவ்வொரு வேட்பாளரும் தான் செலவழிக்கும் காசையும் உழைப்பையும் தனக்கேயான முதலீடாகத்தான் கருதுவார்.அங்கே குறிப்பாக விகிதாசார பிரதிநிதித்துவ தேர்தல் முறைக்குள் சுயநலமும் அது சார்ந்த போட்டியுந்தான் அதிகமாக இருக்கும்.

ஜனாதிபதி தேர்தலில் வேட்பாளர் ஒரு குறியீடு. ஆனால் பொதுத் தேர்தலில் வேட்பாளர்கள் எல்லாருமே தங்களை முன் நிறுத்துவார்கள். இதனால் கட்சிகளாகவும் வேட்பாளர்களாகவும் தமிழ் வாக்குகள் சிதறும். அதாவது தேசத் திரட்சி சிதறக்கூடிய வாய்ப்புகளை அதிகமாகக் கொண்ட ஒரு தேர்தல் களம் இது.

இப்படிப்பட்ட ஒரு போட்டிக் களத்தில் தேசத்தைத் திரட்டுவது சவால்கள் மிகுந்தது. ஒரு பலமான கட்சி தனது வேட்பாளர்களை எங்கும் நிறுத்தி அதன் மூலம் தேசத் திரட்சியை பாதுகாப்பது வேறு. ஆனால் ஐந்து மாத குழந்தையான தமிழ் மக்கள் பொதுச்சபை என்ற அமைப்பும் இரண்டு மாதக் குழந்தையாகிய தமிழ்த் தேசிய பொதுக் கட்டமைப்பு என்ற அமைப்பும் அதைச் செய்வது கடினம். அதனால் தமிழ் மக்கள் பொதுச் சபை தேர்தல் நடவடிக்கைகளில் இருந்தும் பின்வாங்கியது.

மேலும் பொதுச்சபை ஜனாதிபதி தேர்தல் முடிந்த கையோடு விட்ட ஒரு அறிக்கையில் மற்றொரு விடயம் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. தேசத்தைக் கட்டி எழுப்பும் பணியில் தேர்தல் ஒரு பகுதி மட்டும் தான்.தனிய தேர்தல்களால் மட்டும் தேசத்தை கட்டி எழுப்ப முடியாது. அந்த அடிப்படையில் தொடர்ச்சியாக தேர்தலில் ஈடுபடுவது ஒரு மக்கள் கட்டமைப்பின் பிரதான இலக்காக இருக்க முடியாது. அதை கட்சிகள் தான் செய்ய வேண்டும். அல்லது மக்கள் இயக்கத்தால் வழி நடத்தப்படும் ஒரு கட்சி அதைச் செய்தால் உன்னதமாக இருக்கும்.

இப்போதுள்ள பொதுக் கட்டமைப்பு அந்த வளர்ச்சியை இன்னமும் அடையவில்லை. அடுத்தடுத்து தேர்தல்கள் வரும்பொழுது அதை எதிர் கொள்வதற்கு கட்டமைப்புப் பலமும் நிதிப் பலமும் வேண்டும். அது தமிழ் மக்கள் பொதுச் சபையிடம் இல்லை என்று தெரிகிறது.

அத்துடன் நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தலைக் குறித்த ஒரு மீளாய்வு செய்யப்பட வேண்டும் என்று தமிழ் மக்கள் பொதுச்சபை கருதுவதாகத் தெரிகிறது. அந்த மீளாய்வு செய்யப்படாத ஒரு பின்னணிக்குள் மற்றொரு தேர்தலை எதிர்கொள்வது புத்திசாலித்தனமானது அல்லவென்று பொதுச் சபை சுட்டிக்காட்டுகின்றது. ஒரு தேர்தலில் கட்சிகளோடு சேர்ந்து உழைத்ததில் பெற்ற நன்மை தீமைகள், அது பற்றிய தொகுக்கப்பட்ட அனுபவம் என்பவற்றிலிருந்து கற்றுக் கொண்டால்தான் அடுத்த கட்டத்தைத் தீர்மானிக்கலாம். ஆனால் அதைக் கற்றுக் கொள்வதற்கு அவகாசம் இங்கே கிடைக்கவில்லை. ஒரு தேர்தல் முடிந்த கையோடு அடுத்த தேர்தல் அறிவிக்கப்பட்டிருக்கிறது. அதை ஒரு மக்கள் அமைப்பு எதிர்கொள்வதில் அடிப்படையான வரையறைகள் இருக்கும்.

மேற்சொன்ன காரணங்களை முன்வைத்து தமிழ் மக்கள் பொதுச்சபையானது நாடாளுமன்ற தேர்தலில் போட்டியிடுவதில்லை என்று முடிவெடுத்தது. பொதுச் சின்னமாகிய சங்கையும் பங்காளிக் கட்சிகள் பயன்படுத்துவதைத் தவிர்க்குமாறு அது வேண்டுகோள் விடுத்தது. ஆனால் பங்காளிக் கட்சிகளில் ஒன்றாகிய ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அந்த வேண்டுகோளை நிராகரித்துவிட்டு சங்குச் சின்னத்தைக் கோரி தேர்தல் ஆணையாளருக்கு கடிதம் எழுதியது.

அவ்வாறு பங்காளிக் கட்சிகளில் ஒன்று அந்த சின்னத்தைக் கோரிப் பெறுவது என்பது பொதுக்கட்டமைப்பு உருவாக்கிய பொழுது பொதுச் சபையும் கட்சிகளும் இணங்கிக் கொண்ட புரிந்துணர்வு உடன்படிக்கைக்கு மாறானது. அப்புரிந்துணர்வு உடன்படிக்கையில் பொதுச் சின்னமானது பொதுநிலைப்பாட்டுக்கு உரியது என்றும் அதனை தனி நிலைபாட்டுக்கு பயன்படுத்த முடியாது என்றும் தெளிவாக கூறப்பட்டுள்ளது.

இப்பொழுது பொதுச் சபை தேர்தலில் நேரடியாக ஈடுபடாது. தமிழ்த் தேசியப் பசுமை இயக்கமும் தமிழ் மக்கள் கூட்டணியும் கூட்டாக தேர்தலை கேட்கப்போவதில்லை. எனவே நடைமுறையில் பொது கட்டமைப்பு ஒரு தேர்தல் கூட்டாக இப்பொழுது இல்லை.

மேலும், தேர்தலில் பொதுக் கட்டமைப்பைச் சேர்ந்த மக்கள் அமைப்பும் கட்சிகளும் மட்டும் உழைக்கவில்லை. மேலதிகமாக தமிழரசுக் கட்சியைச் சேர்ந்தவர்கள் ஆங்காங்கே உழைத்திருக்கிறார்கள். வடக்கில் பரவலாக தமிழரசுக் கட்சிப் பிரமுகர்கள் தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளில் நேரடியாகவும் மறைமுகமாகவும் ஈடுபட்டார்கள். கிழக்கிலும் அப்படித்தான். மட்டக்களப்பில் தமிழரசுக் கட்சியின் சாணக்கியனுக்கு எதிரான அணி முழுமையாக மேடையில் காணப்பட்டது. அவர்கள் பகிரங்கமாக அரியநேத்திரனை ஆதரித்துப் பிரச்சாரம் செய்தார்கள். அவர்களோடு தமிழர் விடுதலைக் கூட்டணியின் பிரமுகராகிய அருண் தம்பி முத்துவும் காணப்பட்டார்.

இதைத் தவிர யாழ்ப்பாணத்தில் பொதுச்சபைக்குள் அங்கும் வகிக்காத மக்கள் அமைப்புகளும் பிரச்சாரப் பணிகளில் ஈடுபட்டன. எனவே அந்த வெற்றி ஒரு கூட்டு வெற்றி. தமிழ் மக்கள் பொதுச்சபையும் கட்சிகளும் இணைந்து ஏற்படுத்திய ஒரு மக்கள் திரட்சிக்கு கிடைத்த வெற்றி. அது ஐக்கியத்துக்கு மக்கள் காட்டிய ஆதரவு. அந்த ஆதரவுத் தளத்தைப் பேணுவது என்பது ஐக்கியத்தை விசுவாசமாகப் பேணுவதில்தான் தங்கியிருக்கின்றது. ஆனால் பொதுச் சின்னம் என்ற விவகாரம் அந்த ஒற்றுமையை சோதனைக்கு உள்ளாக்குமா?



இலங்கை செய்திகள் Sri Lanka News

# இதுவரை பிறப்புச் சான்றிதழ் பெற்றுக்கொள்ளாத சிறுவர்களுக்கான நடமாடும் சேவை

2024 ஆண்டிற்கான சிறுவர் தினத்தையொட்டி இதுவரை பிறப்புச் சான்றிதழை பதிவு செய்யாத சிறுவர்களுக்கான நடமாடும் சேவையானது 01.10.2024 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 09.00 மணி தொடக்கம் பி.ப 04.00 மணி வரை மாவட்டச் செயலகத்தின் மாநாட்டு மண்டபத்தில் யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபரும் மாவட்டச் செயலாளருமான திரு. மருதலிங்கம் பிரதீபன் அவர்கள் தலைமையில் நடைபெறவுள்ளது.

சிறுவர்களுக்கான பிறப்புச் சான்றிதழை பதிவு செய்வதற்காக உரிய ஆவணங்களுடன் வருகை தந்து பிறப்புச் சான்றிதழை பதிவு செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

ஊடகப் பிரிவு மாவட்டச் செயலகம் யாழ்ப்பாணம்

# கிளிநொச்சியில் வாய் பேசாத வளர்ப்பு பிராணிகளுக்கு "மனிதர்கள்" செய்த கொடிய பாதகம்



கிளிநொச்சி மாவட்டம் பூநகரி பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட சோலை பல்லவராயன் கட்டு கிராமத்தில் அமைந்துள்ள மகேஸ்வரன் சத்தியா என்பவரின் வாழ்வாதாரமாக வளர்க்கப்பட்டு வந்த 11 ஆடுகளும் ஒரு குட்டியும் 29-09-2024 மாலை உயிரிழந்துள்ளன.

குறித்த ஆடுகள் அன்றைய தினம் மேச்சலுக்கு சென்ற இடத்தில் தனிநபரது காணிக்குள் சென்றுள்ளது.

இந்நிலையில் தண்ணீருடன் விவசாயத்துக்கு பயன்படுத்தப்படும் இரசாயன உரம் கலக்கப்பட்டு நீர் ஆடுகளுக்கு பருக வைக்கப்பட்டமையால் 11 ஆடுகளும் உயிரிழந்திருந்த நிலையில் காணப்பட்டது. இது தொடர்பில் பூநகரி போலீஸ ில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இது தொடர்பான விசாரணைகளை போலீஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# யாழ்ப்பாணத்தில் காட்டுமிராண்டித்தனமாக மாணவனைத் தாக்கிய ஆசிரியர்

## நீதிமன்றம் செல்வதை தடுக்க பெற்றோருக்கு அழுத்தம்!



யாழ். இருபாலைப் பகுதியில் அமைந்துள்ள தனியார் கல்வி நிறுவனத்தில் கல்வி கற்கும் மாணவன் ஒருவரை விஞ்ஞான பாட ஆசிரியர் காட்டுமிராண்டித்தனமாக தாக்கியுள்ளார்.

குறித்த சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது, இரு மாணவர்களுக்கிடையில் புத்தகப் பை தொடர்பில் இழுபறி ஏற்பட்டதாகவும் ஒரு மாணவனை அழைத்த ஆசிரியர் தாறுமாகத் தடியாலும் கைகளாலும் தாக்கியுள்ளார்.

குறித்த ஆசிரியர் புத்தூர் சோமஸ்கந்த பாடசாலையில் விஞ்ஞான பாடம் கற்பிப்பவர் என்பது ஆரம்ப கட்ட விசாரணைகளை தெரியவந்துள்ளது.

சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிசார் குறித்த ஆசிரியரை கைது செய்தனர். இருப்பினும் அந்த ஆசிரியரை நீதிமன்றத்திற்கு செல்லவிடாது பாதிக்கப்பட்ட மாணவனின் பெற்றோருக்கு அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டு வருவதாக அறிய கிடைத்துள்ளது.

குறித்த ஆசிரியரை இன்றையதினம் மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி மாணவன் 9ஏ சித்திகளை பெற்று சாதனை!


நடைபெற்று முடிந்த க.பொ.த சாதாரண தரப் பரீட்சையின் பெறுபேறுகள் இன்றையதினம் வெளியாகி உள்ளன.



அந்தவகையில் வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி மாணவனான கேதீஸ்வரன் கேசவன் 9A சித்திகளை பெற்று சாதனை படைத்துள்ளார்.

சைவநெறி A
தமிழ் A
கணிதம் A
விஞ்ஞானம் A
ஆங்கிலம் A
வரலாறு A
தகவல்தொடர்பாடல் தொழிநுட்பம் A
தமிழ் இலக்கியநயம் A
வணிகக்கல்வியும் கணக்கீடும் A

# முன்னாள் ஜனாதிபதியிடமிருந்து மதுபான நிலைய அனுமதிப் பத்திரம் பெற்றவர்களில் முன்னாள் நீதியரசரும் வடக்கின் முதலமைச்சருமான சி.வி.விக்னேஸ்வரனும் ஒருவர்



தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் "தீவிரமான "சைவப் பழமும்". முன்னாள் நீதியரசரும் வடக்கின் முன்னாள் முதலமைச்சருமான சி.வி.விக்னேஸ்வரன் கிளிநொச்சியில் ஓர் மதுபானச்சாலை பெற்றமை தற்போது அம்பலமாகியுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தின் கரடிபோக்குச் சந்தியில் ஏ9 வைன் ஸ்ரோர் என்னும் பெயரில் இயங்கும் மதுபானசாலைக்கான அனுமதியை வடக்கு மாகாண முதலமைச்சர், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரான சி.வி.விகனேஸ்வரன் ஊடாகப் பெற்றமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

சி.வி.விக்னேஸ்வரன்.

2024-02-19 அன்று எழுத்து மூலக் கடிதம் வழங்கியே இந்த மதுபானசாலைக்கான அனுமதி அப்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்காவின் ஊடாக வழங்கப்பட்டுள்ளது.

தனுசா நடராசா என்னும் பெயரில் இந்த மதுபானசாலைக்காக நீதியரசர் விக்னேஸ்வரன் பரிந்துரைத்து இந்த மதுபானசாலை வழங்கப்பட்டுள்ளது.

ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சிக் காலத்தில் 172 மதுபானசாலைகளிற்கான அனுமதிகள் வழங்கப்பட்டு அவை திறக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

எமது அரசியல்வாதிகள் கூட மக்களைப் பற்றிச் சிந்திக்காமல் நல்ல சாலைகள் (வீதிகள்) எமது பிரதேசங்களில் அமைக்கப்பட வேண்டும் என்று எண்ணாமல் "மதுச்சாலை"கள் பற்றியே சிந்தித்த வண்ணம் இருந்திருக்கின்றார்கள் என்பது தற்போது புலனாகியுள்ளது.

# "மாற்றத்துக்கான இளையோர்" எனும் தொனிப்பொருளில் கிளிநொச்சியில் கலந்துரையாடல்!



"மாற்றத்துக்கான இளையோர்" எனும் தொனிப்பொருளில் கலந்துரையாடல் ஒன்று 29-09-2024 அன்று கிளிநொச்சியில் இடம்பெற்றது.

நடைபெறவுள்ள நாடாளுமன்ற தேர்தலில் பதிவு செய்யப்பட்ட கட்சிகள் இளைஞர்களுக்கும், புதிய முகங்களுக்கும் வாய்ப்பளிக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டிற்கு அழுத்தம் கொடுக்கும் வகையில் குறித்த கலந்துரையாடல் இடம் பெற்றது.

இக்கலந்துரையாடலில், யாழ்ப்பாணம், வன்னி தேர்தல் மாவட்டங்களிலிருந்து இளைஞர்கள் பலரும் கலந்து கொண்டார்.

இதன்போது சுயேட்சையாக இளைஞர்களை தேர்தலில் போட்டியிட வேண்டும் என இளைஞர்களால் வலியுறுத்தப்பட்டது. ஆனாலும், இந்த தேர்தலில் போட்டியிடுவது தொடர்பில் முடிவு இல்லை என தீர்மானிக்கப்பட்டது.

இளைஞர்களை ஒன்று திரட்டி மாற்றத்தை ஏற்படுத்துவதற்கான பணிகளை முன்னெடுக்க 7 பேர் கொண்ட குழு உருவாக்கப்பட்டதுடன், கட்சிகளுக்கு இளைஞர்களை உள்வாங்க அழுத்தம் கொடுப்பது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

குறித்த கலந்துரையாடலின் பின்னர் அக்குழுவின் செயலாளர் அந்தோனிமுத்து ஜெயாளன் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில்,

இன்று பல்வேறு பகுதியிலும் இருந்து இளைஞர்கள் கலந்து கொண்டனர். அனைத்து கட்சிகளுக்கும் இளைஞர்களை உள்வாங்குவதற்கு அழுத்தம் கொடுப்பது எனவும், சுயேட்சையாக போட்டியிடும் இளைஞர்களுக்கு அவர்களின் பின்னணி அறிந்து ஆதரிப்பது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

இக்குழுவை வழிநடத்த குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது. அதன் மூலம் வடக்கு மாகாணத்தில் இளைஞர்களை ஒன்று திரட்டி இளம் தலைவரை தெரிவு செய்ய வேண்டும். அதற்கான பணிகள் நடைபெற்று வருகிறது என தெரிவித்தார்.

தென்னிலங்கை அரசியல் கட்சிகள் பணம் கொடுத்து உங்களை களம் இறக்கியதாக கூறப்படுவது தொடர்பில் வினவிய போது,

சமூக வலைத்தளங்களில் அவ்வாறு சேறு பூசும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகிறது. உண்மையில் அவ்வாறு எமக்கு யாரும் பணம் தரவில்லை. நாங்கள் சுயாதீனமாகவே இயங்குகிறோம். அவ்வாறு சேறு பூசுபவர்கள் பணம் பெற்றிருந்தால் நிரூபிக்க வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.



# பின்தங்கிய கிராமமான ஐயன்கன்குளம் பாடசாலையில் முதன்முதலில் 9A பெறுபேற்றினை இன்பராசா நிலாயினி என்ற மாணவி பெற்று சாதனை!



துணுக்காய் கல்வி வலயத்திற்கு உட்பட்ட மிகவும் பின்தங்கிய கிராம பாடசாலையாகிய மு/ ஐயன்கன் குளம் மாகாவித்தியாலயத்தின் பாடசாலை வரலாற்றில் முதன்முறையாக இன்பராசா நிலாயினி என்ற மாணவி 9A சித்தியினை பெற்று பாடசாலைக்கும் கிராமத்திற்கும் பெருமையைத் தேடித்தந்துள்ளார்.

எவ்வித அடிப்படை வசதிகளுமற்ற இக்கிராமத்தில் தந்தையை இழந்த நிலையில் தாயின் வழிகாட்டலின் கீழ் வளர்ந்து இப்பெறுபேற்றினை பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. இந்த வெற்றிச் செல்வியை உலகெங்கும் வாழும் தமிழ் மக்கள் வாழ்த்தவும் ஆதரவு வழங்கவும் வேண்டுகின்றோம்

# இவ்வார ராசிபலன்

**04-10-2024 வெள்ளி தொடக்கம் 10-10-2024 வியாழன் வரையும்**



ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது!
என்ற உறுதியோடு உங்கள் 'ராஜயோகம்'

"ஜோதிட மகரிஷி"
**Dr. K. RAM.Ph.D (USA)**
தொடர்புக்கு: 0091-9840160068
9940431377





**மேஷம்:** புதிய வாய்ப்புக்கள் வரும். பொல்லாத காரியங்கள் சொல்லாமல் விலகும். புத்தி சாதுர்யம் கூடும். புத்திரர் வழியில் சந்தோஷம் கூடும். புதிய வாகனம் சேரும். தீய எண்ணம் விலகும். ஜீவன முன்னேற்றம் ஏற்படும். திடீர் தனவரவு ஏற்படும். அனுகூலமற்ற சூழ்நிலைகள் உருவாகும். பொன், பொருள் சேர்க்கையுண்டு. கூட்டுத்தொழில் பிரிவு ஏற்படும். செயல் திறமை அதிகரிக்கும். கடன்சுமை அதிகரிக்கும். கடின உழைப்பு தேவைப்படும். கால்நடைகளால் லாபம் தரும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். விருந்தினர் வருகை உண்டு. வீண் செலவுகள் குறையும். அயல்நாட்டுப் பயணம் உண்டு. ஆடம்பரச் செலவு அதிகரிக்கும். அரசியலில் புகழ் சேரும். முகப்பொலிவு கூடும். முயற்சி பலன் தரும். குதூகலம் தழைத்தோங்கும். நிலம் வாங்கும் யோகம் உண்டு. கல்விக்கடன் ஏற்படும். குடும்ப மன நிறைவு தரும். புதிய முதலீடுகளை தவிர்க்கவும். நிர்வாகத் திறன் கூடும். உத்தியோகத்தில் சலுகைகள் கிடைக்கும். நல்லோர்கள் நட்பு ஏற்படும். பணவிரயம் ஏற்படும். சொத்துக்கள் சேரும். கணவன், மனைவி சலசலப்பு ஏற்படும். வாழ்க்கை வசதி பெருகும். வாழ்வு நிலை உயரும். மனவேதனை குறையும். கல்வியில் கவனம் குறையும். போட்டிகள் மறையும். லாபம் திருப்தி தரும். மன அமைதி கூடும். மற்றவர் தொல்லை நீங்கும். குடும்ப ஒற்றுமை ஓங்கும். வெற்றி நிலை தொடரும். இடமாற்றம் நன்மை தரும். பதவியில் உயர்வு வரும். நண்பரால் சங்கடம் நேரடும். வியாபாரத்தில் எதிர்பாராத லாபம் கிட்டும்.

வழிபட வேண்டிய தெய்வம்: தனலட்சுமி, அதிர்ஷ்ட எண்: 2,1,5,9
அதிர்ஷ்ட நிறம்: பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Y,P




**ரிஷபம்:** ஆசைகள் நிறைவேறும் வாரம். நண்பரால் சங்கடம் நேரும். நடவடிக்கையில் மாற்றம் ஏற்படும். வியாபாரத்தில் எதிர்பாராத லாபம் சேரும். பெற்றோர்களால் பாராட்டப் பெறுவீர்கள். செயல் விவேகம் கூடும். தனவரவு உற்சாகம் தரும். பணிமாற்றம் நன்மை தரும். மாணவர்களுக்கு படிப்பில் கவனம் தேவை. தெய்வ நம்பிக்கை அதிகரிக்கும். கற்பனை ஆற்றல் பெருகும். பெண்களின் திறமை வெளிப்படும். அடுத்தவர் நட்பு ஆக்கம் தரும். வெளிநாட்டு வாய்ப்பு தேடி வரும். தாயின் பிரார்த்தனையால் தகுதிகள் உயரும். மனை வாங்கும் சிந்தனை உண்டு. மனைவியால் ஆறுதல் உண்டு. அதிர்ஷ்ட வாய்ப்பு கூடி வரும். தொலைத்தூர பயணம் லாபம் தரும். பணிச்சுமை குறையும். வியாபார மந்தநிலை அகலும். கடன் உதவி கிட்டும். அதிகாரியின் ஆதரவு பெருகும். அடிப்படை தேவைகள் பூர்த்தியாகும். ஆன்றோர் வாழ்த்து கிட்டும். வியாபார வளர்ச்சி உண்டு. கொடுக்கல், வாங்கலால் நன்மை சேரும். அரசு வகையில் ஆதாயம் கிட்டும். ஆரோக்கிய அபிவிருத்தி ஏற்படும். பிள்ளைகள் கல்வி மேம்படும். திண்டாட்டங்கள் குறையும். திறமைகள் வெளிப்படும். பெருமைகள் கூடி வரும். வாய்ப்பேச்சில் கவனம் தேவை. விசேஷ பலன்கள் உண்டு. வறுமை நிலை மாறும். வஸ்திர தான பிரார்த்தனையால் வளமும், நலமும், ஜெயமும் உண்டாகும். ஏஜென்சி தொழில் ஏற்றம் தரும். எண்ணங்கள் மாற்றம் தரும். உழைப்பு உயர்வு தரும். விவசாயம் விளைச்சல் தரும். கடன் பிரச்சனை தீரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: விருட்ஷ தேவதை, அதிர்ஷ்ட எண்: 9,5,4,3
அதிர்ஷ்ட நிறம்: மஞ்சள், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: X,K




**மிதுனம்:** எதிர்பார்த்த காரியம் நடக்கும் வாரம். காரிய அனுகூலம் தரும். பூர்வீகச் சொத்து வரும். புத்தாடை, ஆபரணம் சேரும். புதிய தொழில் வாய்ப்புக்கள் வரும். மனதெளிவு கிட்டும். மனைவியின் அன்பு கிட்டும். மற்றவர் உதவி கிட்டும். உறவினர்கள் பாராட்டு கிட்டும். உத்தியோக உயர்வு கிட்டும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். கலைத்தொழிலில் உயர்வு கிட்டும். எதிர்பாராத ஏற்றம் கிட்டும். இனிப்பானச் செய்திகள் வரும். கோதுமை தானப் பிரார்த்தனையால் குலவிருத்தி சேரும். மனை வாங்கும் சிந்தனையும், மனதில் உள்ள காதலும் பூர்த்தியாகும். ஆடம்பர சுகங்கள் கூடும். ஏற்றமான தருணம் அமையும். மாற்றமான வாய்ப்புக்கள் கிட்டும். மற்றவர்களால் மனஅமைதி கெடும். விளையாட்டுச் சிந்தனைகள் மேலோங்கும். மாணவர்களுக்கு கல்வியில் தடை ஏற்படும். தெய்வீகப் பற்று கூடும். வியாபாரம் செழிக்கும். வீண் செலவு குறையும். புதிய நட்பை தவிர்க்கவும். புத்திரர் வழியில் கவலை ஏற்படும். போட்டிகள் நீடிக்கும். புதிய முதலீடு தவிர்க்கவும். வெளிநாட்டுப் பயணம் ஏற்படும். வாழ்க்கை வசதி பெருகும். அரசாங்க அனுகூலம் கூடும். இளமையோடும், பெருமையோடும் காட்சியளிப்பீர்கள். பிள்ளைகள் வகையில் இருந்த தொல்லைகள் விலகும். தீர்த்த யாத்திரைகள் உண்டு. வீண் வம்பு தேடி வரும். வியாபாரம் திருப்தி தரும். பழைய நட்பால் பணவிரயம் உண்டு. கணவன், மனைவி அன்யோன்யம் அதிகரிக்கும். காரியத்தடை அகலும். நல்ல வாய்ப்புக்கள் நாடி வரும். நல்லவர் நட்பு கூடி வரும். நலிந்த வாழ்வு மேன்மை தரும். புத்திரரால் பூரிப்பு உண்டு. இல்லத்தில் மகிழ்ச்சியுண்டு.

வழிபட வேண்டிய தெய்வம்: சந்திரபகவான், அதிர்ஷ்ட எண்: 5,3,2,9
அதிர்ஷ்ட நிறம்: வெளிர்நீலம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: K,A




**கடகம்:** வீரியத்தோடு செயல்படும் வாரம். இரும்புத்தொழில் லாபம் உண்டு. சங்கடங்கள் அதிகமாகும். அரசியலில் ஆதாயம் உண்டு. வேலைப்பளு கூடும். அரிசி தானப் பிரார்த்தனையால் ஆயுள் விருத்தி உண்டாகும். குடும்பத்தில் குதூகலம் ஏற்படும். வியாபாரத்தில் வெகு லாபம் கிடைக்கும் காலம். அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் அலைமோதும். கேட்ட இடத்தில் பணம் கிடைக்கும். திருமணம் கூடி வரும். மாணவர் பாராட்டு பெறுவர். அரசு வழி ஆதாயம் உண்டு. புதிய வாய்ப்பு தேடி வரும். உணவு விடுதி லாபம் தரும். இனிக்கும் சம்பவம் அமையும். தொழில் நிம்மதி கொடுக்கும். சகோதரியால் லாபம் உண்டு. உள்ளத்தில் மகிழ்ச்சி பொங்கும். விவசாய நிலம் சேரும். வேண்டிய உதவி கிட்டும். விரக்தி நிலை மாறும். குதூகலப் பயணம் உண்டு. குடும்ப மேன்மை உண்டு. திருமண வாய்ப்பு கூடி வரும். கேட்ட இடத்தில் பணம் வரும். எள் தானப் பிரார்த்தனையால் ஏற்றமும், மாற்றமும் உண்டாகும். குடும்ப பாசம் அதிகரிக்கும். இடமாற்றம் ஏற்படும். நண்பர்கள் கவனம் தேவை. முயற்சி பலன் தரும். பழிச்சொல் தேடி வரும். காரியம் இழுபறியாகும். சுபிட்ஷம் பெருகும். உத்தியோகத்தில் உயர்வு ஏற்படும். உணவு பிரியம் அதிகரிக்கும். ஆதலால் கவனம் தேவை. கால்நடைகளால் பலன் உண்டு. வருமானத் தடை உண்டு. பணியாட்களால் தொல்லை ஏற்படும். கல்வியில் மந்த நிலை காணப்படும். வீடு, மனை யோகம் உண்டு. நிர்வாகத் திறமை அதிகரிக்கும். கடவுள் பிரார்த்தனை எதுவாக இருந்தாலும் கைமேல் பலன் கிடைக்கும். ஆரோக்கியம் அதிகரிக்கும். ஆதாயம் மிகுதியாகும். கஷ்ட காலம் விலகும். சுபச்செய்திகள் வரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: காமாட்சி அம்மன், அதிர்ஷ்ட எண்: 4,7,9,1
அதிர்ஷ்ட நிறம்: ஆரஞ்சு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: S,V




**சிம்மம்:** உடல்நலம் ஷேமம் தரும் வாரம். பயணம் லாபம் தரும். மருத்துவச் செலவு அதிகரிக்கும். தொழில்போட்டி அதிகமாகும். புதிய கடன் உருவாகும். ஆக்கப்பூர்வமான எண்ணம் உதயமாகும். உடல்நலத்தில் கவனம் தேவை. வாகனச் செலவுகள் அதிகரிக்கும். பெற்றோர்களின் ஆதரவு அதிகரிக்கும். பிரபல்ய ஆசை ஏற்படும். பெருமிதத்துடன் காணப்படுவீர்கள். பிள்ளைகளின் தேவைகள் பூர்த்தியாகும். வேற்றுமைகள் விலகும். வெறுப்புக்கள் அகலும். வெளிநாட்டுப் பயணம் உருவாகும். மனநிறைவு உண்டாகும். குடும்ப உறவு பலப்படும். ஆடம்பர நாட்டம் ஏற்படும். பயணம் தடைப்படும். வணிகத்தொழில் விரிவடையும். விவசாயிகளுக்கு ஏற்றமான தருணம். பணவரவு திருப்தி தரும். பல் வலி வந்து போகும். பிராணிகளால் தொல்லை ஏற்படும். பெண்களால் பெருமை சேரும். முயற்சிகள் பலிதமாகும். அணிகலன் சேர்க்கையுண்டு. வெளிநாட்டுப் பயணம் உருவாகும். வீண் விரயம் தவிர்க்கவும். காரியத்தில் வெற்றி கிடைக்கும். கனவுகளும், ஆசைகளும் நிறைவேறும். கௌரவம் அதிகரிக்கும். குடும்ப மேன்மை உண்டாகும். உடல் சோர்வு ஏற்படும். ஆடம்பரப் பொருள் சேரும். திருஷ்டிகள் விலகும். பிள்ளைகளின் அன்பு அதிகரிக்கும். தெளிவான முடிவுகள் உதயமாகும். செல்வச் செழிப்பு உயரும். விவேகம் கை கொடுக்கும். வெற்றி வீடு தேடி வரும். நினைத்தது நிறைவேறும். மின்சாரத்தில் கவனம் தேவை. குடும்ப கௌரவம் உயரும். வயிறு உபாதைகள் தோன்றி மறையும். வழக்குகள் சாதகமாகும். கருத்து வேறுபாடுகள் அகலும். மாணவர்களுக்கு கல்வியில் அக்கறை தேவை. அச்சுத்தொழில் ஆதாயம் தரும். பொறுமையைக் கையாள வேண்டும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீராமர், அதிர்ஷ்ட எண்: 4,5,6,9
அதிர்ஷ்ட நிறம்: முட்செவ்வந்தி, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Z,C





**கன்னி:** பணவரவு திருப்தி தரும் வாரம். சவாலான விஷயங்களை சமாளித்து சாதனை நிகழ்த்தும் காலம். பழையக் கடன் தீரும். அச்சத்தை தவிர்ப்பது நல்லது. வியாபாரம் செழிக்கும். பொறுப்புக்கள் கூடும். சக ஊழியர்கள் உதவி உண்டு. சம்பள உயர்வு உண்டு. உறவினர்களால் அலைச்சல் உண்டு. மனோ பயம் ஏற்படும். முதுகில் வலி வந்து போகும். திடீர் பயணம் உண்டு. மாணவர்கள் படிப்பில் கவனம் தேவை. உடன்பிறப்பால் உதவி உண்டு. சுபச்செலவு அதிகரிக்கும். வி.ஐ.பியின் தொடர்பு கிடைக்கும். கணவன் அன்பு அதிகரிக்கும். பணப்பிரச்சனைத் தீரும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். உங்கள் தனித்தன்மை வெளிப்படும். ஷேர் மார்க்கெட்டில் லாபம் தரும். பிரியமானவர்களின் சந்திப்பு கிட்டும். பழைய பாக்கிகள் வசூலாகும். முற்போக்கு சிந்தனை வரும். சோம்பல் அதிகரிக்கும். திடீர் பயணம் ஏற்படும். எதிர்ப்புக்கள் விலகும். குடும்ப அன்யோன்யம் கூடும். அற்புத வாய்ப்பு கிட்டும். பெண்களின் ஆலோசனை பலன் தரும். வேற்று மனிதரால் லாபம் உண்டு. குளிர்பானத் தொழில் கவனம் தேவை. செயல் விவேகம் கூடும். தொலைபேசித் தகவல் தொல்லை தரும். பங்குத்தொழில் பணம் தரும். பெத்தவங்க ஆசியும், மத்தவங்க வாழ்த்தும் கிடைக்கும். அடுத்த வீட்டாரின் ஆதரவு கிட்டும். பெருமிதத்துடன் காணப்படுவீர்கள். பிள்ளைகளின் தேவைகள் பூர்த்தியாகும். பிரபல்ய ஆசை ஏற்படும். ஆடை, அணிகலன் சேர்க்கையுண்டு. கண் நோய் வந்து போகும். கால்நடைகளால் லாபம் உண்டு. பரபரப்பு இல்லாமல் பணவரவு பெருகும் காலம்.

வழிபட வேண்டிய தெய்வம்: தட்ஷிணாமூர்த்தி, அதிர்ஷ்ட எண்: 6,9,1,4
அதிர்ஷ்ட நிறம்: ஊதாநிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: M,U




**துலாம்:** சாதகமான சூழ்நிலை உருவாகும் வாரம். பொன் பொருள் சேர்க்கையுண்டு. மருத்துவச் செலவு உண்டு. அடுத்தவர் தலையீடு தவிர்க்கவும். ஆடம்பர எண்ணம் அலைமோதும். நண்பர்களால் நன்மையுண்டு. பாதகமான சூழ்நிலைகள் காணப்படும். பணியாட்கள் ஆதரவு அதிகரிக்கும். பூர்வீகச் சொத்துக்கள் சேரும். வீட்டுத் தேவைகள் பூர்த்தியாகும். வாகனச் செலவுகள் அதிகரிக்கும். உடல்நலத்தில் கவனம் தேவை. ஆக்கப்பூர்வமான எண்ணங்கள் உதயமாகும். உத்தியோக உயர்வு கிட்டும். பயணம் அனுகூலம் தரும். தெய்வீக ஈடுபாடு அதிகரிக்கும். பணப்பிரச்சினை தீரும். வியாபாரம் சிறக்கும். கணவன், மனைவி ஒற்றுமை கூடும். கிருபைகளும் பெருமைகளும் கிடைக்கும். காரிய வெற்றி கிட்டும். துயரங்களையும் தோல்விகளையும் தாண்டி உயரங்களைத் தொடும் காலம். குடும்ப ஒற்றுமை கூடும். படிப்பில் ஆர்வம் கூடும். விரோதம் விலகும். வருமான வரி தொல்லை ஏற்படும். சங்கடம் அதிகரிக்கும். பணியில் கவனம் தேவை. குடும்ப சச்சரவு ஏற்படும். அரசியல் ஆதாயம் உண்டு. புண்ணியம் சேரும். கலைத்துறையில் முன்னேற்றம் கொடுக்கும். மாணவர்கள் திறமை பளிச்சிடும். தோற்றப் பொலிவு கூடும். பொறியியல் துறை லாபம் தரும். ஆடை, அணிகலன் சேரும். உடல்நலம் திருப்தி தரும். தொலைநோக்கு சிந்தனை உருவாகும். விலைமதிக்க முடியாத வெகுமானம் கிடைக்கும். வேண்டாத நட்பு விலகும். விரக்தி நிலை மாறும்.

வழிபட வேண்டிய தெய்வம்: துர்காதேவி, அதிர்ஷ்ட எண்: 7,5,4,3
அதிர்ஷ்ட நிறம்: காவிநிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Y,J




**விருச்சிகம்:** போட்டி, பொறாமைகள் விலகும் வாரம். புண்ணியம் சேரும். நிதி நிறுவனம் லாபம் தரும். தொழில் உற்பத்தி அதிகரிக்கும். வாகன யோகம் உண்டு. மாணவர் மதிப்பு உயரும். வேண்டிய உதவி கிட்டும். வாகனயோகயம் அதிகரிக்கும். வகையான செல்வம் சேரும். குடும்ப தேவைகள் பூர்த்தியாகும். பணம் புரளும். பூமியால் நன்மை தரும். செலவுகள் தவிர்க்கவும். வேலைப்பளு அதிகரிக்கும். பொறாமைகள் விலகும். புதியப்பொருள் சேரும். வழக்குகள் திருப்பம் தரும். செல்வாக்கு அதிகமாகும். இடமாற்றம் நன்மை தரும். விவாதம் தவிர்ப்பது நல்லது. பெற்றோர் நலம் கவனம் தேவை. சகோதர விசுவாசம் கூடும். சூழ்நிலைகளால் மாறுதல் உண்டு. பயணம் லாபம் தரும். அரசியலில் பொறுமை தேவை. வீண் வம்பு விலகும். பாதகமான சூழ்நிலை விலகும். வினோதமான எண்ணங்கள் விலகும். ஆபரணச் சேர்க்கையுண்டு. ஆசைப்பட்ட வாழ்க்கை அமையும். பிரியமானவர்களின் சந்திப்பு கிட்டும். அடுத்த வீட்டாரின் ஆதரவு கிட்டும். மனைவியால் மரியாதை உயரும். கன்னிப் பெண்களிடம் கவனம் தேவை. தொழில் போட்டி அதிகமாகும். மருத்துவச் செலவு கூடும். பணவரவு திருப்தி தரும். முயற்சிகள் பலிதமாகும். சேமிக்கும் எண்ணம் மேலோங்கும். தனவரவு பெருகும். மேன்மைகள் அதிக அளவில் நடைபெறும். சாமர்த்தியமாக செயல்படுவீர்கள். வீண் வம்பு அகலும். வியாபாரத்தடை ஏற்படும். ஆரோக்கியம் கவனம் தேவை.

**(தொடர்ச்சி 29 பக்கம்)**

# இவ்வார ராசிபலன்

(28 பக்கம் தொடர்ச்சி)

**விருச்சிகம்:** விவாக முயற்சி வெற்றி தரும். உடல் உபாதை நீங்கும்.
வழிபட வேண்டிய தெய்வம்: காளிகாம்பாள், அதிர்ஷ்ட எண்: 3,1,9,6
அதிர்ஷ்ட நிறம்: வாடாமல்லி, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: U,P




**தனுசு:** கலகலப்பான வாரம். வியாபாரத்தில் விருத்தி ஏற்படும். அரசு வகையில் ஆதாயம் உண்டு. உறவினரால் அனுகூலம் உண்டு. நற்காரியங்களில் ஈடுபடுவீர்கள். குடும்ப ஒற்றுமை அதிகமாகும். நிதி நிலைமை சீராகும். முயற்சிகள் வெற்றி தரும். ஆரோக்கியம் கவனம் தேவை. விவாக முயற்சி வெற்றியை தரும். உடல் உபாதை நீங்கும். உறவினரால் பண விரயம் உண்டு. சுபகாரியம் கைகூடும். வேலை பளு அதிகரிக்கும். பொறுப்புக்கள் கூடும். புதிய முதலீடுகளை தவிர்க்கவும். நிதி நிலைமை சீராகும். முயற்சிகள் வெற்றியைத் தரும். குடும்ப ஒற்றுமை அதிகமாகும். நற்காரியங்களில் ஈடுபடுவீர்கள். உறவினர்களால் அனுகூலம் உண்டு. அரசு வகையில் ஆதாயம் உண்டு. வியாபாரத்தில் விருத்தி ஏற்படும். சாதுர்யமான பேச்சுக்களால் சாதகமான சூழ்நிலைகளை சந்திப்பீர்கள். முத்தான வாய்ப்பு பெருகும். ஸ்திர சொத்து சேரும். உங்களின் தனித்தன்மை வெளிப்படும். சுயநலம் கூடும். காரியங்களில் வெற்றி காண்பீர்கள். கணவன், மனைவி ஒற்றுமை கூடும். பணவரவு உண்டு. திருப்புமுனை ஏற்படும். வருத்தங்கள் மறையும். திருத்தமான முடிவு ஏற்படும். காதல் கசக்கும். விவசாயம் பலன் அளிக்கும். பாதகம் விலகும். பொன்ரூபவ் பொருள் சேரும். மருத்துவச் செலவு உண்டாகும். மங்களச் செய்தி வரும். குடும்ப வளர்ச்சிகூடும். பழையக் கடன் வசூலாகும். புதிய நட்பு உருவாகும். கல்வியில் ஆர்வம் கூடும். கட்டிட தொழில் லாபம் தரும். பங்குத்தொழிலில் கவனம் தேவை. பதவி வாய்ப்பு வரும். பிள்ளைகளால் தொல்லைகள் உண்டு. வீட்டுத் தேவைகள் பூர்த்தியாகும். தந்தையின் உடல்நலம் கவனம் தேவை. ஆக்கப்பூர்வமான எண்ணம் உதயமாகும். வாகனச் செலவுகள் ஏற்படும். பிரபல்ய ஆசை ஏற்படும். பெருமிதத்துடன் காணப்படுவீர்கள்.
வழிபட வேண்டிய தெய்வம்: தனலட்சுமி, அதிர்ஷ்ட எண்: 9,5,4,7
அதிர்ஷ்ட நிறம்: செம்மஞ்சள், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: O,J




**மகரம்:** நியாயமான ஆசைகள் நிறைவேறும் வாரம். கால்நடைகளால் லாபம் உண்டு. கவலைகள் விலகும். கண் நோய் வந்து போகும். கடன் வாங்க நேரிடும். கலைத்தொழில் லாபம் தரும். திடீர் திருப்பம் ஏற்படும். பதவி உயர்வு கிட்டும். ஆடம்பர எண்ணம் அலைமோதும். ஆடை, அணிகலன் சேர்க்கையுண்டு. தொழில் வாய்ப்பு கூடி வரும். பிரபல்ய ஆசை ஏற்படும். அடுத்த வீட்டாரின் ஆதரவு கிட்டும். புதிய நட்பு உருவாகும். மனைவியால் யாதை உயரும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். தகுதிகள் மிகுதியாகும். மனநிறைவுகள் உண்டாகும். குடும்ப உறவு பலப்படும். மிகையான நன்மைகள் கிட்டும். முறிந்து போன உறவுகள் மகிழ்ந்து வந்து இணையும் காலம். வெற்றிகள் குவியும். பாராட்டுக்கள் அதிகமாகும். உத்தியோக உயர்வு உண்டு. சாதகமான வாய்ப்பு உருவாகும். வார்த்தைகளில் நிதானம் நல்லது. மனைவியின் அன்பு அதிகரிக்கும். பெற்றோர் வழி மருத்துவச் செலவு உண்டாகும். எதிரிகள் ஏமாற்றம் அடைவர்.. ஆரோக்யம் அதிகரிக்கும். கலகலப்பான செய்திகள் வரும். ஆபத்துக்கள் விலகக்கூடிய மகத்தான காலம். ஆலய தரிசனத்தால் ஆத்ம பலன் பெறக்கூடிய அற்புதமான காலம். நன்மைகள் நாடி வரும். வராத கடன் வந்து சேரும். ஆண்கள் அதிகாரம் உயரும். நட்பு வட்டம் விரிவடையும். பெரியோர்களின் ஆலோசனை பலன் தரும். கணவன், மனைவி அன்யோன்யம் அதிகரிக்கும். பிள்ளைகளால் பெருமை சேரும். பேச்சில் நிதானம் தேவை. திட்டம் வெற்றி பெறும். நட்டம் இல்லாத நன்மை அதிகரிக்கும். சட்டம் சாதகமாகும். சகோதர வகையில் சச்சரவு ஏற்படும். பழைய நண்பரால் பணவரவு உண்டு. புண்ணிய ஸ்தலம் செல்ல வேண்டி வரும். பிள்ளைகள் தொல்லை அதிகரிக்கும். பெற்றவர்கள் பாராட்டு கிட்டும். திருப்பு முனை ஏற்படும். சிரித்த முகத்தோடு காணப்படுவீர்கள். சாதனையான எண்ணங்கள் உதயமாகும்.
வழிபட வேண்டிய தெய்வம்: வலம்புரி விநாயகர், அதிர்ஷ்ட எண்: 7,9,4,3
அதிர்ஷ்ட நிறம்: வெண்பட்டு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: W,K




**கும்பம்:** எதார்த்தமாக செயல்படும் வாரம். எதிர்கால எண்ணம் நிறைவேறும். மற்றவர்களிடத்தில் மரியாதை உயரும். பெற்றோர்களின் பாராட்டு கிட்டும். புதிய நண்பர்களால் தகுதி மேம்படும். வரவு திருப்தி தரும். காரிய தாமதம் ஏற்படும். ஸ்டேஷனரி தொழில் லாபம் தரும். பிள்ளைகளால் செலவு அதிகரிக்கும். ஆடை, அணிகலன்கள் சேரும். மனச்சஞ்சலம் ஏற்படும். பகையாளியிடம் எச்சரிக்கை தேவை. பழையக்கடன் பஞ்சாயத்து மூலம் தீர்வுக்கு வரும். மேலான ஆசியும் மேதைகளின் நட்பும் கிடைக்கும். வீடு, மனை வாங்கும் யோகம் கிடைக்கும். பணியில் கண்டிப்பு அவசியம். தொழில் லாபம் பெருகும். ஏற்றமும், மாற்றமும் அதிகரிக்கும். பெண்களுக்கு யோகம் கூடும். விளையாட்டுத் துறையில் லாபம் தரும். இரும்புத்தொழில் ஏற்றம் தரும். வேலைப்பளு அதிகரிக்கும். ஐஸ்வர்யம் சேரக்கூடிய அற்புதமான காலம். ஆபரணப் பொருள்கள் சேரும். எண்ணிய காரியம் கைக்கூடும். தொழிலில் எதிர்பாரா லாபம் சேரும். நடவடிக்கையில் மாற்றம் வரும். நண்பரால் சங்கடம் நேரும். பதவியில் உயர்வு வரும். வெற்றி நிலை தொடரும். ராகு காலப் பிரார்த்தனையால் “ராஜயோகம்” கிடைக்கும். நன்மதிப்பு உருவாகும். வாடும் நிலை விலகி வீடு நிலமும் வாங்கும் காலம். தோற்றப் பொலிவு கூடும். வேற்று மனிதரால் வசதி உண்டு. பொதுப்பணியில் ஆர்வம் கூடும். சுபகாரியம் கூடி வரும். அரசியலில் சந்தர்ப்பம் அமையும். பழைய நட்ப தொல்லைத் தரும். இல்லத்தில் நல்லவை நடக்கும். இனிய வாய்ப்புக்கள் கூடி வரும். கல்விக்கடன் உண்டாகும். பயணம் நன்மை தரும். அளவான பேச்சு ஆறுதல் தரும். கடன் உபத்திரவம் குறையும். உறவினர் பாராட்டுக் கிட்டும். மகிழ்ச்சியான செய்தி வரும்.
வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீவிஷ்ணு, அதிர்ஷ்ட எண்: 4,1,3,5
அதிர்ஷ்ட நிறம்: வெளிர் நீலம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Z,K




**மீனம்:** ஆதாயம் கிடைக்கும் வாரம். உற்சாகம் மேலோங்கும். வறுமை நிலை மாறும். வாழ்த்துக்கள் வந்து சேரும். வாய்பேச்சில் நிதானம் தேவை. நிர்வாக அலைச்சல் கூடும். வெளியூர் பயணம் உண்டு. அரசியல் ஆதாயம் உண்டு. வியாபார லாபம் உண்டு. விசேஷ பலன்கள் உண்டு. சொந்த தொழில் அமையும். தொலைத்தூர பயணம் லாபம் தரும். துன்பம் விலகும் காலம். மனைவி மக்களால் மகிழ்ச்சி ததும்பும். தீய எண்ணம் விலகும். அரசு பணியில் மாற்றம் வரும். நிதி நிலைமை சீராகும். மற்றோரின் வாழ்த்துக் கிடைக்கும். புத்தாடை ஆபரணம் சேரும். அனுகூலமான போக்கு நிலவி வரும். கடனால் பிரச்சனை வரும். ஏற்றுமதி தொழில் லாபம் தரும். மனதெளிவு கிட்டும். கலைத்தொழில் உயர்வு பெறும். வம்புதும்புகள் ஒழியும். புதிய சொத்துக்கள் சேரும். காரியம் கைக்கூடும். கலைஞர்களுக்கு வாய்ப்பு பெருகும். விளைச்சல் அதிகமாகும். வெளியூர் பயணம் லாபம் தரும். அந்தஸ்து கூடும். அடுத்த நபரால் தொல்லை உண்டு. எதிலும் நிதானம் தேவை. புத்தாடை சேர்க்கையுண்டு. புதிய தொழில் வாய்ப்பு உண்டு. நிலையான சந்தோஷம் உண்டு. அரசு உதவிள் கிடைக்கும். கூட்டுத்தொழிலில் பிரிவு ஏற்படும். அனுகூலமற்ற சூழ்நிலைகள் உருவாகும். காதலில் கண்ணியம் கூடும். பெரியோர்களிடம் விரோதம் ஏற்படும். நெருக்கடிகள் நீங்கும். கல்வியில் மேன்மை கிட்டும். அடிப்படை தேவைகள் பூர்த்தியாகும். தொழில் சிக்கல் மறையும். நிம்மதி பெருகும். இனிய செய்தியால் மனம் மகிழும். இடமாற்றம் தடைப்படும். கமிஷன் தொழில் லாபம் தரும். ஏற்றுமதி தொழிலில் கவனம் தேவை. எதிரிகள் பலம் குறையும்.
வழிபட வேண்டிய தெய்வம்: சித்ரகுப்தர், அதிர்ஷ்ட எண்: 8,4,3,1
அதிர்ஷ்ட நிறம்: சில்வர் கிரே, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: T,P

# அனுரவுக்கு வாழ்த்துகள். மலையக, ஈழத்தமிழ் மக்களுக்கு இனி இந்நாட்டில் அனுதாபம் வேண்டாம். நியாயம்தான் வேண்டும்.

## பொறுப்புடன் ஒத்துழைப்பு வழங்குவோம் ஊடக சந்திப்பில் மனோ கணேசன்

தமிழ் முற்போக்கு கூட்டணி - இலங்கை
දමිළ ප්‍රගතිශීලී සංධානය - ශ්‍රී ලංකාව
Tamil Progressive Alliance - SriLanka

வெற்றி பெற்று பதவி ஏற்றுள்ள நண்பர் ஜனாதிபதி அனுர குமார திசாநாயகவுக்கு எனது மனப்பூர்வமான வாழ்த்துக்கள். அரசியல் குரோதங்கள், கட்சி வேறுபாடுகள் இன்றி பொறுப்புள்ள ஐக்கிய மக்கள் கூட்டணியாக, தமிழ் முற்போக்கு கூட்டணியாக நாம் செயற்படுவோம். நீங்கள் உறுதி அளித்த, உயிர்த்த ஞாயிறு படுகொலை சூத்திரதாரிகளை கண்டறிந்து தண்டனை வழங்குவது, ஊழல் ஒழிப்பு, வெளிநாடுகளில் பதுக்கி வைக்கப்பட்டுள்ள நாட்டின் சொத்துகளை மீட்பது, மத்திய வங்கி பிணை முறி கொள்ளையரை தண்டிப்பது, சிவராம், நடேசன், எகனிலியகொட, லசந்த உட்பட ஊடகவியலாளர் கொலைதாரிகளை கண்டறிந்து தண்டனை வழங்குவது ஆகிய அனைத்து நடவடிக்கைகளுக்கும் நாம் இரு கரங்களை உயர்த்தி ஆதரவு வழங்குவோம்.

ஜனாதிபதி அனுர சகோதரரே, தமிழ் மக்களுக்கு, குறிப்பாக மலையக தமிழருக்கும், ஈழத்தமிழருக்கும் இனிமேல் இந்நாட்டில் அனுதாபம் வேண்டாம். எமக்கு நியாயம்தான் வேண்டும் என தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன், இன்று ஐக்கிய மக்கள் கூட்டணி மத்திய நிலையத்தில் நடை பெற்ற ஊடக சந்திப்பில் கூறினார்.

ரஞ்சித் மத்தும்பண்டார, டல்லஸ் அலஹபெரும, சம்பிக்க ரணவக்க, தயாசிறி ஜயசேகர, கபீர் ஹசிம், நிசாம் காரியப்பர் ஆகியோர் கலந்து கொண்ட ஊடக சந்திப்பில் மனோ கணேசன் மேலும் கூறியதாவது;

மலையக தமிழர்:

இந்நாட்டில் 200 வருடங்கள் வாழ்ந்து விட்ட மலையக பெருந்தோட்ட மக்களுக்கு ஒரு அங்குலம் நிலம்கூட இல்லை என அனுதாபப்பட்டு நீங்கள் தேர்தலுக்கு முன் பேசிய ஊடக காணொளியை கண்டேன். மலையக மக்களுக்கு வீடு கட்டி கொள்ளவும், வாழ்வாதார தேவைகளுக்காகவும் காணி வழங்குங்கள். காணி உரிமை வழங்கி அவர்களை இலங்கை தேசிய நீரோட்டத்துக்குள் கொண்டு வாருங்கள். உங்கள் “சிஸ்டம் சேஞ்” என்ற முறை மாற்றத்தை பெருந்தோட்ட துறையில் ஆரம்பித்து, நமது மக்களை பெருந்தோட்ட தொழிலில் பங்காளி ஆக்குங்கள்.

ஈழத்தமிழர்:

வடக்கு கிழக்கு ஈழத்தமிழ் சகோதரர்கள் பற்றியும் நீங்களும், உங்கள் கட்சியாளர்களும் அனுதாபப்பட்டு பேசி உள்ளதை கண்ணுற்றேன். ஆகவே அரசியல் கைதிகளை விடுவியுங்கள். இப்போதுதான் யுத்தம் இல்லையே? ஆகவே விடுக்கப்படாத அனைத்து தனியார் காணிகளையும் உடன் விடுவியுங்கள். காணாமல் போனார் பற்றி பேசி உள்ளீர்கள். அவர்களின் குடும்பத்தவருக்கு நியாயம் வழங்குங்கள். உடனடியாக அங்கே மாகாணசபை தேர்தல்களை நடத்துங்கள். மாகாணசபை தேர்தல்களை நடத்தும்படி ரணில் விக்கிரமசிங்கவிடம் கேட்டு, கேட்டு நான் அலுத்தே போய் விட்டேன்.

ஆகவே, ஜனாதிபதி அனுர சகோதரரே, தமிழ் மக்களுக்கு, குறிப்பாக மலையக தமிழருக்கும், ஈழத்தமிழருக்கும் இனிமேல் இந்நாட்டில் அனுதாபம் வேண்டாம். எமக்கு நியாயம்தான் வேண்டும்.

வவுனியா மிரட்டல் சம்பவம்:

நடைபெற்ற சர்வதேச குழந்தைகள் தினத்தன்று, வவுனியாவில் ஜனநாயக ஆர்ப்பாட்டம் செய்து கொண்டிருந்த வலிந்து காணாமல் போன உறவு தாய்மார்களை, “தான் அனுரவின் ஆள்” என்று கூறி ஒரு காடையர் மிரட்டி உள்ளார். “இனிமேல் இத்தகைய ஆர்ப்பாட்டங்களை செய்ய விட மாட்டோம்” எனவும் கூறி உள்ளார். இதை கூறி நான் அரசியல் நோக்கில் உங்களை ஒருபோதும் குற்றம் சாட்டவில்லை. ஆனால், உங்கள் பெயரை பகிரங்கமாக பயன்படுத்தி, பெண்களை மிரட்டி, பயமுறுத்தியுள்ள இந்த நபரை உனடியாக கைது செய்யுங்கள்.

சட்ட திருத்தங்கள்:

திருடர்களை பிடிக்க, கைது செய்ய, புதிய சட்டங்கள் கொண்டு வர, இருக்கும் சட்டங்களை திருத்த, வெளிநாட்டுக்கு தப்பி ஓடியவர்களை மீண்டும் இந்நாட்டுக்கு கொண்டு வர, அவ்வவ் நாடுகளுடன் உடன்படிக்கைகள் செய்ய நாம் உங்களுக்கு ஒத்துழைப்பு வழங்க தயாராக உள்ளோம்.

ஜனாதிபதி முறைமை:

நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை ஒழிப்போம். பாராளுமன்றத்துக்கு பதில் சொல்லும் நிறைவேற்று ஜனாதிபதியா அல்லது முழுமையாக இதை ஒழிப்பதா என அது பற்றி அமர்ந்து பேசுவோம். அதற்கும் முழு அதரவு தருவோம்.

சர்வதேச நாணய நிதி:

இன்று உங்கள் ஆலோசகர்கள் இருவரும், மத்திய வங்கி ஆளுனரும், நிதி அமைச்சு செயலாளரும் சர்வதேச நாணய நிதியுடன் பேச போகிறார்கள். நல்ல விடயம். நாட்டின் நிதி நிலைமை உடைந்து நொறுங்கிய அன்று, நாம்தான் சர்வதேச நாணய நிதியிடம் செல்ல வேண்டும் என்று முதன் முதலில் பாராளுமன்றத்தில் கூறினோம். அப்போது பிற்காலத்தில் ரணிலுடன் இருந்த மொட்டு கட்சியினர் எம்மை எதிர்த்து கூச்சல் எழுப்பினார்கள். அது உங்களுக்கு தெரியும். இன்று சர்வதேச நாணய நிதியுடன் நீங்கள் பேசுகிறீர்கள். வரவேற்கிறோம். இது தொடர்பில் உங்களுக்கு முழு ஒத்துழைப்பு வழங்கவும் நாம் தயாராக உள்ளோம்.


பாராளுமன்ற தேர்தல்:

வாக்கு எண்ணிகையில் அதிகம் பெற்றதால் நண்பர் அனுர குமார திசாநாயக்க ஜனாதிபதி ஆகியுள்ளார். இரண்டாம் இடத்துக்கு சஜித் வந்துள்ளார். ஆனால் நண்பர் அனுர குமார திசாநாயக்க 50 விகிதம் வாக்குகள் பெறவில்லை. ஆகவேதான் மூன்றாம் இடத்தை பெற்றவர் முதல் அனைவரது வாக்கு சீட்டுகளிலும் இருந்த இரண்டாம், மூன்றாம் வாக்குகள் எண்ண பட்டன.

ஆகவே மூன்றாம் இடம் பெற்ற சிலிண்டருக்கு, இனி அரசியல் ரீதியாக இடம் இல்லை. எதிர் கட்சியான சிலின்டருக்கு வாக்களித்தவர்கள், எதிர்வரும் பாராளுமன்ற தேர்தலில் எமக்கு வாக்களிக்க வேண்டும். நாம் பொறுப்புள்ள பாராளுமன்ற அரசாங்கமாக செயற்படுவோம். நாடு இன்னமும் வாங்குரோத்து நிலையில்தான் இருக்கிறது. மொத்த கடன் தொகை கூடி உள்ளது. மொத்த வட்டி தொகையும் கூடி உள்ளது. ஆகவே நாம் அனைவரும் சேர்ந்து நாட்டை கட்டி எழுப்ப வேண்டும். நாம் பொறுப்புடன் கூட்டாக நாட்டை கட்டி எழுப்புவோம்.

# Nathaswara Thavil Music Of Global Inc.
# நாதஸ்வர தவில் இசை சர்வதேச அமைப்பு

27th ANNIVERSARY




இடம் :
TAMIL ISAI KALAMANDRAM
1120, Tapscott Rd, Unit, #3,
Scarborouch ON, M1Y 1E8
காலம் : Oct-19-2024 சனிக்கிழமை
நேரம் : மாலை. 4.30 மணிக்கு ஆரம்பம்
**அனுமதி இலவசம்**

நாட்டிய வேதா இந்திய கிளாசிக்கல் டான்ஸ் ஸ்ரீமதி ஜெயா பத்மினி ஆனந் அவர்களின் மாணவிகள் வழங்கும் பரதநாட்டியம்.

சக்தி சங்கீத அகடமி ஸ்தாபகர் சங்கீத வித்தகி திருமதி பராசக்தி விநாயகதேவராஜா அவர்களின் மாணவ மாணவிகள் வழங்கும் இன்னிசை

ஏழிசை மதுரசபா ஸ்தாபகர் வீணை வித்துசி திருமதி கல்யாணி சுதர்சன் அவர்களின் மாணவிகள் வழங்கும் வீணை இசை.







நாதஸ்வர தவில் இசை சர்வதேச அமைப்பு 27வது வருட விழாவை கொண்டாட இருக்கிறது இவ்வருடம் அக்டோபர் மாதம் 19ஆம் தேதி நடைபெறுகிறது. விழாவை சிறப்பிக்க இந்தியாவில் இருந்து சிறப்பு வருகை தருகிறார்கள். தவில் வித்வான் கலைமாமணி திருப்புன்கூர் T.G. முத்துகுமாரசுவாமி அவர்களும் நாதஸ்வர வித்வான் அளவையூர் கலாநிதி R. கேதீஸ்வரன் அவர்களும் அத்துடன் Toronto, Montreal ஆலயங்களில் இருக்கும் நாதஸ்வர தவில் வித்வான்களும் மற்றும் Toronto, Montreal நாதஸ்வர தவில் வித்வான்களும் இணைந்து மங்கள இசையை சிறப்பிக்க உள்ளார்கள் அத்துடன் வளர்ந்துவரும் இசைக் கலைஞர்களின் பாட்டு, வயலின், மிருதங்கம், வீணை, பரதநாட்டியம் ஆகிய நிகழ்வுகளும் நடைபெறவுள்ளது. அனைத்து குருமார்கள் நாதஸ்வர தவில் கலைஞர்கள் மற்றும் ரசிக பெருமக்கள் அனைவரையும் வருக வருக என நாதஸ்வர தவில் இசை சர்வதேச அமைப்பு வரவேற்கிறது.









**விபரங்களுக்கு: நாதஸ்வர தவில் இசை சர்வதேச அமைப்பு**
DR. ஆ. முருகதாஸ் Tel:416-420-1309 / 289-660-3850
Email: ntm97@yahoo.com web:www.nathaswarathavil.org

ANALAI EXPRESS
Analaiexpress TV
Analaiexpress Facebook

Design and Print By Designs 2 Print @ Majestic City : Prabagar - 647.858.2290 / 416 292 4999 / www.designs2prints.com




## நாடக அனுசரணை வழங்குவோர்கள்

| முற்பகல் செய்யில் | தவிப்பு | சகுனியின் சபதம் | தில்லாலங்கடி | சிதம்பர சக்கரம் |
|---|---|---|---|---|
| K T GROUP | CORNWALL SHIVAN TEMPLE - CANADA | | Vijaya Jewellery | JEYA JEYAKANTHAN |






மொன்றியல் நகரில்
UTHAYAN உதயன்
விளம்பரங்கள், மரண அறிவித்தல்கள், பிறந்ததின வாழ்த்துக்கள், உள்ளூர்ச் செய்திகள் மற்றும் அறிவித்தல்களைக் கையளிக்க நாடுங்கள்.
FRUITS HABY
பலமையான மரக்கறி வகைகள் மற்றும் பழவகைகளுக்கு மொன்றியலில் புகழ்பெற்ற தமிழர் ஸ்தாபனம்
5925 Victoria
Montreal, QC
H3W 2R9
514-342-4229
514-865-0519

இவ்விடத்தில் விளம்பரம்
செய்ய எங்களுடன்
தொட்பு கொள்ளவும்.

Keith Sanmugathas
Broker
Sun Sanmugathas
Broker of Record
PROPERTY MAX
HIGHER ACHIEVEMENTS
Realty Inc. Brokerage
SANMUGATHAS TEAM
6888 14th Ave Markham, On L6B 1A8
Office: 416-291-3000
416-666-9464 416-291-0005
www.iselldreamcondos.ca www.iselldreamhomes.ca

26ம் ஆண்டில்...
26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
# உதயன்

உதயம் 1487 | CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM | Friday October 4, 2024

## கனடிய தயாரிப்பான "ஆக்குவாய் காப்பாய்!" முதன்மைக் காட்சி அரங்கு நிறைந்த ரசிகர்களுடன் வெற்றியை தட்டிச் சென்றது



கடந்த செப்டெம்பர் 28ம் திகதி ஞாயிற்றுக்கிழமை யோர்க் சினிமாவில் திரையிடப்பட்ட கனடிய தயாரிப்பான "ஆக்குவாய் காப்பாய்!"திரைப்படத்தின் முதன்மைக் காட்சி அரங்கு நிறைந்த ரசிகர்களுடன் வெற்றியை ஈட்டித் தந்தது என்றே கூறவேண்டும்.

திரையரங்கில் ஆசனங்கள் கிடைக்காமல் திரைப்பட ரசிகர்கள் கால்கடுக்க நின்றவண்ணம் "ஆக்குவாய் காப்பாய்!" திரைப்படத்தை கண்டு களித்தும் பாராட்டியும் சென்றனர். இங்கே காணப்படும் படங்களில் திரைப்படத்தின் இயக்குனரும் தயாரிப்பாளருமான மதிவாசன் அவர்கள் வர்த்தக நண்பர்கள் மற்றும் ஊடக நண்பர்கள் சகிதம் நிற்பதைக் காணலாம்

ஆக்குவாய் காப்பாய் திரைப்படத்தின் அடுத்த காட்சி எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 27ம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.00 காட்சியாக ஸ்காபுறோ வுட்சைட் சினிமாவில் காண்பிக்கப்படவுள்ளது.. (ரிக்கட்களுக்கு 416 843 8424)

## கனடாவில் வருடாந்தம் நடைபெற்று வரும் 'சந்தியாராகம்' பாடல் போட்டியின் 2024 வெற்றியாளர்கள்

கனடாவில் வாழ்ந்து வரும் தமிழ் பேசும் மூத்தோரில் பாடும் திறமையுள்ளவர்களுக்கு சந்தர்ப்பத்தை வழங்கி அவர்களிலிருந்து தெரிவு செய்யப்பெறும் வெற்றியாளர்களுக்கு பெறுமதி வாய்ந்த பரிசுகளை வழங்கும் விழாவை அதன் ஏற்பாட்டாளர் "விலா கருணா மூத்தோர் பராமரிப்பு இல்லம்" நிறுவனர் இந்திராணி நாகேந்திரம் அவர்கள் நடத்திவருகின்றார்.

தொடர்ச்சியாக வருடாந்தம் நடைபெற்று வரும் இந்த "சந்தியாராகம்" பாடல் போட்டி நிகழ்ச்சின் இவ்வருடத்தின் வெற்றியாளர்களை தேர்ந்தெடுக்கும் இறுதிப் போட்டி கடந்த 28-09-2024 ஞாயிற்றுக்கிழமையன்று ஸ்காபுறோ நகரில் சிறப்பாக நடைபெற்றது.



## தமிழ் கனேடியர்களுக்கு எதிரான இலங்கையின் தலையீடு குறித்து 'தமிழர்களுக்கான உரிமைகள் குழு' பரிந்துரைகளை வழங்கியது

tamil rights group

கனடா ஒட்டாவா மாநகரில் உள்ள குழசநபைெ ஐெவநசகநசநஉந ஊழஅஅளைளழைெ அமைப்பின் ஆணையாளருடனான தனிப்பட்ட சந்திப்புகளுக்குப் பிறகு, கனடா-தமிழ் உரிமைகள் குழு (டி.ஆர்.ஜி) வெளிநாட்டு குறுக்கீடு ஆணையத்தில் இருந்து உத்தியோகபூர்வ நிலைப்பாடு வழங்கப்பட்டது மற்றும் பிற புலம்பெயர் அமைப்புகளுடன் ஒரு முக்கியமான பொது ஆலோசனைக் குழுவில் பங்கேற்றது. கனடாவில் புலம்பெயர் சமூகங்களின் விவகாரங்களில் வெளிநாட்டு தலையீட்டின் தாக்கத்தை இந்த குழு மேற்படி ஆணையாளருக்கு எடுத்துரைத்தது. மற்றும் இந்த சவால்களை கனடா எவ்வாறு திறம்பட எதிர்த்துப் போராட முடியும் என்பது குறித்த தகவலறிந்த நுண்ணறிவுகளையும் வழங்கியது.

தொடர்ச்சி 25ம் பக்கம்



## ரணிலின் உறவினர் என நம்பப்படுபவரால் பூநகரியில் மண் அகழ்வதற்கு மேற்கொண்ட முயற்சிக்குத் 'ஆப்பு'

கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரிப் பிரதேச செயலாளர் பிரிவில் பரமன்கிராய் பகுதியில் 130 ஏக்கர் நிலத்தில் 02-10-2024 அன்றுமுதல் முன்னாள் ஜனாதிபதி ரணிலின் உறவினர் என நம்ப்பப்படுபவரின் பெயரில் உள்ள நிறுவனத்திற்கு மணல் அகழப்பட மேற்கொண்ட முயற்சி மாவட்ட மற்றும் மாகாண அரச திணைக்களங்களால் இடை நிறுத்தப் பரிந்துரைத்துள்ளனர்.

பூநகரி பரமன்கிராயில் காணிச் சீர்திருத்த ஆணைக் குழுவின் ஆளுகையில் உள்ள நிலத்திலேயே இவ்வாறு மணல் அகழ்வதற்காக அன்றைய தினம் கனரக வாகனங்கள் சகிதம் அப்பகுதிக்கு வருகைதந்தபோது அங்கே சகல தரப்பினரும் ஆய்வில் ஈடுபட்டனர்.

தொடர்ச்சி 20ம் பக்கம்

## ஈழத்தமிழர்களின் அரசியல் அபிலாசைகளை கரிசனையோடு அணுகுங்கள் என ஜனாதிபதியிடம் சிறீதரன் சிவஞானம் கோரிக்கை.

ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க அவர்களுக்கும் யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனுக்கும் இடையிலான சந்திப்பு ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்றுள்ளது.

குறித்த சந்திப்பின் போது, இலங்கையின் 9வது ஜனாதிபதியாக பொறுப்பேற்றுள்ள ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கவுக்கு வாழ்த்துரைத்த சிறீதரன், ஈழத்தமிழ் மக்களின் எதிர்பார்ப்பையும் நிலைப்பாட்டையும் பிரதிபலிக்கும் எழுத்துமூல கோரிக்கைக் கடிதம் ஒன்றையும் ஜனாதிபதியிடம் நேரில் கையளித்துள்ளார்.

தொடர்ச்சி 19ம் பக்கம்

